



# நகர்ப்புற வறுமையை அளவிடுவதில் இலங்கை வறுமைக்கோட்டின் பொருத்தப்பாடு: கொழும்பிலான சம்பவக் கற்கை


கீதா மாயாதுன்னே

குலசபாநாதன் ரொமேஷன்



செயற்பாட்டு கட்டுரைத் தொடர் இல. 19 - 2013



cepa

centre for poverty analysis

# நகர்ப்புற வறுமையை அளவிடுவதில் இலங்கை வறுமைக்கோட்டின் பொருத்தப்பாடு: கொழும்பிலான சம்பவக் கற்கை

**கீதா மாயாதுன்னே**

**குலசபாநாதன் ரொமேஷன்**

**ஏப்ரில் 2013**

செயற்பாட்டு கட்டுரைத் தொடர் இல. 19 - 2013

முதற் பிரசுரம் - 2013

ISBN 978-955-1040-63-5

இலங்கை தேசிய நூலகம் - பிரசுரமாகும் தரவுகளை அட்டவணைப்படுத்தல்

ரொமேஷன், குலசபாநாதன்

நகர்ப்புற வறுமையை அளவிடுவதில் இலங்கை வறுமைக்கோட்டின் பொருத்தப்பாடு: கொழும்பிலான சம்பவக் கற்கை/ குலசபாநாதன் ரொமேஷன் – கொழும்பு: வறுமை ஆய்வு மையம், 2013.

ப. 62 ; செமீ. 29

ISBN: 978-955-1040-63-5

i. 362.57095493 டிவி 23 ii. தலைப்பு
iii. வறுமை

இப்பிரசுரத்தின் பதிப்புரிமை இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையத்திற்கு சொந்தமானது. இப்புத்தகத்தின் எந்தவொரு பகுதியும் எழுத்தாளர் அல்லது பிரசுரிப்பாளரின் உரிய அங்கீகாரத்துடன் மீளஉருவாக்கப்படலாம்.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பிரசுரத் தொடர்கள் தற்போது ஆய்வு கற்கைகள், திருத்தப்பட்ட புத்தக பதிப்புகள், செயற்பாட்டு கட்டுரைகள் மற்றும் சுருக்க கட்டுரைகளை உள்ளடக்குகின்றது. இவ்வாய்வு கற்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பொருள் விளக்கங்களும் முடிவுகளும் தனிப்பட்ட எழுத்தாளர்களையே சாரும் என்பதுடன் கட்டாயமாக வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் அல்லது இப்பிரசுரத்திற்கு ஆதரவளிப்போரது நோக்குகளையோ அல்லது கொள்கைகளையோ பிரதிபலிக்க வேண்டியதில்லை.

இப்பிரசுரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள புகைப்படங்கள் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பணிபுரிவோர் குழாமினை சார்ந்ததாகும்.

இப்பிரசுரம் தொடர்பான சகல விசாரணைகளுக்கும்:
வறுமை ஆராய்ச்சி நிலையம்
29 கிறகரி வீதி, கொழும்பு 7,
இலங்கை.
தொலைபேசி: +94 (011) 4690200, 2676 955-8,
தொலைநகல்: +94 (011) 2676 959
மின்னஞ்சல்: info@cepa.lk
இணையதளம்: www.cepa.lk

**எழுத்தாளர்களைப் பற்றி**

கீதா மாயாதுன்னே இலங்கை, வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தவராவார். இவர் அதன் வறுமை மதிப்பீட்டு மற்றும் அளவீட்டுக் குழுவில் உள்ளவராவார். இவர் விவசாய பொருளாதாரத்தில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுள்ளதுடன் தனது முதுமாணிப் பட்டத்தினை பிரயோக புள்ளி விபரவியல் மற்றும் பொருளாதார கணித புள்ளியியல் துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் அபிவிருத்திக் கொள்கைப் பகுப்பாய்வில் அரச துறையில் பதினைந்து வருடங்களுக்கும் மேலான அனுபவத்தை கொண்டுள்ளதுடன் தனது ஆரம்ப தொழில் காலங்களில் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் ஒரு புள்ளிவிபரவியலாளராகவும் பணி புரிந்துள்ளார்.

குலசபாநாதன் ரொமேஷன் இலங்கை, வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒரு சிரேஷ்ட ஆராய்ச்சி உத்தியோகத்தராக உள்ளதுடன் வறுமை மதிப்பீடு மற்றும் அளவீட்டு குழுவிற்கு தலைமை தாங்குகின்றார். இவர் நிதி பொருளாதாரத்தில் தனது முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றுள்ளதுடன் கலாநிதிப் பட்டத்திற்காக படித்துக் கொண்டிருப்பவராவார். இவர் அரச துறையிலும் ஒரு நிதி அமைப்பிலும் உட்கட்டமைப்பு, நிதி மற்றும் தனியார் துறை அபிவிருத்தி தொடர்பான விடயங்களில் பணியாற்றியுள்ளார்.

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (CEPA) வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வினை கூட்டுகின்ற ஒரு சுதந்திரமான, இலங்கைச் சிந்தனை தாங்கியாகும். CEPA வறுமை என்பது முறியடிக்கப்பட வேண்டிய ஒரு அநீதி என நம்புகின்றது என்பதுடன் வறுமையை எதிர்கொள்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதே போல் வறுமையில் வாழும் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என நம்புகின்றது. வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் குறிக்கோள் இலங்கை மற்றும் பிராந்தியத்தில் கொள்கைகளை சீரமைத்து வறுமையில் சுதந்திரமான பகுப்பாய்வினை வழங்கும் ஒரு தலையாய அமைப்பாக இயங்குவதாகும். இறுதியாக வறுமை தொடர்பான அபிவிருத்தி கொள்கைகளில் செல்வாக்கு செலுத்துவதற்கு தனது பங்களிப்பை தரும் நாட்டத்துடன் செயற்படுகின்றது.

**நன்றி நவிலல்**

இலங்கையில் நகர்ப்புற வறுமை அளவீட்டினை ஆராயவும் ஒரு பல்-பரிமாணநோக்கிலிருந்து பகுத்தாயவும் வாய்ப்புத் தந்தமைக்காக, அதேபோல் பெறுமதிமிக்க விமர்சனங்களை வழங்கியமைக்காகவும், இலண்டன் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனத்தின் டேவிட் சட்டேத்வய்ட் இற்கு மிகவும் நன்றி தெரிவிக்கின்றனர். மேலும் இவ்வாய்வுகட்டுரையினை அதன் மூல ஆங்கிலவடிவில் டிசெம்பர் 2011இல் பிரசுரிப்பதற்கும் நாம் இலண்டன் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச நிறுவனத்திற்கு நன்றி பகர்கின்றோம்.

மேலும் வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் எமது சக உத்தியோகத்தர்களான அஸ்ரா அப்துல் காதர் மற்றும் நிலக்சி டி சில்வாவிற்கும் எமது நன்றிகளை தெரிவிக்கின்றோம். இறுதி அறிக்கையை தயாரிப்பதில் அவர்களது விமர்சனங்கள் எமக்கு பெரிதும் உதவியாக அமைந்தன. எமது கள செயற்பாடுகளில் உதவிய கீதா ஹர்சனி இற்கும் எமது நன்றிகள்.

இவ்வாய்வு கட்டுரையை முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிற்கு மொழிமாற்றம் செய்து உதவிய திரு. எச். எம். யு. சூலரத்ன மற்றும் திருமதி நஸ்ரியா நாளிர் அவர்களிற்கும் எமது நன்றிகள். இன்னும் இச்செயற்பாட்டு கட்டுரைகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிற்கு மொழிமாற்றம் செய்து அவற்றை பிரசுரிப்பதற்கு நிதியுதவி வழங்கிய ஆசிய அமைப்பிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துகொள்கின்றோம்.

**தலைப்பெழுத்து சொற்களும் சுருக்க குறியீடுகளும்**

| | | |
|---|---|---|
| CBN | - | அடிப்படை தேவைகளிற்கான செலவு |
| DCS | - | குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்கள் திணைக்களம் |
| DFID | - | சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (ஐரோப்பிய இராச்சியம்) |
| DSL | - | பிரதேச செயலாளர் மாவட்டம் |
| FEI | - | உணவு - சக்தி உள்ளெடுத்தல் |
| GND | - | கிராம சேவகர் பிரிவு |
| HCI | - | தலைக்கணிப்பு சார் வறுமை சுட்டி |
| HIES | - | குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீடு |
| OPL | - | அதிகார பூர்வ வறுமை கோடு |
| PCA | - | பிரதான விடய பகுப்பாய்வு |
| PL1 | - | முதலாம் வறுமை கோடு |
| PL2 | - | இரண்டாம் வறுமை கோடு |
| PL3 | - | மூன்றாம் வறுமை கோடு |
| UBNI | - | திருப்தியடையாத அடிப்படைத் தேவைகள் சுட்டி |
| UNDP | - | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் |
| USS | - | போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றம் |

**உள்ளடக்கம்**


சுருக்கம் 1

1. அறிமுகம் 5

2. வறுமையை அளவிடல் 9

2.1 இலங்கையில் வறுமையை அளவிடல் 10

2.1.1. வறுமை அளவீட்டில் நிதிசார் அணுகுமுறைகள் 11

2.1.2. போசணை உள்ளெடுத்தல் மற்றும் மாறுபாடுகளின் அடிப்படையில் வறுமைக் கோடுகள் 11

2.1.3. அடிப்படைத் தேவைகளிலான செலவு மற்றும் மாறுபாடுகளின் அடிப்படையில் வறுமைக் கோடுகள் 12

2.1.4. இலங்கை வறுமை அளவீடு தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள கேள்விகள் 13

2.1.5. விளைவுகள் 15

2.2 வறுமையின் பல்பரிமாணத் தன்மை 16

2.2.1. வறுமையை அளவிடுவதற்கான செய்தகுதி சார் அணுகுமுறை 16

2.2.2. அடிப்படைத் தேவைகள் பரிமாணம் 16

2.2.3. சமூக நீக்கப் பரிமாணம் 18

2.2.4. சமுதாய பரிமாணம் 18

3. இலங்கையில் நகர்ப்புற வறுமை 21

3.1. நகர்ப்புறத்திற்கான முகக்குறிப்பு 21

3.2. நகர்ப்புறத்தில் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வறுமை 24

4. பல்பரிமாண சூழ்நிலையில் நகர்ப்புற வறுமையை அளத்தல் 27

4.1. செய்முறை 27

4.1.1. அடிப்படைத் தேவைகளிலான காட்டிகள் 27

4.1.2. ஒரு-பரிமாண சுட்டியின் பிரயோகம் 34

4.1.3. எண்ணும் முறையின் பிரயோகம் 35

4.1.4. கணிப்பீட்டாய்வுக்கான மாதிரி மற்றும் தரவுகள் 35

4.2. பகுப்பாய்வு 36

4.2.1. தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களிற்கான முகக்குறிப்பு 36

4.2.2. ஒரு- பரிமாண சுட்டியின் அடிப்படையில் வறுமை நிகழ்வு 41

4.2.3. எண்ணும் முறையின் அடிப்படையில் வறுமை நிகழ்வு 41

5. முடிவுரை 43

பின்னிணைப்பு:

IIED நகர்ப்புற வறுமை ஆய்வு குடும்ப வினாக்கொத்து 47

உசாத்துணை நூல்கள 57

**அட்டவணைகள்**

அட்டவணை 1 : நகர்ப்புற மற்றும் கிராமிய பிரதேசங்களில் 2002 - 2009/10, வறுமை மற்றும் தலைக்குரிய உணவு சக்தி உள்ளெடுப்பு

அட்டவணை 2 : DCS (2007) திருப்திப்படுத்தப்படாத அடிப்படைத் தேவைகள் சுட்டியை

நிர்மாணிப்பதில் பயன்படுத்தப்பட்ட காட்டிகள்

அட்டவணை 3 : குடும்ப நல்வாழ்வு பண்புகளின் சுருக்கம்

அட்டவணை 4 : நகர்ப்புற மற்றும் கிராமிய வீடமைப்பு பண்புகள்

அட்டவணை 5 : நகர்ப்புற மற்றும் கிராமிய பிரிவுகளிலுள்ள வறிய மக்கள் 1990/91 – 1009/10 (சதவீதம்)

அட்டவணை 6 : அடிப்படைத் தேவைகளின் காட்டிகளை நிர்மாணிப்பதில் பயன்படுத்தப்பட்ட மாறிகளிற்கு புள்ளியிடலும் நிறுத்தலும்

அட்டவணை 7 : தேசிய நகர்ப்புற மாதாந்த குடும்ப செலவு தசகங்களினால் மாதிரி குடும்பங்களின் பரம்பல்

அட்டவணை 8 : 20 மாதிரி குடும்பங்களிற்கான இழப்பு புள்ளிகள்

அட்டவணை 9 : ஒவ்வொரு காட்டிக்குமான இழப்புற்றுள்ள மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை

அட்டவணை 10 : இழப்பின் பரிமாணங்களின் எண்ணிக்கையின் படி இழப்பினை அனுபவிக்கும் மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை

**சுருக்கம்**

**இலங்கையில் வறுமைக் கணிப்பீடுகள்**

வறுமை எவ்வாறு எண்ணக்கருப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது என்பதானது எந்தவொரு புள்ளிவிபரவியலதும் அளவு மற்றும் ஆழத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. வறுமையின் பல்-பரிமாணத் தன்மை கருத்தில் கொள்ளப்படும் போது இலங்கையில் நகர்ப்புற வறுமை குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் என இவ்வாய்வுக் கட்டுரை யோசனை தெரிவிக்கின்றது.

இலங்கையில் அரசாங்கம் உணவிற்கான குடும்ப செலவினடிப்படையில் வறுமையை வரைவிலக்கணப்படுத்தி அளவிடுகின்றது. உணவற்ற தேவைகளிற்கான ஒதுக்கீடானது தமது உணவுத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள போதுமானளவு செலவுகளை கொண்டுள்ள குடும்பங்கள் உணவற்ற தேவைகளில் செலவழிப்பதன் அடிப்படையிலானதாகும். இவ்வளவீட்டு முறை அதிகாரபூர்வ புள்ளிவிபரவியல்களில் நகர்ப்புற குடித்தொகையின் ஒரு சிறிய விகிதாசாரமே வறியவர்கள் (2009/10 இல் 5.3 சதவீதம்) என்றும் இவ்விகிதம் குறைந்து வருகின்றது எனும் கருத்தையும் முன்வைக்கின்றது. ஆனால் அதிகாரபூர்வ வறுமைக் கோடுகளில் உணவற்ற தேவைகளிற்காக அனுமதிக்கப்படுகின்ற பணப்பெறுமதி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் உணவற்ற தேவைகளில் என்ன செலவழிக்கின்றன என்பதன் அடிப்படையிலேயே அன்றி அவர்களுக்கு அவர்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள என்ன வேண்டும் என்பதிலல்ல.

'வறுமையில் வாழும்' நகர்ப்புற குடித்தொகையினரின் விகிதம் அதிகாரபூர்வ புள்ளிவிபரவியல்களில் வறியவர்கள் என குறிப்பிடப்படுகின்ற விகிதத்திலும் மிகவும் உயர்வாக இருக்கலாம் என்பது வேறு அளவீடுகளை நோக்கும் போது புலனாகிள்றது. உதாரணமாக கொழும்பின் குடித்தொகையில் ஏறத்தாழ அரைவாசி பேர் மிகவும் தரம்-குறைந்த, சனநெருக்கடியான வீடமைப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் போதியளவு வழங்கப் பெறாத பண்புகளைக் கொண்ட போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்கள் என குறிப்பிடப்படுவனவற்றிலேயே வாழ்கின்றது. 2004ஆம் ஆண்டளவில் கொழும்பின் மாநகர சபை எல்லைகளுள் அதன் ஏறத்தாழ அரைவாசி குடித்தொகையினரைக் கொண்டு 1614 போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களிருந்தன. இருந்தாலும் அதிகாரபூர்வ புள்ளிவிபரவியல்கள் கொழும்பு வாழ் குடித்தொகையின் 3.6 சதவீதம் (2009/10) மாத்திரமே வறியவர்கள் என கருத்து தெரிவிக்கின்றன.

இவ்வாய்வுக் கட்டுரை இலங்கையில் (மற்றும் பல நாடுகளில்) பிரயோகிக்கப்பட்ட அதிகாரபூர்வ வறுமைக் கோடுகளின் பல எல்லைப்படுத்தல்களை கலந்துரையாடுகின்றது. வறுமைக் கோடுகள் அடிப்படை உணவு மற்றும் உணவற்ற தேவைகள் ஒரு நிபுணர்-சார் அடிப்படையிலான தீர்மானத்தில் தங்கியுள்ளமை, இவை நிதிசார் அளவீடுகளாக உள்ளமையால் உணவு மற்றும் உணவற்ற தேவைகள் உண்மையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை அளப்பதில்லை எனும் உண்மை, (கேள்விக்குரியதாக) நிபுணத்துவம் அடிப்படையிலான தீர்மானங்கள் மூலம் பெறப்பட்ட தகைமை எல்லைகளில் தங்கியுள்ளமை, பல பரிமாணங்களில் (வீடமைப்பு மற்றும் வாழும் நிலைமைகள் உள்ளடங்களாக) இழப்பினை போதியளவு அளவிட முடியாதுள்ளமை மற்றும் நல்வாழ்வுக்கு முக்கியமான பொது வளங்களைப் புறக்கணித்து தனியார் நுகர்வில் கவனம் செலுத்துகின்றமை என்பன இங்கு உள்ளடக்கப்படுகின்றன. இம்மட்டுப்படுத்தல்களை மீறி தேசிய வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழிகாட்டுவதற்கு மற்றும் வறுமையை இலக்காகக் கொண்ட தலையீடுகளிற்கு தேவையான உத்திகளை வழங்குவதற்காக அரச அதே போல் அரச சார்பற்ற முகவர் நிலையங்களால் வறுமை கணிப்பீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாரபூர்வ வறுமைக் கோடுகளை அமைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட குடும்ப கணிப்பீட்டாய்வுகள் வீடற்ற, பொது இடங்கள், பாதைகள், அகதி முகாம்கள் மற்றும் சட்ட விரோத புகலிடங்களில்) உறங்கி வாழ்கின்ற மக்களை இணைத்துக்கொள்ள தவறியுள்ளமைக்கான சாத்தியங்களும் உள்ளன. மேலும் இலங்கையில் நகர்ப்புற பிரதேசத்தை ஆக்குகின்ற (அதன் நகர்ப்புற குடித்தொகையுடன்) அதிகாரபூர்வ வரைவிலக்கணமும் உண்மையான நகர்ப்புற குடித்தைாகையைக் குறைத்து குறிப்பிடுவதாக உள்ளது. இதுவும் நகர்ப்புற வறுமை குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் என குறிப்பிடுகின்றது.

**நகர்ப்புற வறுமையின் பல்வேறு பரிமாணங்களை மதிப்பிடல்**

மரபு ரீதியான வறுமை புள்ளிவிபரவியல்களில் அளவிடப்படாத வறுமையின் பல பரிமாணங்களைப் புரிந்து கொள்வதில் வளர்ந்து வரும் ஆவலான சூழ்நிலையில் நகர்ப்புற வறுமையின் பல்-பரிமாண கூறுகளை மதிப்பிட பயன்படுத்தக்கூடிய காட்டிகளின் வீச்சொன்றினை இவ்வாய்வுக் கட்டுரை குறிப்பிடுகின்றது. பின்னர் இது அதிகார பூர்வ வறுமைக் கோட்டின் மேல் தலைக்குரிய உணவுச் செலவினை கொண்ட கொழும்பு மாவட்டத்தின் (அதி உயர் மட்ட திருப்தியடையாத அடிப்படைத் தேவைகளைக் கொண்ட மாவட்டமொன்றில்) 20 குடும்பங்களிற்கான விஜயங்கள் மற்றும் வினாக்கொத்தினூடாக இதனை முன்னோடி செயற்பாடாக செய்கின்றது.

உள்ளடக்கப்பட்ட காட்டிகளாவன: வருமானம் (அளவு மற்றும் வருமான முதல்களின் எண்ணிக்கை), தொழில் (தொழில் செய்கின்ற வயதுவந்த அங்கத்தவர்களின் பங்கு), கல்வி (வயதுவந்தோரினது சராசரியாக கல்வி பெற்ற வருடங்கள், சிறுவர்களின் பாடசாலை ஆட்சேர்ப்பு), போசணை (பரிந்துரைக்கப்பட்ட அதிகுறைந்த மட்டங்களுடன் ஒப்பிடும் போது சக்தி உள்ளெடுப்பு), வீடமைப்பு (நில உரிமை, நெருக்கடி, வீட்டின் தரம்), கழிப்பிட வசதி (மலசலகூடம் கிடைக்கப்பெறக்கூடியதாக உள்ளமை மற்றும் வகை), நீர் (முதல் மற்றும் கிடைக்கப்பெறக் கூடிய தன்மை), பாதுகாப்பான சமையல் மற்றும் ஒளியூட்டலிற்கான சக்தி, சுகாதார பராமரிப்பினைப் பெற்றுக்கொள்ளல், இயக்கப்பாடு (வாகனம் கிடைக்கக்கூடியதாக உள்ளமை, வழி, வேலைத்தளத்தை சென்றடைய எடுக்கும் நேரம்), தொலைபேசி வசதி, சேமிப்புக்கள் அல்லது கடன்கள், பதார்த்த துஷ்பிரயோகம், மற்றும் பாதுகாப்பு. ஒவ்வொரு மாறியும் ஒரு அளவுத்திட்டத்தில் 1 (மிகவும் கூடுதளாக இழந்துள்ளமை) இலிருந்து 3 (மிகவும் குறைவாக இழந்துள்ளமை) இற்கு தரப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக நீருக்கு, 1. பாதுகாக்கப்படாத கிணறு, 2. ஒரு பாதுகாக்கப்பட்ட கிணறு, கட்டடத்தின் வெளியேயான குழாய் அல்லது குழாய் கிணறு, மற்றும் 3. கட்டடத்தினுள்ளான குழாய்.

செலவு தொடர்பாக 20 மாதிரி குடும்பங்களில் எந்தவொன்றும் ஆகத் தாழ்ந்த தேசிய தசகத்திலில்லை. மூன்றில் இரண்டானவை 2 முதல் 4ம் தசகங்களில் உள்ளன. பெரும்பாலான மாதிரி குடும்பங்களிற்கு வீடமைப்பு செலவுகள் குறைவு. 7 குடும்பங்கள் ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதுடன் எந்த கூலியும் செலுத்தவில்லை. மேலும் 11 குடும்பங்கள் சந்தை மிக குறைந்த வீத கூலிகளை செலுத்தியவர்களாக அரச தொடர்மாடிகளில் சட்டபூர்வ குடியிருப்பாளர்களாக உள்ளனர். 16 குடும்பங்கள் கடனில் உள்ளன. பாடசாலை செல்லும் வயதிலுள்ள எல்லா சிறுவர்களும் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எல்லா குடும்பங்களும் மருத்துவ சோதனைகள் மற்றும் மருந்துகளில் செலவழிப்பதில் கஷ்டங்களை தெரிவித்தாலும் சுகாதார பராமரிப்பு சேவை தேவைக்கேற்றவாறு உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எல்லா குடும்பங்களும் தமது கட்டங்களுள் குழாய் நீரைப் பெற்றுக்கொண்டிருந்ததுடன் நீர் உறையிடப்பட்ட மலசலகூட வசதிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் 30 சதவீதமானோர் மலசலகூடங்களைப் பகிர்ந்து கொண்டனர். 17 குடும்பங்கள் மின்சார வசதிகளை பெற்றிருந்தனர்.

1 இலிருந்து 3 வரையான இழப்பின் அளவுத் திட்டம் தொடர்பாக, மாதிரி குடும்பங்கள் ஒரு தகைமை எல்லைப் புள்ளியான 2 இற்கு எதிராக மதிப்பிடப்பட்டன. 20 குடும்பங்களில் 11, வருமானத்திற்கான இப்புள்ளியின் கீழ் இருந்தன. இது பிரதானமாக இவை ஒன்று அல்லது இரண்டு வருமான முதல்களை கொண்டிருந்தமையினாலாகும். 11 குடும்பங்கள் சராசரியாக வயது வந்த நபரொருவருக்கு 10 வருடங்களிலும் குறைந்த கல்வியை பெற்றவர்களாக இருந்தன. பதினைந்து குடும்பங்களிடம் எந்தவித முறையான சேமிப்புமில்லை என்பதுடன் அல்லது கடன்களைக் கொண்டிருந்தன.

எட்டு குடும்பங்கள் நிலஉரிமை, சனநெருக்கடி மற்றும் கட்டமைப்பின் தரம் என்பவை தொடர்பாக போதியளவு வீடமைப்பு வசதிகளை கொண்டிருக்கவில்லை. ஆறு குடும்பங்கள் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியாது/சில வேலைகளில் பெற்றுக்கொள்ள முடியாது இருந்தன. இழப்பின் 10 பரிமாணங்களையும் எடுக்கும் போது எல்லா குடும்பங்களிலும் குறைந்தது ஒன்றேனும் இருந்தது. 19 குடும்பங்களில் குறைந்தது 2, 16 குடும்பங்களில் குறைந்தது 3, ஐந்து குடும்பங்களில் குறைந்தது நான்கு மற்றும் 3 குடும்பங்களில் குறைந்தது 5 இருந்தன.

மாதிரியின் அளவு சிறியதாக இருப்பதனால் தலைமை-கூறு அடிப்படையிலான பகுப்பாய்வு சாத்தியமில்லை. இழப்பினது ஒரு மாற்று அளவீடாக இழப்பின் பல பரிமாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உப காட்டிகளிற்கு சமநிறை கொடுக்கப்பட்டு ஒரு கூட்டு காட்டி நிர்மாணிக்கப்பட்டது. இழப்பின் மட்டத்தை மதிப்பிடுவதற்கு சாதாரணமான அளவு பாதுகாப்பான மற்றும்

ஆரோக்கியமான வாழ்வை வாழக்கூடிய நல்வாழ்வின் அடிப்படை மட்டத்தில் ஒவ்வொரு காட்டிக்குமான இழப்பு கோட்டிற்காக வெட்டுப்புள்ளி அல்லது தகைமை எல்லை அமைக்கப்பட்டது.

எமது கண்டுபிடிப்புக்கள் ஒரு தனி-பரிமாண கூட்டு சுட்டி மற்றும் தெரிவு செய்யப்பட்ட தகைமை எல்லைகளின் அடிப்படையில் 20 மாதிரி குடும்பங்களில் ஆறு இவ்விழப்பு தகைமை எல்லையின் கீழ் உள்ளன. வேறு சொற்களில் கூறுவதாயின் அதிகாரபூர்வ வறுமைக் கோட்டினை பயன்படுத்தி யாரும் ‘வறியோர்’ என இனங்காணப்படவில்லையெனினும் இக்குடும்பங்களுள் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் பாதுகாப்பான, ஆரோக்கியமான வாழ்வொன்றை பெற்றுக்கொள்ள முடியாதளவு வறிய நிலையிலேயே உள்ளதாக இவ்வாய்வு சுட்டிக் காட்டுகின்றது.

இவ்வாய்வுக் கட்டுரை சிறியளவான மாதிரி மற்றும் பூரணப்படுத்தப்படாத அல்லது பகுதியளவு பூரணப்படுத்தப்பட்ட விடயத்துடனான வறுமையின் தெரிவு செய்யப்பட்ட பரிமாணங்களின் பட்டியல், உப-காட்டிகளின் வடிவமைப்பு மற்றும் வறுமை தகைமை எல்லைகளை அமைத்தல் உட்பட இவ்வாய்வின் எல்லைப்பாடுகளை இனங்காண்கின்றது. இருந்தாலும் நகர்ப்புற வறுமை குறைத்து கணிப்பிடப்பட்டுள்ளது என ஆய்வு கருத்து தெரிவிப்பதுடன் இன்னும் இவ்விடயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கற்கைகளிற்கு தேவையான நுட்பங்களை அடையாளம் காண்கின்றது.

## 1. அறிமுகம



இலங்கையின் நகர்ப்புற பிரதேசங்கள் மாநகரசபையிலிருந்து மற்றும் நகர சபைகளிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்கின்ற இடங்களாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன.[1] குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்கள் திணைக்களம் (DCS) இலங்கையில் நகர்ப்புற குடும்பங்களின் குடித்தொகை மொத்த குடித்தொகையின் 15 சதவீதத்திலும்[2] கூடுதலாக இருப்பதுடன் இது ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 3 சதவீதத்தினால் வளர்கின்றது என குறிப்பிடுகின்றது. அதே நேரம் இலங்கையின் குடித்தொகை ஏறத்தாழ வருடத்திற்கு ஒரு சதவீதத்தால் அதிகரிக்கின்றது. இலங்கை அரசின் தற்போதைய அபிவிருத்தி திட்டம்[3] நகர்ப்புறங்களில் வாழும் குடித்தொகையில் ஒரு அதிகரிப்பை தூரநோக்கில் காண்பதால் நிலைபேறான நகர்ப்புற அபிவிருத்தியின் தேவையையும் நகர்ப்புறங்களில் வறுமையை குறைத்து நகர்ப்புறங்களில் வாழும் வறியோர் தமது அடிப்படை வசதிகளை முன்னேற்றிக் கொள்வதற்கான தேவையையும் எடுத்துக் கூறுகின்றது.

இலங்கையின் நகர்ப்புறங்களில் வாழும் பெரும்பாலான வறியோர் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்கள் (USS) என குறிப்பிடப்படுகின்ற சேரி குடியேற்றங்களிலேயே வாழ்கின்றனர். தற்போது மாநகர சபை எல்லைக்குள் இவ்வாறான 1614 குடியேற்றங்கள் இருப்பதுடன் இது கொழும்பு வாழ் குடித்தொகையின் ஏறத்தாழ 50 வீதமாகும். கொழும்பிலுள்ள இவ்வாறான போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்கள் குடியிருப்பாளர்களிற்கு சொந்தமற்ற அரசால் அல்லது தனியார்களால் வழங்கப்பட்ட நிலங்களில் அமைக்கப்பட்ட வீடமைப்பு அலகுகளை செறிவாக கொண்டுள்ளன. இவ்வீடமைப்பு பிரதேசங்கள் பொதுவான அம்சங்களாக உயர் குடித்தொகை அடர்த்தியையும் (ஒரு ஹெக்டேயருக்கு ஏறத்தாழ 820 பேர்[4] அல்லது கொழும்பு நகரின் சராசரியிலும் நான்கு மடங்கு) மிக நெருக்கமான வீடமைப்பையும் (ஒவ்வொரு குடியிருப்பு கட்டடமும் சராசரியாக 1.5 பேச்சர்ஸை கொண்டுள்ள அதே நேரம் இது அங்கு வாழும் குடியிருப்பு வாசிகளிற்கு கிடைக்கப்பெறக்கூடிய

---

[1]DCS நகர்ப்புற பிரிவை மாநகரசபை அல்லது நகர சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற பிரதேசங்கள் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. இருந்தாலும் அமைக்கப்பட்டுள்ள சூழல் மற்றும் சமூக-பொருளாதார கட்டமைப்பின் தன்மையிலன்றி நிர்வாக எல்லைகளின் அடிப்படையிலான 'நகர்ப்புறம்' எனும் தற்போதைய வரைவிலக்கணத்தில் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றதாக கொழும்பு நகரை சூழவும் ஒரு நகரின் கீழான கூட்டு நகரமொன்றும் காணப்படுகின்றது.

[2]முன்னர் நகர சபைகளால் நிர்வகிக்கப்பட்ட ஆனால் தற்போது பிரதேச சபையின் கீழுள்ள குடித்தொகையையும் கருத்தில் கொள்கின்ற நகர்ப்புற குடித்தொகையிலான ஒரு மாற்று கணிப்பீடு உள்ளது. இவ்வரைவிலக்கணம் மொத்த குடித்தொகையின் ஏறத்தாழ 30 சதவீதத்தினரை கொண்ட நகர்ப்புற குடித்தொகையின் கணிப்பிட்டிற்கு இட்டுச்செல்கின்றது. ஆனால் 1987 இல் நகர்ப்புற வரைவிலக்கணத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற கடித்தொகை உண்மையான குடித்தொகையிலும் குறைத்த மதிப்பிடப் பட்டிருக்கக்கூடிய சாத்தியங்கள் அதிகம்.நாம் இதனை இவ்வறிக்கையின் பிரிவு 3 இல் மேலும் கலந்துரையாடுகின்றோம்.

[3]மகிந்த சிந்தனை – புதியதோர் இலங்கை – 10 வருட அடிவான அபிவிருத்தி திட்டவமைப்பு: 2006 - 2016

[4]2001 குடித்தொகை கணிப்பீடு மற்றும் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களின் நில பரப்பு மற்றும் அக்குடியேற்றங்களில் வாழும் கொழும்பு குடித்தொகையின் விகிதத்திலான தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது.

சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் சீர்கேடுகளை ஏற்படுத்தி அவற்றுக்கு போதிய வசதிகள் வழங்கப்பெறாத குடியேற்றங்கள் (USS) என்ற பெயரையும் வழங்குகின்றன.

இலங்கை அரசின் அதிகாரபூர்வ வறுமை புள்ளிவிபரவியல்கள் குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டு ஆய்வுகளின் (HIES) அடிப்படையில் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல்கள் திணைக்களத்தினால் கணிப்பிடப்படுகின்றன. இலங்கையின் மிகக் குறைந்த வறுமை வீதங்களை நகர்ப்புறப் பிரிவு கொண்டுள்ளதாக அறிக்கை கூறுகின்றது. இது இங்கு வாழும் குடித்தொகையின் 5.3 வீதத்தினர் வறுமைக் கோட்டின் கீழுள்ளதாக காட்டுவதுடன் இவ்வீதம் தேசிய வறுமை வீதமான 8.9 இலும் குறிப்பிடத்தக்களவு குறைவாக உள்ளது. கிடைக்கப்பெறக்கூடிய மிக அண்மைய தரவுகளின் படி (DCS 2011a) நகர்ப்புறம் வாழ் குடும்பமொன்றின் உணவிலான சராசரி மாதாந்த செலவு (மொத்த செலவினது) 35.4 சதவீதமாக[5] உள்ள அதே நேரம் தேசிய சராசரி சதவீதம் 42.3 ஆக உள்ளது. இருந்தாலும் நுகரப்படுகின்ற கலோரி அளவினை கருதும் போது வறுமையற்ற குடித்தொகையினருடன் ஒப்பிட நாளாந்தம் உட்கொள்ளவேண்டிய போசணை சக்தி தேவையான 2030 கிலோ கலோரியிலும் குறைந்தளவு நுகர்வோராக மிகவும் மோசமான நிலையில் நகர்ப்புற வறியோர் காணப்படுகின்றனர் (DCS 2004). மிகவும் குறைந்த தலைக் கணிப்பு சார் வறுமைச் சுட்டியான 3.6 சதவீதத்தை கொண்ட கொழும்பு மாவட்டத்திலேயே மிகவும் குறைந்த போசணை சக்தி உள்ளெடுத்தல் மட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது நகர்ப்புற பிரதேசங்களில், விசேடமாக கொழும்பில் வறுமை குறைத்து பதியப்பட்டுள்ளமையை சுட்டிக் காட்டுகின்றது.

நகர்ப்புற பிரதேசங்களில் உயர் வருமான மட்டங்கள் பதியப்பட்டாலும் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வசதிகள் வறிய நிலையிலேயே காணப்படுவதுடன் பல்வேறு குழுக்களால் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன (உதாரணம்: குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ 2004, DFID குழுவினர் 2002, ஐக்கிய நாடுகளின் வாழிடம் அமைப்பு 2009).

இக்கணிப்பீட்டு ஆய்வுகளும், ஆய்வுகளும் போதிய வசதிகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வருமானம் மற்றும் வறுமை மற்றும் சேவைகளுடன் தொடர்பான பல்வேறு கூறுகளை அளந்துள்ளது. இச்சேவைகளுள் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி, வீடமைப்பு, மின்சார வசதிகள், நீர் பெற்றுக்கொள்ளும் வழிகள், கழிப்பிட வசதிகள், திண்ம கழிவு அகற்றல், ஆரதவு சார் வசதிகள், காணி உரிமைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், நகரசபைக்கு செலுத்தும் பணவீதங்கள், சமூக மற்றும் நிதி சார்ந்த வலையமைப்புக்களின் பங்கு மற்றும் குற்றச் செயல்கள் மற்றும் போதை பொருள் துஷ்பிரயோக மட்டம் எனும் கூறுகள் உள்ளடங்குகின்றன.

இவ்வாய்வுகள் பலவற்றின் குறிக்கோள் போதிய சேவைகள் வழங்கப்பெறாத இக்குடியேற்றங்களின் வசதிகளை முன்னேற்ற வேண்டும் என்பதாக இருந்ததேயன்றி வறுமை அளவீட்டை நோக்கமாக கொண்டிருக்கவில்லை. நகர்ப்புறங்களில் வாழும் வறியோர் கிராமங்களை விடவும் உணவு மற்றும் உணவு அல்லாதவற்றிற்கு உயர் விலைகளை செலுத்த வேண்டியுள்ளனர். இவ்வாறாக நகர்ப்புறங்களில் வாழும் வறியோரால் முகம் கொடுக்கப்படுகின்ற செலவுகளினை விசேடமாக உணவு அற்றவற்றிலான செலவுகளை புரிந்துகொள்வது கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களிற்கான பதில்கள் பொருத்தமானவையா என்பதை உறுதிப்படுத்த கட்டாயமாக தேவையாகும். (சட்டேத்வைட் 2004) வறுமைக் கோட்டின் கணிப்பீட்டில் இலங்கை 'அடிப்படைத் தேவைகளிலான செலவு' எனும் அணுகுமுறையை ஏற்றுக்கொண்டுள்ளது. இலங்கையின் மேல் வறுமை கோடு (உணவு அல்லாதவற்றுடன்) கீழ் வறுமைக் கோட்டிலும் 1.2 மடங்கு உயர்வாக உள்ளது எனவும் நகர்ப்புற பிரதேசங்களிலான விலை வித்தியாசங்களிலான செலவுகளை உள்ளடக்குவதற்கு எவ்வித மேலதிக கொடுப்பனவுகளும் (allowances) செய்யப்படவில்லை என்பதையும் சட்டேத்வைட் (2004) சுட்டிக்காட்டுகின்றது. தற்போதுள்ள அளவீடுகள் மற்றும் உண்மை நிலைமையை நன்கு புரிந்து கொள்ளல் இன்னும் கூடிய தகவல்களுடனான கலந்துரையாடல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களிலான பதில்களுக்கு வழிவகுக்கும்.

இவ்வாய்வின் எமது பிரதான குறிக்கோள்கள் நகர்ப்புற வறுமை குறைத்து கணிப்பிடப்பட்டுள்ளதன் சாத்தியக்கூறுகளை வெளிக்காட்டுவதாகும். முதலில் நுகர்வு வறுமை மற்றும் பல்பரிமான வறுமையை கணிப்பிடலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயன்முறைகளிலான இலக்கிய ஆய்வொன்றினூடாக இலங்கை சூழ்நிலையில் வறுமையை அளவிடுவதால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சூத்திரங்களின் பிரயோகத்திலான

[5] இவ்வெண்ணிக்கை எல்லா நகர்ப்புற குடும்பங்களையும் குறிக்கின்றது. வருமான குழுக்களிற்கேற்ப பிரிக்கப்படவில்லை.

வரையறைகளை ஆராய்கின்றோம். இது விஷேடமாக நகர்ப்புற பிரதேசங்களில் ஆராயப்படுகின்றது. இரண்டாவதாக ஒரு பல்பரிமான சூழ்நிலையுள் இலங்கையில் நகர்ப்புற வறுமை எவ்வளவு தூரம் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என ஆராய்கின்றோம்.

இரண்டாவது குறிக்கோளினை விளக்கும் போது கொழும்பு மாநகர சபை நிர்வாக எல்லையுள், அதிகாரபூர்வ வறுமை கோட்டிற்கு சற்று மேலே உள்ள நிலைமையில் வாழ்கின்ற 20 குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறிய மாதிரியை நோக்கத்துடனேயே தெரிவு செய்து ஒரு பல்பரிமான சூழ்நிலையுள் வறுமையை ஆராய்கின்றோம். மாதிரியினளவு சிறியதாக இருப்பதானது பல் பரிமாண சூழ்நிலையில் வறுமை கோட்டினை கணிப்பிடுவதில் பல்வேறுபட்ட புள்ளிவிபரவியல் முறைகள் பிரயோகிக்கப்படுவதை பொருத்தமற்றதாக ஆக்குகின்றது. எனவே நாம் வேறு இரு முறைகளை தெரிவு செய்தோம். முதலில் வறுமையின் பல்வேறு பரிமாணங்களிலான ஒரு தனிப்பரிமாண சுட்டியை விடய நோக்கோடு தெரிவு செய்யப்பட்ட உப சுட்டிகளின் ஒரு சராசரியாக நிறுவினோம். இரண்டாவதாக பல தகைமை எல்லைகளின் பொருத்தமான இடைவெட்டுகளுடனான உப சுட்டிகளின் தொகுதியொன்றின் அடிப்படையில் குடும்பங்களை எண்ணினோம்.

நுகர்வு வறுமைக் கோடுகளில், விஷேடமாக நகர்ப்புற பிரிவில் வறுமையை அளப்பதில் அவற்றின் பொருத்தமில்லாத தன்மையில் மற்றும் விஷேடமாக பல் பரிமாண சூழ்நிலையில், காணப்படுகின்ற பல வரையறைகளை எமது இலக்கிய ஆய்வு வெளிப்படுத்தியது. குடும்பங்களின் கணிப்பீட்டு ஆய்வுகளின் அடிப்படையிலான எமது கண்டுபிடிப்புக்கள் பல்பரிமாண சூழ்நிலையுள் நகர்ப்புற வறுமையில் சில குறைத்து மதிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன என சுட்டிக்காட்டுகின்றன. இக்கற்கை, ஆய்வுத் தன்மையை கொண்டுள்ளது என்பதுடன் எதிர்காலத்தில் அதிக பிரதிநிதித்துவ மாதிரிகளின் அடிப்படையிலான கற்கைகளிற்கும் செயன்முறையான விளைவுகளை கொண்டுள்ளது.

## 2. வறுமையை அளத்தல்



இப்பகுதி வறுமைக் கணிப்பீடுகளில் விஷேடமாக நகர்ப்புற துறையில், நேரடி தாக்கங்களை கொண்டுள்ளதாக பயன்படுத்தப்பட்டுள்ள முறைகள் சார்பான கருத்துக்கள் மற்றும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்காக இலங்கையில் வறுமை அளவீட்டின் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முறைகளையும் பரிமாணங்களையும் விபரிக்கின்றது. வறுமையின் எண்ணக்கருக்களின் சார்பிலான ஒரு சுருக்கமான குறிப்பினை தொடர்ந்து நாம் இலங்கையில் வறுமையை கணிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள வரைவிலக்கணங்களையும் முறைகளையும் முன்வைக்கின்றோம். இங்கு விஷேடமாக காலத்துடன் எவ்வாறு வறுமைக்கான வரைவிலக்கணங்கள் மாறியுள்ளன எனவும், வறுமையை குறிப்பாக நகர்ப்புற வறுமைக் கணிப்பீடுகளில் இது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. பல்வேறு வரைவிலக்கணங்கள், அளவீடுகள் மற்றும் பிரச்சினைகளிலான விடயங்கள் பெருமளவில் சட்டேத்வைத் (2004) குணவர்தன (2000, 2004, 2005) மற்றும் நாணயக்கார (2006) மற்றும் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பல்வேறு பிரசுரங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

பூகோள ரீதியாக வறுமை தொடர்பாக மூன்று மாற்று எண்ணக்கருக்கள் படிப்படியாக உருவாக்கப்பட்டுள்ளன. அவை 'பிழைப்பாதாரம்', 'அடிப்படைத் தேவைகள்', மற்றும் 'சார்பு இழப்பு' என்பவற்றின் அடிப்படையிலானதாகும். வறுமையை வரைவிலக்கணப்படுத்துவதில் பிழைப்பாதார எண்ணமானது, ஒருவரின் வாழ்வாதார தேவைகளை சந்திப்பதற்கு அவரது வருமானம் போதியதாக இல்லாதிருக்கும் போது, தனது உணவு, உணவற்ற பொருட்கள் மற்றும் அடிப்படை சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளில் பங்குபற்றுவதற்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் முன்வைக்கப்படுகின்றது. ஒரு வருமான தகைமை எல்லை அல்லது 'வறுமைக் கோட்டின்' கீழான மக்கள் வறியோர் என இணங்காணப்பட்டவர்களாக உள்ளனர். வாழ்வாதார தேவைகளை இழந்திருப்பதே வருமானத்தின் தகைமை எல்லை அளவினை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படையாகும் (சம்பர்ஸ் 2006). வாழ்வாதார கருத்தினது ஒரு விரிவாக்கமான அடிப்படை தேவைகள் அணுகுமுறை மக்கள் வறியவர்களா இல்லையா என தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்ற பணமில்லாத பரிமாணங்களும் உள்ளன என்பதில் உடன்படுகின்றது. வழக்கமாக கருதப்படுகின்ற ஐந்து அடிப்படைத் தேவைகளும் உணவு, சுகாதாரம், நீர் மற்றும் கழிப்பிட வசதிகள், கல்வி மற்றும் புகலிடம் என்பனவாகும் (ADB 1985).

அண்மைய காலத்தில் செய்தகுதி அணுகுமுறையுடன் (சென் 1985, 1987, 1999) வறுமையானது தனிநபர்களின் அடிப்படை செய்தகுதிகளை இழந்திருப்பதனையே குறிப்பது என நோக்கப்படுகின்றது. இங்கு ஒரு தனிநபரின் செய்தகுதி மற்றும் தொழிற்பாட்டினை தீர்மானிக்க பயன்படும் ஒரு காரணியாகவே வருமானம் நோக்கப்படுகின்றது. செய்தகுதி அணுகுமுறை பிரதான நோக்கத்தை அடையும் வழிகளிலிருந்து (உணவு வாங்குவதற்கு வருமானம் கொண்டிருத்தல் போன்ற) முடிவுகளை (நன்கு போசணையூட்டப்பட்டிருத்தல்) நோக்கி நகர்த்தியது. இது ஒரு வருமானத்தை நல்வாழ்வாக மாற்றும் ஆற்றலை தீர்மானிப்பதில் பல காரணிகள் உள்ளதாக இனங்கண்டுள்ளது. மனித அபிவிருத்தி என்பது மக்களது தெரிவுகளை விரிவாக்கும் செயன்முறை என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. மனித வறுமையானது ஒரு நீண்ட, ஆரோக்கிய வாழ்வை கொண்டு செல்வதற்கு, அறிவாற்றலுடன் இருப்பதற்கு, போதிய பொருளாதார வழங்குதல்களைப் பெற்றிருப்பதற்கு மற்றும் தனது சமுதாயத்தில்

பூரண பங்களிப்பினை காட்டுவதற்கான பெரும்பாலான முக்கிய செய்தகுதிகளை/ஆற்றல்களை இழந்திருப்பதாகும். அபிவிருத்தி எனும் எண்ணத்தின் முக்கிய அம்சங்களாக பங்கேற்பு, மனித நல்வாழ்வு மற்றும் சுதந்திரம் என்பன அமைகின்றன (குணவர்தன 2004, 2005 இலிருந்து).

இக்கருத்துக்களிலிருந்து விளைவான வறுமையின் எண்ணக்கருக்கள் உருவாக்கல் மற்றும் அளவீடுகளில் பெருமளவு இலக்கியங்கள் காணப்படுகின்றன. இவ்விலக்கியங்களுள் ஐந்து பரந்த அணுகுமுறைகள் இனங்காணப்படலாம். அவையாவன, வருமான வறுமை அல்லது நுகர்வு வறுமை, அடிப்படை தேவைகள், இழப்பு மற்றும் செய்தகுதி இழப்பினது பல்-பரிமாண நோக்குகள், சமூக நீக்கம் மற்றும் வறியோர் மற்றும் சார்பு அளவீடுகளால் வறுமை எண்ணக்கரு உருவாக்கப்படல் என்பனவாகும்.

### 2.1 இலங்கையில் வறுமையை அளவிடல்

ஏனைய பெரும்பாலான நாடுகளைப் போல் இலங்கையிலும் வறுமை நிகழ்வுகள் மற்றும் வறுமையின் ஆழத்திலான பெரும்பாலான கணிப்பீடுகள் உணவு மற்றும் உணவற்ற நுகர்வு மற்றும் செலவின் அடிப்படையிலான வறுமை கோடுகளின் அடிப்படையிலேயே எடுக்கப்படுகின்றன. அடிப்படைத் தேவைகள் மற்றும் வறுமையின் பல்-பரிமாண கூறுகளை கவனத்தில் கொண்டு வறுமை கணிப்பிடலானது மிகக் குறைவாகும். வறுமையின் பகுப்பாய்வு வறுமையை வரைவிலக்கணப்படுத்தல் மற்றும் வறுமையை அளவிடல் எனும் இரண்டு மட்டங்களில் நடைபெறுகின்றது. வறுமையை வரைவிலக்கணப்படுத்தல் என்பது மக்களை வறியோர் அல்லது வறுமை நிலையில் அல்லாதோர் என இனங்காண்பதற்கான அடிப்படையை உருப்படுத்துவதை உள்ளடக்குகின்றது. வறுமையை அளவிடல் என்பது வறுமைக்கான வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வறுமையை ஒரு தனி புள்ளிவிபரவியலிற்கு சேர்ப்பதை குறிக்கின்றது. இவ்வாறு அளவிடப்பட்டுள்ள வறுமையின் அளவில் வறுமைக்கான வரைவிலக்கணம் நேரடி விளைவைக் கொண்டுள்ளது. இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பல முறைகள் நல்வாழ்விற்கான தெரிவு செய்யப்பட்ட சுட்டிகளில் ஒன்றிலான வெட்டுப்புள்ளி அல்லது வறுமைக் கோடு ஒன்றினை அமைப்பதன் மூலமே வறுமையை வரைவிலக்கணப்படுத்தியுள்ளன. நல்வாழ்விற்காக பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற சுட்டிகள் குடும்ப வருமானம் அல்லது நுகர்வாகும். ஆனால் இலங்கையில் தெளிவான கருத்தியல் அடிப்படை காரணமாக அதேபோல் நடைமுறைக் காரணங்களிற்காக நுகர்வே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வறுமைக்கான வரைவிலக்கணங்களின் அடிப்படையாக நுகர்வுச் செலவு பயன்படுத்தப்பட்டு தனிநபர் அல்லது குடும்ப நல்வாழ்வு மட்டங்கள் ஒப்பிடப்பட்டுள்ளன. இது பயன்பாட்டினை-உச்சப்படுத்தும் தனிநபர்கள் அல்லது குடும்பங்களால் குறித்த ஒரு நல்வாழ்வு மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காக தேவைப்படுகின்ற பணத்தினளவு நுகர்வு மட்டங்களைப் பயன்படுத்தி நல்வாழ்வு மட்டங்களை ஒப்பிட இயலுமானதாக ஆக்குகின்றது எனும் நல்வாழ்வு-பொருளாதார கருதுகோளின் அடிப்படையிலானதாகும் (க்ளெவ் 1985, ரவலியன் 1998).

நல்வாழ்விற்கான சுட்டியாக வருமானம் பயன்படுத்தப்படலானது நிரந்தர வருமான கருதுகோளிலிருந்து உருவான கருத்தியல்சார் குறைபாடுகள் காரணமாக மட்டுப்படுத்தப்படுகின்றது. ஆண்டுகளினூடாக செலவழிக்கப்படுகின்ற வருமானத்தில் மாற்றங்கள் காணப்படுகின்ற நிலையில் ஒரு குறிப்பிட்ட வருட வருமானம் காலங்களினூடாக நுகரப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளால் உருவாக்கப்படுகின்ற குடும்ப சராசரி நல்வாழ்வு மட்டத்துடன் பொருந்துவதில்லை என கருத்துரைக்கின்றது (டேடன் மற்றும் முஎல்போர் 1980, கிளெங்வா 1985 இலிருந்து). எனவே வருமானம் கூடிக் குறையும் போதும் தமது வாழ்க்கைத் தரத்தினை பேணிக்கொள்ளக்கூடியதாக ஒரு தனிநபர் அல்லது குடும்பத்தின் சிறந்ததொரு சுட்டியாக நுகர்வு கொள்ளப்படலாம். வருமானத்தை வாழ்வின் ஒரு சுட்டியாக பயன்படுத்துவதிலுள்ள நடைமுறைப் பிரச்சினை வருமானத்தை திருத்தமாக அளப்பது கடினமாக இருப்பதாலாகும். ஏனெனில் மக்கள் பல்வேறு சட்ட கடப்பாடுகள் போன்றவற்றை தவிர்ப்பதற்காக தமது வருமானத்தை சரியாக வெளிப்படுத்த விரும்பாத போக்கு காணப்படுவதுடன் குறைந்த வருமானம் பெரும் பகுதியினர் தாம் தமக்கு கிடைக்க இருக்கும் சமூக நன்மைகளை இழந்து விடுவோமோ என்ற பயத்தில் இவ்வாறான போக்கை காட்டுகின்றனர். எனவே நல்வாழ்வுடன் கூடுதலான நெருக்கமான தொடர்பை காட்டுவதாலும் திருத்தமாக அளவிடப்பட முடியுமாக இருப்பதாலும் நுகர்வுச் செலவு பெரும்பாலான நேரங்களில் பயன்படுத்தப்படுகின்றது. நுகர்வு அடிப்படையிலான நல்வாழ்வு அளவீட்டிலான பெரிய குறைபாடு பொதுச்சேவைப் பொருட்களிலிருந்து பெறப்படுகின்ற நல்வாழ்வு உள்ளடக்கப்படுவதில்லை என்பதாகும்.

### 2.1.1. வறுமை அளவீட்டிற்கான பணம் சார்ந்த அணுகுமுறைகள்

வறுமை அளவீட்டில் தனி மற்றும் சார்பளவு வறுமைக் கோடுகள் என இரு வகையான வறுமைக் கோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. சார்பளவு வறுமைக் கோடானது வருமானம் அல்லது செலவுப் பரம்பலின் இறுதி மூன்று தசகங்கள் போன்ற நல்வாழ்வு பரம்பலின் தெரிவு செய்யப்பட்ட ஒரு வெட்டுப்புள்ளி மட்டமாக வரைப்படுத்தப்படுகின்றது. தனி வறுமைக்கோடு ஒரு குறித்த நல்வாழ்வு மட்டத்தில் நிலைப்படுத்தப்பட்டதாகும். சார்பளவு வறுமை அளவீட்டு அணுகுமுறை சமூகத்தில் மற்றவர்கள் சார்பாக ஒப்பிட்டு ஒரு தனிநபர் அல்லது குடும்பத்தின் நல்வாழ்விலான இழப்பு அல்லது பற்றாக்குறை நிலையை தீர்மானிப்பதனை குறிக்கின்றது. உதாரணமாக நல்வாழ்வுப் பரம்பலின் கீழ் செலவு மட்டங்களில் உள்ளவர்களை வறியவர்களாக கருதுகின்றது. சார்பளவு வறுமைக் கோடானது நல்வாழ்வு பரம்பலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் நுகர்வுகளிற்கு ஏற்ப தானாகவே புதுப்பிக்கப்படுகின்றது. ஆனால் நல்வாழ்வுப் பரம்பலில் முன்னேற்றங்கள் காணப்படும் போதும் ஒரு வறிய மக்கள் குழு இந்து கொண்டே இருப்பதை குறிப்பிட்டு உணர்த்துகின்றது.

இலங்கையில் வறுமை நிகழ்வினை அளவிடுவதிலான பொதுவான நடைமுறை நுகர்வுச் செலவுகள் தொடர்புகள் தனி வறுமை கோட்டினை பயன்படுத்தி நுகர்வு வறுமையை அளப்பதாகவே இருந்து வருகின்றது. சார்பளவு வறுமையிலான சில கற்கைகளாக பல்லா மற்றும் க்ளெவ் (1986) மற்றும் குணரத்ன (1985) (2005 குணவவர்தனவிலிருந்து) என்பவை உள்ளன. தனி வறுமைக் கோடுகள், குடும்பங்கள் தமது அடிப்படை தேவைகளை அடைந்து கொள்வதற்காக கணக்கில் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டிய சில தனி நியமங்களில் தங்கியுள்ளன. பணம் சார்ந்த அணுகுமுறையுள் வழமையாக தனி வறுமைக் கோடுகள் அடிப்படை உணவுத் தேவைகளின் கணிப்பீடுகளின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன் உணவற்ற தேவைகளிற்காக ஒரு வழங்குதலும் சேர்க்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமை நிகழ்வினை வரைப்படுத்தல் மற்றும் கணிப்பிடலிலான செயற்பாடுகள் மிகக்குறைந்தளவு பரிந்துரைக்கப்பட்டுள்ள உணவு-சக்தி உள்ளெடுப்பினால் (FEI) ஆதாரப்படுத்தப்பட்டுள்ள நுகர்வு வறுமையையே முக்கிய நோக்கில் கொண்டுள்ளன. வறுமைக் கோடானது ஒரு தனிநபர் தனது அடிப்படை உணவு மற்றும் உணவற்ற தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு போதுமான செலவினை செய்யக்கூடியதாகவுள்ள புள்ளியில் வைக்கப்பட்டுள்ளது. இங்கு உணவுத் தேவையானது குறைந்தளவு சக்தி உள்ளெடுப்பு-மட்டத்தை குறிப்பதுடன் உணவற்ற கூறுகளிற்கான செலவு வேறு முறைகளை பயன்படுத்தி அளக்கப்படுகின்றது.

1960இன் ஆரம்ப காலங்களிலிருந்து பல்வேறு ஆய்வாளர்கள் (உதாரணமாக விசாரியா 1977, எதிரிசிங்க 1999, குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் பல்வேறு ஆண்டுகள், நாணாயக்கார மற்றும் பிரேமரத்ன 1987, குணவர்தன 2000) மேற்குறிப்பிட்ட அணுகுமுறைகளிலும் வேறுபட்டவற்றைப் பயன்படுத்தி இலங்கையில் வறுமையை வரைப்படுத்தியும் கணிப்பிட்டுமுள்ளனர். தேசிய அபிவிருத்திக் கொள்கை மற்றும் தலையீடுகளிற்காக வறுமையை வரைவிலக்கணப்படுத்தலும் அளத்தலும் பிரதானமாக குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட சில கற்கைகள் கீழே கலந்துரையாடப்படுகின்றன.

### 2.1.2. போசனை உள்ளெடுப்பு மற்றும் மாற்றங்கள் அடிப்படையிலான வறுமைக் கோடுகள்

வேலைப்படை மற்றும் சமூக பொருளாதார கணிப்பீட்டு ஆய்வு 1985/86 அடிப்படையிலான குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினது வறுமைக் கணிப்பீடுகள் வறுமையை வரைவிலக்கணப்படுத்துவதற்கு போசணை உள்ளெடுப்பை பயன்படுத்துகின்றது. வெட்டுப்புள்ளியானது ஒரு நாளைக்கு சமானமாக ஒரு வளர்ந்த ஆணிற்கு (வயது 20-39 ஆண்டுகள்) 2500 கிலோ கலோரிகளும் (kcal) 53 கிராம்கள் புரதமுமாகும். சக்தி மற்றும் புரத உள்ளெடுப்புகள் கணிப்பீட்டாய்வினால் மேற்கொள்ளப்பட்ட குடும்ப உணவு நுகர்வு தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டதுடன் உணவுக்கான போசணை மாற்றல் விகிதங்கள் இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் கணிப்பிடப்பட்டன. தலைக்கணிப்புசார் வறுமைச் சுட்டி அடிப்படையில் கிராமிய மற்றும் நகர்ப்புற வறுமையானது முறையே 31.7 மற்றும் 16.4 சதங்களாக காணப்பட்டன. (DCS 1987, நாணயக்கார மற்றும் பிரேமரத்ன 1987). 1990/91ம் ஆண்டு குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வின் தரவுகளின் அடிப்படையில் வறியோர் 1 மற்றும் வறியோர் 2 என இரண்டு வறியோர் குழுக்களை வரைவிலக்கணப்படுத்தியது. இரண்டு குழுக்களுமே 50 வீதத்திற்கும் மேற்பட்ட உணவு விகிதத்துடனும் (உணவு நுகர்வு செலவிற்கு உணவு மற்றும் உணவற்ற நுகர்வு செலவுகள்)

இறுதி இரண்டு செலவுக் காற்பகுதிகளிலும் உள்ள குடும்பங்களின் சராசரி மாதாந்த ஆணிற்கான உணவு செலவிலும் குறைவான மாதாந்த ஆணிற்கான உணவு செலவினை கொண்டுள்ள குடும்பங்களாகவே இருந்தன.

நாணயக்கார (1994) குடும்பங்களின் சக்தி நுகர்வு மற்றும் உணவு விகிதத்தை கருத்தில் கொண்டு போசணை அடிப்படையிலான வறுமை கோடுகளை பயன்படுத்தி வறுமையை கணிப்பிடுவதற்கு உணவு மற்றும் சக்தி உள்ளெடுப்பு அடிப்படையிலான வேறொரு வித்தியாசமான முறையினை பயன்படுத்தினார். நான்கு வறுமைக் கோடுகள் 1-4வரை ஆராயப்பட்டன. PL1 கருதப்படும் போது ஒரு குடும்பம் அதி குறைந்த கலோரி தேவையிலும் குறைந்தளவு கலோரியை பெற்றுக்கொள்கின்ற ஒரு குடும்பம் மற்றும் அதி குறைந்த கலோரி தேவைகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அதி குறைந்த உணவிற்கான தலைக்குரிய செலவினை கொண்டுள்ளதும் 50 சதவீதத்திலும் கூடிய உணவு விகிதத்தை கொண்டதுமான குடும்பங்கள் வறியவர்களாக கொள்ளப்படுகின்றனர். PL2 எனும் போது, அதே வரைவிலக்கணத்துடன் ஆனால் உணவு விகிதம் 60 இலும் கூடிய குடும்பங்களை குறிக்கின்றது. PL3 என்கையில் அதிகுறைந்த கலோரிகளை பெற்றுக்கொள்ளாத மற்றும் வயது வந்த நபருக்கு சமனான உணவிலான செலவு வயது வந்த நபரொருவருக்கு சமனான அதி குறைந்த கலோரி தேவைகளை பெற்றுக்கொள்வதற்கான உணவிற்கு ஆகும் செலவிலும் குறைந்ததாக உள்ள அதே நேரம் உணவு விகிதம் 50 சதவீத்திலும் கூடுதலாக உள்ள குடும்பங்கள் கருதப்படுகின்றன. PL4 ஆனது PL3 இனது வரைவிலக்கணத்தையே ஆனால் உணவு விகிதம் 60 சதவீதத்திலும் கூடுதலாக கொண்டிருக்கும் குடும்பங்களை குறிக்கும். இவ்வறுமை கோடுகளின் அடிப்படையில் நகர்ப்புற வறுமை நிகழ்வுகளின் கணிப்பீடுகள் 36.9 மற்றும் 44.1 சதவீத வீச்சிற்கு இடையிலும் கிராமிய வறுமை 39.3 இற்கும் 43.3 சதவீதத்திற்கு இடையிலும் காணப்படுகின்றன.

### 2.1.3. அடிப்படை தேவைகளிலான செலவுகள் மற்றும் மாறுபாடுகளின் அடிப்படையில் வறுமை கோடுகள்

குடும்ப வருமான செலவு கணிப்பீட்டாய்வு 2002இன் தரவுகளை பயன்படுத்தி குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் வறிய குடும்பங்களை தமது மாதாந்த செலவின் 50 வீதத்திலும் கூடுதலான தொகையை நாளொன்று ஒரு வயது வந்த நபருக்கு சமனான கலோரி உள்ளெடுப்பான 2475-2750 கிலோ கலோரி உடனான உணவில் செலவழிக்கின்ற வருமானத்தின் அதிகீழ் காலப்பகுதியிலுள்ள குடும்பங்கள் என வரைவிலக்கணப்படுத்துகின்றது. இதன் விளைவாக பெறப்பட்ட நகர்ப்புற மற்றும் கிராம பிரிவுகளின் வறுமை நிகழ்வு கணிப்பீடுகள் முறையே 8.6 மற்றும் 31.3 சதவீதங்களாகும். (DCS 2003) இக்கணிப்பீடுகள் பின்னர் அதிகாரபூர்வ வறுமை கோட்டினை பயன்படுத்தி DCS இனால் திருத்தப்பட்டன.

வித்யாரத்ன மற்றும் திலகரத்ன 2003 இல் 1995/96 குடும்ப வருமான மற்றும் செலவு கணிப்பீட்டாய்வு தரவுகளை பயன்படுத்தி வறுமையை அதி குறைந்தளவு உணவு மற்றும் உணவற்ற பொருட்களின் நுகர்வு கற்றையை நுகர்வதற்கான கணிப்பிடப்பட்ட தலைக்குரிய மாதாந்த செலவு மட்டங்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது. HIES 1995/96 தரவுகளின் அடிப்படையில் உணவு வறுமைக் கோடானது ஒரு நாளைக்கு ஒரு தனி நபருக்கு 2030 கிலோ கலோரிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான மாதமொன்றுக்கான செலவு என வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. தலைக்குரிய அதி குறைந்த சக்தி தேவையான 2030 கிலோ கலோரி என்பது இலங்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வயது-பால் அடிப்படையிலான சக்தி பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்ததாகும்.

2004ஆம் ஆண்டில் DCS HIES 2002 இன் தரவுகளின் அடிப்படையில் ஒரு 'அதிகாரபூர்வ வறுமை கோட்டினை' கணிப்பிட்டது (DCS 2004). இவ்வதிகாரபூர்வ வறுமைக் கோட்டின் கணிப்பீட்டிற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்பட்ட செய்முறை வித்யாரத்ன மற்றும் திலகரத்ன (2003) பயன்படுத்திய முறையின் ஒரு விரிவாகும். அதிகாரபூர்வ வறுமை கோடானது கீழ் மற்றும் மேல் வறுமைக் கோடுகளின் கூட்டு சராசரி என வரைவிலக்கணப்படுத்தப்பட்டது. இங்கு மேல்நிலை வறுமைக் கோடு என்பது தலைக்கு ஒரு நாளைக்கு 2030 கிலோ கலோரியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான மாதாந்த உணவு செலவினதும் மற்றும் உணவு வறுமை கோட்டிற்கு கிட்டிய (10 சதவீதம் கூட/குறைய) தலைக்குரிய உணவு செலவினை கொண்டுள்ள குடும்பங்களின் தலைக்குரிய உணவற்ற செலவினதும் கூட்டுத்தொகை என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. கீழ் நிலை வறுமைக் கோடு என்பது தலைக்கு ஒரு நாளைக்கு 2030 கிலோ கலோரியை பெற்றுக்கொள்வதற்கு தேவையான உணவு செலவு மற்றும் உணவு வறுமை கோட்டிற்கு (10 சதவீதம் கூட/குறைய)

கிட்டியதாக தலைக்குரிய மொத்த செலவினை கொண்டுள்ள குடும்பங்களின் உணவற்ற செலவினதும் கூட்டுத்தொகை என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

வறுமைக் கோடானது பணவீக்கத்திற்கு ஏற்றதாக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியை பயன்படுத்தி காலத்திற்கு காலம் புதுப்பிக்கப்படுகின்றது (DCS 2004). அதிகார பூர்வ வறுமைக் கோடு மற்றும் HIES 2002 தரவுகளின் அடிப்படையில் நகர்ப்புற வறுமை நிகழ்வுகள் 7.9 சதவீதமெனவும் கிராமிய வறுமை 24.7 சதவீதம் எனவும் கணிப்பிடப்பட்டன. அதிகாரபூர்வ வறுமை கோடு மற்றும் HIES 2006/07 தரவுகளின் அடிப்படையில் நகர்ப்புற மற்றும் கிராமிய வறுமை மட்டங்கள் 6.7 மற்றும் 15.7 என முறையே காணப்பட்டன (DCS 2008 a). HIES 2009/10 தரவுகளின் அடிப்படையில் நகர்ப்புற மற்றும் கிராமிய வறுமை மட்டங்கள் முறையே 5.3 மற்றும் 9-4 சதவீதங்களாகும். (DCS 2011a, 2011c)

மாவட்ட மட்டத்திலான வறுமை கோடுகள் தேசிய வறுமை கோட்டிற்கு இடம்சார் விலைச் சுட்டிகளை பிரயோகித்து கணிக்கப்படுகின்றன. (மாவட்ட/இடவாரியான விலைச் சுட்டிகள் 2 முதல் 4ம் செலவு தசகங்களில் உள்ளடங்குகின்ற குடும்பங்களை கொண்ட ஒரு குறிப்புக்குரிய குழுவினது HIES 2002 தம் கணிப்பீட்டு ஆய்வு தரவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட உணவு பொருட்களின் மாவட்ட சராசரி விலைகளை பயன்படுத்தி கணிக்கப்பட்டுள்ளன (DCS 2004).

### 2.1.4. இலங்கை வறுமை அளவீடு தொடர்பாக எழுப்பப்பட்டுள்ள கேள்விகள்

மேற்கூறப்பட்டுள்ளவற்றிலிருந்து அதிகாரபூர்வமாக கணிப்பிடப்பட்டுள்ள வறுமை நிகழ்வு ஒப்பீட்டளவில் நகர்ப்புறங்களில் குறைவாகவே உள்ளது. எனினும் கிராமிய குடித்தொகையிலும் நகர்ப்புற குடித்தொகையினரின் தலைக்குரிய நாளாந்த கலோரி நுகர்வு குறைவாகும். அட்டவணை 1 ஆனது பல்வேறு வருடங்களது HIES தரவுகளை பயன்படுத்தி அடிப்படை தேவைகளிலான செலவுகளை பயன்படுத்தி கணிக்கப்பட்ட நுகர்வு வறுமை கோடுகளின் அடிப்படையிலான வறியோர் மற்றும் வறுமை நிலையில் இல்லாதோரின் சராசரி தலைக்குரிய நாளாந்த சக்தி உள்ளெடுப்பினை காட்டுகின்றது.

HIES 2002 தரவின் அடிப்படையில் தலைக்குரிய ஒரு நாளைய அதி குறைந்த போசணை மட்டமான 2030 கிலோ கலோரியினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படைத் தேவைகளிலான செலவு (CBN) வறுமைக் கோட்டினை பயன்படுத்தின், 92.1 சதவீதமான நகர்ப்புற குடித்தொகையினர் வறுமை இல்லாதோர் என பதியப்படுகின்றனர். இவர்களது நாளைக்குரிய தலைக்குரிய சராசரி சக்தி உள்ளெடுப்பு 1988 கிலோ கலோரி ஆகும் என்பதுடன் இது கிராமியத் பிரிவிலும் குறைவாகும் (DCS 2003). போசணை உள்ளெடுப்பு என்பது மிகவும் அடிப்படையான ஒரு நுகர்வுத் தேவை என கொள்ளுமிடத்து இம்முரண்பாடு கணிப்பிடப்பட்டுள்ள நகர்ப்புற வறுமையின் அளவில் கேள்விகளை எழுப்புகின்றது.

HIES 2006/07 தரவுகளிற்கேற்ப 6.7 சதவீதமான நகர்ப்புற குடித்தொகையினரே வறுமைக் கோட்டின் கீழ் வருகின்றனர். ஆனால் அதே ஆய்விலிருந்தான தரவுகள் நகர்ப்புற வறியோர் கிராமிய வறிய மக்களிலும் குறைந்த கலோரி அளவுகளையே நுகர்வதை சுட்டிக்காட்டுகின்றன. 65 சதவீதமான நகர குடித்தொகையினர் நாளாந்த தலைக்குரிய போசணை சக்தி தேவையான 2030 கிலோ கலோரி இலும் குறைவாகவே நுகர்கின்றனர் DCS (2008a). மிகக் குறைந்த தலைக்கணிப்பு சார் வறுமைச் சுட்டியான 5.4 சதவீதத்தை கொண்டுள்ள கொழும்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடிய விகிதத்தினர் (64 சதவீதம்) தேவையானளவு போசணை சக்தி தேவையிலும் குறைந்தளவு நுகர்வதாக காட்டுகின்றது.

**அட்டவணை 1: நகர்ப்புற மற்றும் கிராமிய பிரதேசங்களில் வறுமையும் தலைக்குரிய உணவு சக்தி உள்ளெடுப்பும், 2002-2009/10**

| மட்டம் | வறியோர் மற்றும் வறுமை நிலையில் அல்லாதோரின் சதவீதம் | | தலைக்குரிய சராசரி சக்தி உள்ளெடுப்பு (ஒரு நாளைக்குரிய கிலோ கலோரிகள்) | | |
|---|---|---|---|---|---|
| | வறுமையில் அல்லாதோர் | வறியோர் | வறுமையில் அல்லாதோர் | வறியோர் | மொத்தம் |
| HIES 2002 தரவுகளின் அடிப்படையில் | | | | | |
| நகர்ப்புறம் | 92,1 | 7.9 | 1988 | 1553 | 1953 |
| கிராமம் | 75.3 | 24.7 | 2195 | 1768 | 2069 |
| | | | | | |
| HIES 2006/2007 தரவுகளின் அடிப்படையில் | | | | | |
| நகர்ப்புறம் | 93.3 | 6.7 | 1949 | 1316 | 1906 |
| கிராமம் | 84.3 | 15.7 | 2222 | 1686 | 2138 |
| | | | | | |
| HIES 2009/2010 தரவுகளின் அடிப்படையில் | | | | | |
| நகர்ப்புறம் | 94.4 | 5.3 | 1922 | 1139 | 1881 |
| கிராமம் | 90.6 | 9.4 | 2180 | 1497 | 2116 |

மூலம்: DCS 2003, 2004, 2008a, 2011a

வறுமைக் கோடு அதி குறைந்த சக்தி-உள்ளெடுப்பு மட்டத்தின் அடிப்படையில் இருந்த போதும் வெட்டுப்புள்ளி மட்டமானது ஒரு பணம் சார்ந்த திரட்சியான செலவு மட்டத்திலேயே உள்ளது. அவதானிக்கப்பட்ட நுகர்வுச் செலவு அதிகுறைந்த போசணை தேவைகளை திருப்திப்படுத்துவதற்காக உணவுப் பொருட்களில் செலவழிக்கப்பட்டதா, இல்லையா என்பது கேள்விக்குறியாகும். நகர்ப்புறத்துறையில் உணவற்ற நுகர்வு செலவுகள் உயர்வாகும். எனவே மொத்த செலவில் கூடிய சதவீதம் உணவற்ற நுகர்வுக்காக ஒதுக்கப்படலாம். இது கிராமிய துறையுடன் ஒப்பிடும் போது நகர்ப்புறத்தில் காணப்படுகின்ற குறைந்த உணவு விகிதத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது (அட்டவணை 1 ஐ பார்க்க).

நகர்ப்புற நுகர்வோர் கலோரிகள் நுகர்விற்காக கூடுதலாக பணம் செலுத்துகின்றனர். எனவே எந்தவொரு செலவு மட்டத்திலும் அவர்களது உணவு-சக்தி உள்ளெடுப்பு குறைவாக உள்ளதாக ராவலியன் (1998, நாணயக்கார 2006 இலிருந்து) குறிப்பிடுகின்றார். மேலும் நகர்ப்புற பிரதேசங்களில் நுகர்வுக் கூடையினது செலவு மிகவும் உயர்வு எனவும் குறிப்பிடுகின்றார். இருந்தாலும் வகைக்குரிய நகர்ப்புற தொழில்களின் செயற்பாட்டு மட்டங்கள் கிராமிய செயற்பாடுகளிலும் குறைந்தளவு கலோரிகளை வேண்டுவனவாக உள்ள போக்கினையே காட்டுகின்றது. நகர்ப்புறங்களில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ள சிறந்த சுகாதார சேவை மற்றும் பாடசாலை சேவைகள் ஒப்பீட்டளவில் குறைந்த கலோரிகள் மற்றும் கூடிய நுண் போசணை மூலங்களுடன் நகர்ப்புற வதிவாளர்கள் போசணை ரீதியாக சமப்படுத்தப்பட்ட ஒரு சிறந்த போசணை வேளையையே கொண்டுள்ளதாக குறிப்பிடலாம்.

அதி குறைந்த சக்தி மட்டத்திற்கான உணவு மற்றும் அதி குறைந்த உணவற்ற நுகர்வு தேவைகளிற்கான செலவினது அடிப்படையிலானதாக இருந்தாலும் இறுதியில் வறுமைக் கோடு ஒரு பணம் சார்ந்த மட்டமாகவே உள்ளது. எனவே இம்மட்டத்திற்கு மேலே உள்ள தலைக்குரிய செலவானது பரிந்துரைக்கப்பட்ட அளவு கலோரிகள் உள்ளெடுக்கப்படுவதை உறுதி செய்வதற்காக உணவு நுகரப்படுவதில் போதிய பணம் ஒதுக்கப்படுகின்றது என்பதற்கு உத்தரவாதமளிப்பதில்லை. குறிப்பாக வீடமைத்தல், உடைகள் போன்ற உணவற்ற அடிப்படைத் தேவைகளிற்கான உயர் செலவு காரணமாக நகர்ப்புறம் வாழ் குடும்பங்கள் உணவில் தாம் செலவழிக்கும் பணத்தை குறைத்துக் கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுவதால் குறைந்தளவு கலோரிகளை நுகர்கின்றனர். இங்கே உணவு-சக்தி உள்ளெடுப்பால் குறிக்கப்படுகின்ற போசணையானது ஆரொக்கியமான நல்வாழ்விற்கான ஒரு அடிப்படை தேவையாக உள்ளமையால் பெரிய சதவிகிதத்திற்கான குடித்தொகையினர் பரிந்துரைக்கப்பட்ட கலோரி அளவிலும் குறைவாக நுகர்வதானது போசணை இழப்பு நிலையை சுட்டிக் காட்டுவதாகும். இது நகர்ப்புறங்களில் மக்கள் எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் குறைவாக நுகர்வதனால் ஒரு பணம் சார்ந்த வறுமை கோட்டினால் கணிப்பிடப்பட்ட அளவிலும் கூடிய வறுமை நிலவுகின்றதா எனும் கேள்வியை எழுப்புகின்றது.

### 2.1.5. விளைவுகள்

மேலே கலந்துரையாடப்பட்ட நுகர்வு வறுமைக் கோடுகள் அடிப்படை உணவு மற்றும் உணவற்ற தேவைகளின் எண்ணக்கரு உருவாக்கலில் சேர்ந்ததாக அடிப்படை பிரச்சினைகளை கொண்டுள்ளன. முக்கிய கவனமானது வறிய மக்கள் நுகரும் பொருட்களிலேயே அமைந்துள்ளது. ஆனால் உண்மையில் அவர்களுக்கு தேவையானது என்ன என்பதிலல்ல. வறிய மக்கள் உணவற்ற தேவைகளில் செலவழிப்பதன் அடிப்படையிலான உணவற்ற செலவுகளிலான ஒதுக்கீடு, அவர்களிடம் செலவழிப்பதற்கு பணமிருப்பின் அவர்கள் என்ன நுகர்ந்திருப்பர் என்பதை பிரதிபலிப்பதாக இல்லை. உதாரணமாக ஒரே அறையில் எல்லோரும் வாழ்கின்ற ஐந்து அல்லது கூடுதலான அங்கத்தவர்களை கொண்ட, கூலி பற்றிய பாதுகாப்பற்ற மற்றும் போதிய சுகாதார, ஆரோக்கிய நிலைமைகளை கொண்டிராத குறைந்தளவு வருமானம் பெறும் ஒரு குடும்பத்தின் செலவு அவர்களது வீட்டு தேவைகளை சந்திப்பதற்கு உண்மையில் தேவைப்படும் பணத்தின் அளவை சுட்டிக்காட்டுவதில்லை. மேலும் உணவு வறுமை கோட்டிற்கு ஏறத்தாழ சமனான மொத்த குடும்ப செலவினை கொண்ட கீழுள்ள வறுமை கோடானது குடும்பங்கள் உணவற்ற தேவைகளில் செலவழிக்கும் போது போதியளவு உண்பதில்லை எனும் புள்ளிக்கு ஏறக்குறைய ஒத்ததாகும் (சட்டேத்வைட் 2004).

நகர்ப்புற மற்றும் கிராமிய பகுதிகளிலான வறுமையை மதிப்பிடுவதற்கு தேசிய மட்ட வறுமை கோட்டினை பயன்படுத்துவது பகுதி வாரியான நுகர்வு மற்றும் விலைகளிலான வித்தியாசங்களை அனுமதிப்பதில்லை என்பதுடன் நகர்ப்புற மற்றும் கிராமிய வறுமை கணிப்பீடுகளின் திருத்தமான தன்மை பற்றிய கேள்விகளை எழுப்புகின்றது. மேலும் இடவாரியான மாறுபாடுகளை சீராக்கும் நோக்கில் மாவட்டங்களிடையேயான திருத்தங்களை செய்வதானது மாவட்டங்களுள் உள்ள பிரிவுகளிடையேயான விலை மாறுபாடுகளை கருத்தில் கொள்வதில்லை. உணவு சார் விலை வித்தியாசங்களை மாத்திரம் கருத்தில் கொள்கின்ற இடவாரியான விலை சுட்டிகளின் அடிப்படையில் மாவட்ட வறுமை கோடுகளை நிறுவுவதானது உணவற்ற தேவைகளது விலைகளிலான உயர் இடவாரியான வேறுபாடுகளை (உதாரணம் வீட்டுக் கூலி) முழுமையாக புறக்கணிக்கின்றது.

காலத்தினூடாக வறுமைக் கோடுகளை புதுப்பிப்பதற்காக கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டி யை (CCPI) பயன்படுத்துவதானது பிரிவுகள் மற்றும் பிரதேசங்களில் ஒவ்வொரு காலத்தில் விலைகளில் ஏற்படும் மாற்றங்களிலான வித்தியாசமான போக்கினை புறக்கணிக்கின்றது. உதாரணமாக HIES 2006/07 தரவுகளின் அடிப்படையிலான அதிகாரபூர்வ வறுமை கோடு CCPI இனை பயன்படுத்தி 2002லிருந்து 2007 காலப்பகுதியிலான விலை மாற்றங்களிற்கேற்ப திருத்தப்பட்டது. இது கொழும்பில் இருந்த விலை மாற்றங்களை பிரதிபலிக்கின்றது. எனவே தேசிய மட்ட வறுமை அதே போல் ஏனைய புவியியல் பிரதேசங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளிலான வறுமை மட்டங்களை அளப்பதில் காலத்திற்கேற்ப திருத்தப்பட்ட வறுமைக் கோட்டின் பொருத்தப்பாடு கேள்விக்குரியதாகும்.

'வறுமை' என்பதிலான பல்வேறு வரைவிலக்கணங்களிலான வித்தியாசங்கள் இலங்கையில் வறுமையில் வித்தியாசமான கணிப்பீடுகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. வறுமை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்தப்பட வேண்டும் என்பதில் ஒரு ஒற்றுமையான கருத்தின்மையானது வித்தியாசமான தேசிய தரவுகளின் தொகுதிகளை பயன்படுத்தி வேறுபட்ட வரைவிலக்கணங்களின் உருவாக்கத்திற்கு இட்டுச் சென்றுள்ளது. இருந்தாலும் நுகர்வு வறுமைக் கோடு அடிப்படையில் எல்லா சம்பவங்களிலுமான ஒரு பொதுவான அவதானம் கிராமிய வறுமை மட்டங்களுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற வறுமை மட்டங்கள் குறைவு என்பதாகும். ஏனெனில் அதிகாரபூர்வ வறுமைக் கோடுகள் குடும்பங்களில் வாழும் குடித்தொகையினர் அடிப்படையிலானதாகும். அவை வீடற்ற, பொது இடங்களில், அகதி முகாம்களில், சட்டவிரோத புகலிடங்களில் வாழ்கின்ற மக்களை கருத்தில் கொள்வதில்லை. அதாவது கணிக்கப்பட்ட தரவுகள் கடும் வறிய நிலையில் வாழும் மக்களை உள்ளடக்குவதில்லை என கொள்ளலாம். இவ்வாறான மாறுபாடுகள் மற்றும் செயன்முறையிலான கருத்து வேறுபாடுகள் இருப்பினும் வறுமை கணிப்பீடுகள் வறுமை ஒழிப்பிலான தேசிய நிகழ்ச்சித் திட்டங்களிற்கு வழிகாட்டவும் வறுமையை குறைப்பதற்கான தலையீடுகளை உத்திப்படுத்தவும் அரசாங்கத்தாலும் அதே போல் அரச-சார்பற்ற முகவர்களாலும் பெரிதும் பயன்படுத்தப்படுவதாக குணதிலக மற்றும் சேனாநாயக்க (2004) குறிப்பிடுகின்றனர்.

### 2.2. வறுமையின் பல்-பரிமாணத் தன்மை

வறுமையை வரைவிலக்கணப்படுத்துவதில் நல்வாழ்வினை குறிக்கும் பரந்த கூறுகளை உள்ளடக்கியதாக பரந்தளவில் வரைவிலக்கணப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் பெருமளவில் வெளிப்படுத்தப்பட்டுள்ள இவ்வேளை நாடுகள் பரந்த வீச்சிலான பரிமாணங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவுள்ள சுட்டிகளை பயன்படுத்துவதில் கவனம் கொண்டுள்ளன. இங்கு பெருமளவு கவனம் புத்தாயிர அபிவிருத்தி குறிக்கோள்களின் எட்டு பரந்த பரிமாணங்களில் உள்ளது போன்ற அடிப்படை தேவைகளான போசணை, புகலிடம், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பான நீர் மற்றும் கழிப்பிட வசதி என்பவற்றில் செலுத்தப்பட்டுள்ளது (DCS 2005b). குறிப்பாக இலங்கையில் பாதுகாப்பு, சுய மரியாதை, அரசால் வழங்கப்படுகின்ற அதே போல் பொது வளங்களை பெற்றுக்கொள்ளும் வழிகள், சமூகத்தில் உள்ளடக்கப்படல் போன்ற பரந்தளவிலானவையும் ஆய்வுகள் கவனத்தில் கொள்கின்ற சிலவாகும்.

#### 2.2.1. வறுமையை அளவிடுவதற்கான செய்-தகுதி அணுகுமுறை

வறுமையை அளவிடுதலில் செய்தகுதி அணுகுமுறையானது ஒரு பல்-பரிமாண சூழ்நிலையுள் வறுமையை இனங்காண்பதற்கான ஒரு கருத்தியல் சார்ந்த அடிப்படையை வழங்குகின்றது. செய்-தகுதி அணுகுமுறையில் ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் செய்-தகுதியை இழந்திருத்தலே வறுமை என கொள்ளப்படுகின்றது. இங்கு ஒரு மனிதனின் செய்-தகுதிகள் பெறுமதியான விளைவுகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளும் ஆற்றல்களுமாகும் (சென் 1999, குணவர்தன 2005 இலிருந்து). வறியோர் எனப்படுவோர் செய்-தகுதியை இழந்தோராவர். வறுமையின் பணம் சார்ந்த அளவீடுகளை போன்றே இவ்வளவீடும் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகளை இனங்காணல், திரட்டல், பகுப்பாய்வுக்கான அலகின் தெரிவு (பொதுவாக தனிநபர் அல்லது குடும்பம்), மற்றும் பல்-பரிமாண இடத்தில் தகைமை எல்லைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தகைமை எல்லைகள் தெளிவாக காணக்கூடியனவையாக, இயற்கையானவையாக அல்லது நிபுணர்களால் தீர்மானிக்கப்பட்டவையாக இருக்கலாம் (குணவர்தன 2004).

#### 2.2.2 அடிப்படை தேவைகள் பரிமாணம்

ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் வறியோரை இனங்காணலானது பொதுவாக போசணை, புகலிடம், சுகாதாரம், கல்வி, பாதுகாப்பான நீர் மற்றும் கழிப்பிட வசதி எனும் அடிப்படை தேவைகளை கவனத்தில் கொண்டுள்ளது. கவனத்திற்குள் கொள்ளப்பட்டுள்ள அடிப்படை தேவைகளின் பல்வேறு கூறுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. வறியோரை இனங்காண்பதானது இம்முதல் நிலை சுட்டிகளின் அடிப்படையில் அமைந்ததாகவோ அல்லது ஒவ்வொரு சுட்டியினதும் தாக்கத்திற்கேற்ப குறித்த நிறையை வழங்குகின்ற முதல் நிலை சுட்டிகளின் கூட்டான தொகுதியொன்றை பயன்படுத்துகின்ற கூட்டு சுட்டியொன்றின் அடிப்படையிலோ அமைந்ததாகும். ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படுகின்ற நிறையானது தற்சார்பானதாக தெரிவு செய்யப்படும் அல்லது இதனை கணிப்பிடுவதற்கு புள்ளிவிபரவியல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. முதல் நிலை சுட்டிகளை நிறுவுவதில் தற்சார்பான வகைப்படுத்தல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இம்முறைகள் சுட்டிகளை தெரிவு செய்வதிலும் அதே போல் தகைமை எல்லைகளை அமைப்பதிலும் குறிப்பிடத்தக்க தன்னிச்சை தன்மையை கொண்டுள்ளன. ஒரு கூட்டு சுட்டியை பயன்படுத்தும் போது தரப்பட்ட கூட்டு தகைமை எல்லைக்கு ஒரு நபர் கீழே எனில் வறியவராக கருதப்படுவார். பல முதல்நிலை சுட்டிகளை பயன்படுத்தும் போது ஒரு நபர் ஒன்று அல்லது பல தகைமை எல்லைகளிற்கு கீழே எனில் அவர் வறியவாரக கருதப்படுவார்.

சித்திசேன மற்றும் ஜயதிலக (2003) ஒரு தனிநபர்/குடும்பத்தின் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை சுட்டிக்காட்டுகின்ற போசணை, முதல்நிலை கல்வி, முதல்நிலை சுகாதார பராமரிப்பு, கழிப்பிட வசதி, பாதுகாப்பான நீர் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொள்வதற்கான தனி நபர் அல்லது குடும்பத்தின் ஆற்றலை சுட்டிக்காட்டுகினற் வ வீட்டு வருமானம் மற்றும் செலவு பரிமாணங்களை இணைத்து பல்-பரிமாண வறுமைக்கான ஒரு கூட்டு சுட்டியை நிறுவினர். கூட்டு சுட்டியின் நிறுவலானது தலைமை கூறு பகுப்பாய்வு (PCA) வின் அடிப்படையிலமைந்ததாகும். இவ்வாய்வின் விளைவாக மூன்று காரணிகள் பிரித்தெடுக்கப்பட்டன. வீட்டு நிலைமைகளிலான மாறுபாடுகளை விளக்கல், கலோரி நுகர்வு மற்றும் ஏனைய அடிப்படை தேவைகள் என்பவையே அவையாகும். மூன்று காரணிகளும் கூட்டாக மொத்த மாறுபாட்டில் 52% இனையே விளக்கக்கூடியனவாக இருந்தன.

DCS ஆனது ஒரு திருப்தியற்ற அடிப்படைத் தேவைகள் சுட்டி (UBNI) இனை நிறுவுவதில் இச் செயன்முறையின் ஒரு வேறுபட்ட விதத்தினை பயன்படுத்தியுள்ளது. UBNI ஆனது கிராம சேவகர் பிரிவுகளிற்கு (GNDS) கணிக்கப்படுகின்றது[6]. DCS ஆனது HIES 2002 தரவுகளின் அடிப்படையிலான நுகர்வு வறுமை கணிப்பீடுகளுடன் உயர் இடைத் தொடர்புகளை கொண்டதன் அடிப்படையில் இச்சுட்டியை நிறுவுவதற்கு பயன்படுத்தப்பட்ட ஒன்பது சுட்டிகள் தெரிசெய்யப்பட்டன (அட்டவணை 2).

**அட்டவணை2: DCS இனது திருப்தியற்ற அடிப்படை தேவைகள் சுட்டியினை நிறுவுவதில் பயன்படுத்தப்பட்ட காட்டிகள்**

| சுட்டி | இடைத்தொடர்பு குணகம்* |
|---|---|
| 1.நீர் மூடப்பட்ட மலசலகூடங்களை கொண்டிராத குடும்பங்களின் சதவீதம் | 0.46 |
| 2.ஒளியுட்டலிற்காக மண்ணெண்ணையை பயன்படுத்தும் குடும்பங்களின் சதவீதம் | 0.63 |
| 3.சமைப்பதற்காக விறகினை பயன்படுத்தும் குடும்பங்களின் சதவீதம் | 0.65 |
| 4.சுவர்களிற்காக செங்கல், கபுக் கல் அல்லது சீமெந்து அச்சுக்கற்களை கொண்டிராத வீட்டு அலகுகளின் சதவீதம் | 0.56 |
| 5.தரையில் சீமெந்து, தராஸோ, அச்சுக்கல்/டைல் அல்லது கிரனைட்டு இல்லாத வீட்டு அலகுகளின் சதவீதம் | 0.61 |
| 6.கூரைக்காக டைல்கள், எஸ்பெஸ்டஸ், கொன்கிறீட் அல்லது உலோக தாள்களை கொண்டிராத வீட்டு அலகுகளின் சதவீதம் | 0.40 |
| 7.க.பொ.த (உ. தரம்) அல்லது அதற்கு மேலே சித்தியெய்தாத குடும்ப தலைவர்களை கொண்ட குடும்பங்களின் சதவீதம் | 0.71 |
| 8.கூலி/சம்பளத்திற்காக வருடத்திற்கு 52 கிழமைகள் வேலை செய்கின்ற சம்பளம் பெறும் தொழிலாளிகள் அல்லாத குடும்ப தலைவர்களின் சதவீதம் | 0.48 |
| 9.20 வயதிற்கு மேற்பட்ட க.பொ.த (உ. தரம்) அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாத குடும்ப அங்கத்தவர்களின் சதவீதம் | 0.53 |

*இரு வாற் சோதனையின் அடிப்படையில் 0.01 மட்ட மிகத்தெளிவுடன்

மூலம்: DCS 2007

சுட்டிகள் 1 முதல் 4 வரை புள்ளியிடப்படுகின்றன. உயர் புள்ளி உயர் வறுமை மட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. தலைமைக் கூறு பகுப்பாய்வினை (PCA) பிரயோகித்து மூன்று காரணிகள் பிரித்தெடுக்கப்பட்டன. இம் மூன்று காரணிகளும் தரவின் மொத்த வேறுபாடுகளின் 81 சதவீத்தை விளக்குகின்றன. காரணி 1 பெருமளவில் வீடமைப்பு நிலைமைகளை கவனத்தில் கொண்டதுடன் மொத்த வேறுபாட்டின் 51 சதவீதத்தை விளக்கியது. காரணி 2 கடந்த 20 வருடங்களில் குடும்ப தலைமை மற்றும் அங்கத்தவர்களின் கல்வி மட்டங்களிலான வேறுபாடுகளை படம் பிடித்தது. மூன்றாவதும் அதிக நிறை கொடுக்கப்பட்டதுமான வேறுபாடு காட்டும் காரணி குடும்ப தலைவர்களின் தொழிலாகும். இம் மூன்று காரணிகளும் அவற்றுக்குரிய நிறைகளுடன் திருப்தியடையாத அடிப்படை தேவைகள் தொடர்பாக வெவ்வேறு கிராம அலுவலர் பிரிவுகளிடையே இடவாரியான மாறுபாடுகளை காட்டுவதற்கான ஒரு கூட்டு சுட்டியாக பயன்படுத்தப்பட்ட UBNIஇனை நிறுவ வழிவகுத்தன. இருந்தாலும் UBNI அடிப்படையிலான வறுமை நிகழ்வு கணிப்பீடுகள் இன்னும் பிரசுரிக்கப்படவில்லை.

[6]அதி தாழ்ந்த முறைசார் நிர்வாக மட்டம்

பிரதேச செயலாளர் மட்டத்தில் UBNI மற்றும் தலைக்கணிப்பு சார் விகிதம் இடையிலான ஒரு இடைத்தொடர்பு பகுப்பாய்வு இடைத்தொடர்பு குணகம் 0.62 (DSD) இனை தந்தது[7]. UBNI சில முக்கிய திருப்தியடையாத உணவற்ற அடிப்படை தேவைகளை சுட்டிக் காட்டுகின்ற போது மிக முக்கிய அடிப்படைத் தேவையும், ஒரு தனிநபரின் நல்வாழ்விற்கான முக்கிய தேவையும் அதி குறைந்த போசணை உள்ளெடுப்பாகும். UBNI கணக்கெடுப்பில் போசணை உள்ளெடுப்புக்கான சுட்டி ஒன்று பயன்படுத்தப்படாமையானது அது ஒரு பதில் வறுமை அளவீடாக பயன்படுத்தப்படலில் தீவிர சிரத்தையை எழுப்பியுள்ளது. மேலும் இது UBNI மட்டம் மற்றும் வறுமை நிகழ்வு இடையிலான மிதமான இடைத்தொடர்பிலும் (0.62) பிரதிபலிக்கப்படுகின்றது. கருத்துரையாளர்கள் ஆரோக்கியமற்ற வாழ்க்கை (உதாரணமாக சனநெரிசல், போதிய காற்றூட்டமற்ற புகலிடங்கள்), சேமிப்புகள்/ முதலீடின்மை, கடன்பட்ட நிலைமை, பாதுகாப்பின்மை, பௌதீக மற்றும் மனோத்துவ துஷ்பிரயோகங்களுக்கு குடும்ப உறுப்பினர்கள் உள்ளாகக் கூடிய பலவீனமான தன்மை, வீட்டளவான வன்முறை, குறிப்பாக பெண்கள் மற்றும் பிள்ளைகளில் துஷ்பிரயோகம் மற்றும் சமூக ஓரங்கட்டப்படல் போன்றவற்றிற்கு காரணமாக இன்னும் தேவைகளை குறிப்பிட்டு காட்டியுள்ளனர் (உதாரணம் சட்டேத்வைட் 2004).

### 2.2.3 சமூக நீக்கம்

சமூக நீக்கம் என்பது பங்குபற்ற முடியாமையை குறிக்கின்றது. இலங்கை சூழ்நிலையில், சில்வா (2001) மரபு ரீதியான பொருளாதார ஆய்வுகளினால் முழுதும் விளக்கப்பட முடியாத சில சமூக குழக்கள் மற்றும் சமுதாய அமைப்புக்களிலுள்ள வறுமையின் கூறுகளை கலந்துரையாடுகின்றது. முக்கிய கவனமானது தொடர்ந்தும் வறுமையை நிலவ விடுகின்ற சமூக ஓரங்கட்டப்படலில் மரபு முறை பொருளாதார ஆய்வுகளினால் வெளிக்கொணரப்பட்டுள்ள வறுமையின் பரந்த பரிமாணங்களை விளங்கிக்கொள்வதற்கு இட்டுச் செல்கின்ற ஆய்வில் உள்ளது. இலங்கையிலான ஆய்வு தமது சமூக கலாச்சார அடையாளம், அயலிலுள்ளதன் பண்புகள் மற்றும் வாழ்க்கை முறைகளின் அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ள, பிரதான சமூகத்தவர்களால் ஒரு தூரத்தே வைக்கப்பட்டுள்ள பல சமுதாயங்களை குறிப்பிட்டு காட்டுகின்றது. சேரிகளில் வாழ்கின்ற குறைந்த வருமானம் பெறும் சமூதாயங்கள், கிராமிய விருத்திகளின் போதான காலனிகள், இறுதி நிலை விவசாய தொகுதிகளில் உரிமையின்றிய பொது இடங்களிலான குடியேற்றங்கள், நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்துள்ள சமூகங்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள இடம்மாறி வாழும் சமுதாயங்கள், பெருந்தோட்டத்துறை சமுதாயங்கள் மற்றும் பரம்பரையாக தாழ் சமூக அந்தஸ்து உடையவர்கள் என குறிக்கப்படுகின்ற மன அழுத்தத்துடன் வாழும் சமுதாயங்கள் இங்கு உள்ளடக்கப்படுகின்றன. எந்தவொரு குறிப்பான வறுமைக் கணிப்பீடுகளுமின்றி இவ்வாறு ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களிலான வறுமைத் தன்மை மற்றும் காரணங்களைப் பற்றி முடிவுகள் பொதுவான அவதானங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.2.4 சமுதாய பரிமாணம்

இப்பகுதி பெருமளவில் குணவர்தன (2004), குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ (2004) மற்றும் சட்டேத்வைட் (2004) என்போரின் வேலைகளில் இருந்தாகும். வறுமையை தரப்படுத்துவதற்கான தமது சொந்த அளவைகளை சமுதாயங்கள் உருவாக்குகின்றன. சுட்டிகளைத் தெரிவு செய்வதில் பங்கேற்பு அணுகுமுறைகள் உள்ளூர் அறிவையே பயன்படுத்துகின்றது. பகுப்பாய்வின் அலகு குடும்பமாகும். வறுமை தகைமை மட்டங்கள் உள்ளடக்கமானவையாகும். பங்கேற்பு அணுகுமுறையில் வறுமையில் வாடும் தனிநபர்களின் தகவல்களின் திரட்சி ஒரு பொதுவான அளவீட்டினுள் முன்வைக்கப்படுவதில்லை.

வறுமையின் சமுதாய பரிமாணமானது பொருத்தமான அமைப்புகளில் இழக்கப்படுவதால் குடும்பத்தை ஆய்வின் அலகாக பயன்படுத்துகின்ற வறுமை ஆய்வினால் இது காட்டப்படுவதில்லை. இச்சமுதாயங்களில் வறுமையை சுட்டிக்காட்டும் ஒரு பிரதான சுட்டியாக வருமான மட்டம் காணப்படுவதில்லை. மாறாக அடிப்படைத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான ஆற்றல் அல்லது ஆற்றாமையை செலவு பாங்குகளே தீர்மானிக்கின்றன. இச்சமுதாயங்களின் குடும்ப வரவு செலவுத் திட்டங்களிலான ஆய்வு பதார்த்தங்களின் துஷ்பிரயோகத்தில் அதிக செலவுகள் இருப்பதாக கேள்விகளை புகையிலை, போதைப் பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கிய) வெளிப்படுத்துகின்றது. அவர்களது சமூகங்களிலிருந்தும் ஓரப்படுத்தப்படல் காரணமாக

[7] கிராம சேவகர் பிரிவுக்கு மேலான ஆனால் மாவட்ட செயலாளர் பிரிவுக்கு கீழான நிர்வாக மட்டம்.

இச்சமுதாயங்கள் முறை-சார் துறைகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளவோ, சிறந்த பாடசாலைகள் போன்ற பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளவோ முடியாத நிலைமையிலுள்ளனர். இச்சமுதாயங்களில் சட்டவிரோத செயற்பாட்டு மற்றும் வீட்டு வன்முறை (குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் துஷ்பிரயோகங்கள்) நிகழ்வுகள் உயர்வாக உள்ளன.

கொழும்பில் போதிய வசதிகள் கிடைக்கப் பெறாத குடியேற்றங்களில் (USS) ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்ற குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ (2004) இச்சமுதாயங்கள் வறுமை என கருதுவது எதனை என்பதில் முக்கிய அவதானங்களைச் செய்தது. இவ்வவதானங்கள் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் அவர்களுடன் நெருக்கமாக இயங்குபவர்களின் கருத்துக்களின் அடிப்படையிலானதாகும். குடும்ப மட்டத்தில் வறுமையானது பெரிதும் வருமானம் மற்றும் பொருளீட்டும் ஆற்றல் தொடர்பாகவே நோக்கப்பட்டது. வருமானத்தின் அளவிலும் பார்க்க வருமானம் பெறுவதில் பல வழிகள் காணப்படல் மற்றும் அவற்றின் தன்மையிலேயே அதிகம் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. வறியோர் மற்றும் வறுமை நிலையிலற்ற குழக்கள் இரு சாராருமே பல்வேறு வருமான முதல்களால்குறை நிரப்பப்படுகின்ற வருமான முதலின் உறுதிப்பாட்டினையே பெறுமதியாய் கருதினர். பெரும்பாலான குடும்பங்கள் குடும்பத்தின் குறைந்தது ஒரு அங்கத்தவரேனும் சம்பளம் பெறும் தொழிலில் ஈடுபட்டிருக்க, ஏனையோர் சிறந்த ஒரு கூட்டுத் தெரிவாக வியாபாரச் செயற்பாடுகள் போன்ற வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் கொண்டிருந்தனர். வறுமையானது பதார்த்தங்களின் துஷ்பிரயோகம், சட்டவிரோத செயற்பாடுகளில் பங்கேற்றல், குடும்ப உறுப்பினர்களின் எதிர்மறையான மனப்பாங்குகள், பலவீனமான உணர்வுகள், உள்ளடங்களாக பொருளாதாரம் சாராத செயற்பாடுகளிற்கு சூழ்ந்துகொள்ளப்படுகின்ற ஒரு நிலைமையாகவும் நோக்கப்படுகின்றது. அட்டவணை 3 முக்கிய குழு கலந்துரையாடல்கள் மற்றும் குடும்ப கணிப்பீட்டாய்வுகளினூடாக இனங்காணப்பட்ட குடும்ப நல்வாழ்வுப் பண்புகளை சுரக்கமாகக் குறிப்பிட்டு காட்டுகின்றது.

**அட்டவணை 3: குடும்ப நல்வாழ்வு பண்புகளின் சுரக்கம்**

| **வறியோர்** | **வறுமை நிலையில் அல்லாதோர்** |
|---|---|
| வருமானம் மற்றும் பொருளீட்டும் ஆற்றல்<br>தொழில் அற்றோர்<br>ஒழுங்கு முறையில்லா வருமானம்<br>கூலித் தொழில்<br>ஒரு மூலம் | வருமானம் மற்றும் பொருளீட்டும் ஆற்றல்<br>வியாபாரம்<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு<br>சம்பளம் பெறும் தொழில்<br>பல மூலங்கள்<br>உறுதியான / முறையான வருமானம் |
| வீடமைப்பு<br>சட்ட விரோதமானது<br>மோசமான நிலைமை<br>கால்வாய் அல்லது புகையிரத பாதைக்கு அருகாமையில் வாழ்தல் | வீடமைப்பு<br>நிரந்தரம்<br>பாதைக்கு அருகாமையிலான வீடுகள்<br>பல மாடி வீடுகள் |
| பதார்த்த துஷ்பிரயோகம் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள்<br>போதைப்பொருள் மற்றும் மதுபானத்திற்கு அடிமைப்படல் | பதார்த்த துஷ்பிரயோகம் மற்றும் சட்ட விரோத செயற்பாடுகள்<br>சட்ட விரோத வியாபாரம் |
| மனப்பாங்குகள்<br>முன்னேறுவமதற்கு முயறற்சிகள் எடுக்காமை<br>அடிமையாதல் | மனப்பாங்குகள்<br>கடின உழைப்பு<br>மூளையை பயன்படுத்தல்<br>வீணாக்காமை |
| சேவைகள்<br>நீர் மற்றும் மலசலகூட வசதிகள் இன்மை<br>மின்சார வசதி இன்மை | சேவைகள்<br>நீர் மற்றும் மலசல கூட வசதிகள் உண்டு<br>மின்சார மற்றும் தொலைபேசி வசதிகள் உண்டு |
| தங்கி வாழ்வோர்<br>அங்கவீனமுற்றோர்/முதியோர்/ நோயாளி அங்கத்தவர்கள்<br>பல சிறுவர்கள்<br>பெரிய குடும்ப அளவு | சொத்துக்கள்<br>பல வீடுகள்<br>வாகனங்கள்<br>நகைகள் மற்றும் சேமிப்பு |
| கடன்கள்<br>மாறாத கடனில் | |
| பலவீனமான தன்மை<br>உதவி செய்வதற்கு யாருமில்லை<br>எப்போதும் பிரச்சினைகள் | |

எனவே போதிய வசதிகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களில் வாழும் குடும்பத்தவர்கள் வறுமையை வருமானம் தொடர்பாக வரையறுப்பதுடன் சமூக கலாச்சார, அரசியல் மற்றும் பாதுகாப்பு பரிமாணங்கள் தொடர்பாகவும் வரையறுக்கின்றனர். குடியேற்றத்தினுள் சமுதாயங்கள் குடியேற்ற சூழல், குடும்ப நல்வாழ்வு, சமூக வலையமைப்பு மற்றும் நிறுவனங்கள் உள்ளடங்களாக பல பிரச்சினைகளை இனங்கண்டுள்ளனர். இப்பிரச்சினைகளின் வீச்சு இச்சமுதாயங்கள் வறுமையை வெறுமனே பொருளாதாரம் சார்ந்ததாக அல்லாது ஒரு பல்-பரிமாண பிரச்சினையாகவே நோக்குகின்றனர் எனக் காட்டுகின்றது.

# 3. இலங்கையில் நகர்ப்புற வறுமை



இப்பிரிவு இலங்கையில் கொழும்பு நிர்வாக மாவட்டத்திற்கு முக்கிய கவனம் கொடுத்து நகர்ப்புற வறுமை பற்றிய கலந்துரையாடலிற்கு ஒரு முன்னோடியாக இலங்கையின் நகர்ப்புற பிரிவினை முழுமையாக நோக்கி அதன் சில சமூக, பொருளாதார அம்சங்களை முன்வைக்கின்றது. கொழும்பு மாவட்டமே இலங்கையின் நகர்ப்புற குடித்தொகையினரின் 86 சதவீதத்திலும் கூடுதலாகக் கொண்டு காணப்படுகின்ற நாட்டின் மிகவும் நகர மயப்படுத்தப்பட்டுள்ள மாவட்டமாகும் (DCS 2001 a). இப்பிரிவின் உள்ளடக்கங்கள் பெருமளவு HIES 2006/07 மற்றும் 2009/10 அறிக்கைகளிலிருந்தும் (DCS 2008a, 2011a, 2011b) மற்றும் CEPA வினது கொழும்பில் போதிய வசதிகள் வழங்கப்பெறாத குடியேற்றங்கள் எனும் ஆய்வுக் கற்கையிலிருந்தும் (குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ 2004) பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 3.1 நகர்ப்புற பிரிவின் முகக்குறிப்பு

இலங்கையின் நகர்ப்புற பிரிவானது மாநகர சபை அல்லது நகர சபைகளால் நிர்வகிக்கப்படுகின்ற பிரதேசங்கள் என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றன. நகரத்திற்குரியதாக மதிக்கப்பட்டிருந்த நகர சபைகள் ரத்துச் செய்யப்பட்டதுடன் நகர்ப்புற பிரிவற்கான இவ்வரைவிலக்கணம் 1987 இல் மாறியது. 1987 இலிருந்து முன்னைய நகர சபைகள் உள்ளூர் நிர்வாக அமைப்புக்களாக பராமரிக்கப்படுகின்ற ‘பிரதேசிய சபைகளாக’ உள்வாங்கப்பட்டன.

நகர்ப்புற குடித்தொகையின் அளவு மற்றும் வளர்ச்சி வீதம் என்பன நகர்ப்புற இடங்கள் மற்றும் மக்களை வரைவிலக்கணப்படுத்த பயன்படுத்தும் வரைவிலக்கணம் அல்லது பிரமாணங்களில் தங்கியுள்ளது. இந்திரசிறி (2006, சட்டேத்வைட் 2010 இலிருந்து) சுட்டிக்காட்டியபடி இலங்கையின் நகர்ப்புற குடித்தொகையினர் கணிப்பிடப்பட்டுள்ள அளவிலும் மிகவும் பெரியதாக இருக்கக்கூடும். இவ்வாறு தோன்றுகின்ற குறைத்து மதிப்பிடப்படலும் கூட, நாட்டின் உயர்மட்ட தலா வருமானத்தாலும் மிகவும் குறைந்த தேசிய மற்றும் நகர்ப்புற வேற்றுமைகளாலும் குறித்துக் காட்டப்படுகின்றன.

மேற்படி வரையறைகளுக்கு உட்பட்டு HIES 2009/10 தரவுகள் நகர்ப்புற குடும்ப குடித்தொகை நாட்டின் மொத்த குடித்தொகையின் 15 சதவீதம் எனும் கணிப்பீட்டினை தருகின்றது. HIES 2006/07 மற்றும் HIES 2009/10 களிற்கிடையில் இந்நகர்ப்புற குடித்தொகை 3 சதவீதம் வளர்ச்சி வீதத்தை காட்டுகின்றது. இது மொத்த குடித்தொகை வளர்ச்சி வீதமான 1 சதவீதத்திலும் விரைவானதாகும்.

**கல்வி**

கல்வி மட்டத்தின் படி இலங்கையில் 6-14 வயது வரையான பிள்ளைகளிற்கு முதல்நிலை கல்வி கட்டாயமானதாகும். இலங்கை அரசாங்கக் கல்வித் திட்டம் முதலாம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி, 1 முதல் 11ஆம் வகுப்பு வரை இலவச பாடநூல்கள், சீருடை மானியங்கள் மற்றும் தேவையானோருக்கு மதிய உணவு என்பவற்றை வழங்குகின்றது. உயர் பாடசாலை ஆட்சேர்ப்பு வீதம் 98 சதவீதத்தையும் முதல்நிலை கல்வி பூரணப்படுத்தியோர் 96 சதவீதமாகவும் உள்ளனர் (கல்வி அமைச்சு 2011).

கிராமிய துறையுடன் ஒப்பிடும் போது நகர்ப்புறத் துறையினது கல்வி அடைவுகள் உயர்வாகும். குடித்தொகையின் 2.5 சதவீதமானோரை ஆறாம் ஆண்டிற்கு மேல் பாடசாலைக் கல்வியை தொடராதவர்களாக உள்ளதுடன் 12ம் ஆண்டு பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் குடித்தொகையின் 16.2 சதவீதமாக உள்ளனர். 5-20 வயதிற்கிடைப்பட்ட குழவினை நோக்கின் 86.2 வீதமானோர் பாடசாலையில் இருப்போராகவும் 11.2 வீதமானோர் பாடசாலைக் கல்வியை விட்டும் நீங்கியோராகவும் 2.6 வீதமானோர் பாடசாலைக்கே செல்லாதோராயும் உள்ளனர் (DCS 2011a).

**சுகாதாரம்**

இப்பகுதியிலான தகவல்கள் குடித்தொகை மற்றும் சுகாதார கணிப்பீட்டாய்வு 2006/07 (DCS 2008b) இலிருந்து பெறப்பட்டன. பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையானது எல்லா குடித்தொகையினராலும் பெற்றுக்கொள்ளப்படக்கூடியதாக மிகவும் விருத்தியடைந்த ஒரு சுகாதார பராமரிப்பு தொகுதியை கொண்டுள்ளது. இலங்கையில் விசேடமாக நகர்ப்புற பிரிவில் ஒப்பீட்டளவில் குறைந்த சிசு, சிறுவர் மற்றும் தாய்மார் இறப்பு வீதங்களே பதிவாகியுள்ளன. சிசு (ஒரு வயதின் கீழானோர்) மற்றும் சிறுவர் (5 வயதின் கீழானோர்) இறப்பு வீதங்கள் இலங்கையில் 1000 உயிருடனான பிறப்புக்களிற்கு 21 மற்றும் 15 ஆகும். தாய்மார் மரண வீதமானது 100000 உயிருடனான பிறப்புக்களிற்கு 92 ஆகும்.

எல்லா இலங்கைச் சிறுவர்களும் காச நோய், தொண்டையழற்சி, ஈர்ப்புவலி, போலியோ மற்றும் சின்னமுத்து நோய்களுக்கு எதிராக இலவசமாக தடுப்பு மருந்து பெற்றுக்கொள்கின்றனர். உலக சுகாதார தாபனத்திற்கேற்ப ஒரு பிள்ளை காச நோய்க்கு எதிராக BCG தடுப்பு மருந்து, தொண்டையழற்சி, குக்கல் மற்றும் ஈர்ப்பு வலிகளை தவிர்த்துக் கொள்வதற்கு மூன்று வேளை DPT தடுப்பு மருந்து, குறைந்தது மூன்று வேளை போலியோ தடுப்பு மருந்து மற்றும் ஒரு வேளை சின்னமுத்து தடுப்பு மருந்தை பெற்றுக் கொண்டிருப்பானாயின், அவன்/அவள் முழுதும் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டவனாகவே கருதப்படுவான். இலங்கையின் நகர்ப்புற பிரிவில் 96 சதவீதத்திற்கும் மேலான சிறுவர்கள் முழுதும் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டவர்களாக உள்ளதுடன் 99 வீதத்திற்கும் அதிகமானோர் சின்னமுத்து தடுப்பு மருந்துகளையும் பெற்றவர்களாக உள்ளனர். 0.4 வீதமான சிறுவர்களே எவ்வித தடுப்பு மருந்தும் ஏற்றப்படாதவர்களாக உள்ளனர்.

ஐந்து வயதிற்கு கீழ்பட்ட சிறுவர்களிலான குறல் நிலைமை மற்றும் உள்ளுரக்கி நிலைமைகளே மந்த போசணைக்கான மரபு ரீதியான சுட்டிகளாகும். குறள் நிலைமையானது நீண்டதொரு காலமாக போதிய போசணைகளை பெற்றுக்கொள்ளத் தவறியமை அல்லது திரும்பத் திரும்ப அல்லது நீண்ட காலம் ஏதும் நோயினால் பாதிக்கப்படல் காரணமாக விளைவாவதாகும். உள்ளுரக்கி நிலைமையானது கணிப்பீட்டாய்வுக்கு உடனடி முன்னரான காலப்பகுதியில் போதிய போசணையை பெற்றுக்கொள்ளாமை மற்றும் அண்மைய நோய் கட்டங்கள், விஷேடமாக வயிற்றுப் போக்கு அல்லது உணவு விநியோகங்களிலின் விரைவான தரம் கெடல் என்பவற்றின் விளைவானதாகும். இலங்கைக்கான 2006/07 தரவுகள் இலங்கை சிறுவர்களில் 18 வீதமானோர் குறள் நிலைமையிலும் 4 வீதமானோர் மிகவும் தீவிரமாக குறள் நிலைமையிலும் உள்ளனராக காட்டுகின்றது. 15 சதவீதமான இலங்கைச் சிறுவர்கள் உள்ளுரக்கி நிலைமையாலும் 3 சதவீதம் தீவிரமாக உள்ளுரக்கி நிலைமையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். நகர்ப்புற பிரிவில் குறள் நிலைமை மற்றும் உள்ளுரக்கி நிலைமை என்பன முறையே 14 மற்றும் 15 சதவீதங்களாகும். இச்சதவீதங்கள் தேசிய மற்றும் கிராமிய மட்டங்களிலும் குறைவாகும். கொழும்பில் குறள் நிலைமையானது 8 சதவீதமாகவும் (எல்லா மாவட்டங்களிலும் மிகவும் குறைவு), உள்ளுரக்கி நிலைமையானது 13 சதவீதமாகவும் உள்ளது (DCS 2001a, 2008b).

**தொழில்**

இலங்கையின் வேலைப்படையின் 42 சதவீதமானோர் நகர்ப்புற பிரிவினராவர். நகர்ப்புற தொழிலற்றோர் வீதமான 3.4 சதவீதம் தேசிய தொழிலற்றோர் வீதமான 4.3 சதவீதத்திலும் குறிப்பிடத்தக்க அளவு குறைவாகும் (DCS 2011d). நகர்ப்புற தொழிலற்றோர் வீதம் பிரதானமாக முறைசாரா துறையினில் அதிக எண்ணிக்கையான, குறைவான தரத்தில் தொழில் கொண்டவர்களை மறைத்து காட்டுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) 2000 இனது இலங்கை நகர்ப்புற அபிவிருத்தி ஆய்வு குறிப்பிட்டுக் காட்டுகின்றது. நகர்ப்புற வறியோரில் பெரும்பாலானோர் முறைசாரா துறையில் சுய தொழில் வருமானம் ஈட்டுபவர்களாக அல்லது நாட்கூலி தொழிலாளிகளாக வேலை செய்கின்றனர். அவர்களுள் பெரும்பாலானோர் எந்த உற்பத்தித் திறன் வாய்ந்த சொத்துக்களையும் கொண்டில்லை என்பதுடன் அவர்களது தொழில் மற்றும் திறன்களிலேயே தங்கியுள்ளனர்.

**வருமானம்**

HIES 2009/10 (DCS 2011a) இற்கேற்ப நகர்ப்புற பிரிவின் குடும்ப வருமானத்தின் இடையம் மாதத்திற்கு ரூபா 31,000 ஆகும். இது கிராமிய துறையிலும் 30 சதவீதம் உயர்வானதாகும். நகர்ப்புற பிரிவின் கினி குணகம் (வருமான சமனின்மையின் அளவை குறிப்பது) 0.48 ஆகும். இது கிராமிய பெறுமதியான 0.49 இலும் சிறிதளவே குறைவாகும். நகர்ப்புற பிரிவின் மொத்த குடும்ப வருமானத்தின் 4.6 சதவீதமானது மிகவும் வறிய நிலையிலுள்ள இரு தசகம்களிலிருந்து (பத்துக்கள்) பெறப்பட்டதாகவும் மொத்த வருமானத்தின் 53 சதவீதமானது மிகவும் செல்வ நிலையிலான இரு தசகம்களிலிருந்து பெறப்பட்டதுமாகும். கிராமிய மட்டத்தில் மேலே குறிப்பிட்ட பெறுமானங்கள் முறையே 4.5 மற்றும் 54 சதவீதங்களாகும். இது நகர்ப்புற மற்றும் கிராமிய துறைகளில் பெருமளவு ஒத்த வருமான சமமின்மை நிலைமையே காணப்படுகின்றது என சுட்டிக்காட்டுகின்றது.

நகர்ப்புறத்தில் மொத்த வருமானத்தின் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட அளவு பணமாக பெறப்படுவதுடன் 35.9 சதவீதம் கூலிகள் மற்றும் சம்பளங்களாக பெறப்படுகின்றது. உரிமையாளரைக் கொண்ட வீடுகளை வருமானமாக எடுக்கும் கணிப்பிடப்பட்ட பெறுமதி மொத்தத்தின் 15.7 சதவீதமாகவும் சமூக நன்மைகள் கணக்கு உள்ளடங்களாக ஏனைய பண வருவாய்கள் மொத்தத்தின் 13 சதவீதத்தை ஆக்குகின்றன. இது கிராமிய துறையிலும் உயர்வானதாகவும் (DCS 2011c).

**நுகர்வுச் செலவு**

உணவு விகிதமென்பது மொத்த செலவுடன் ஒப்பிடும் போது உணவு மற்றும் பானத்திலான செலவினது விகிதமாகும். இலங்கையின் நகர்ப்புற மற்றும் கிராமிய துறைகளின் உணவு விகிதங்கள் முறையே 35.4 மறறும் 43.7 சதவீதங்களாகும். இது நகர்ப்புறம் தனது மொத்த செலவினது பெரும் பகுதியினை உணவற்ற நுகர்விற்கு செலவழிப்பதனை சுட்டிக்காட்டுகின்றது (DCS 2011a).

தேசிய மற்றும் கிராமிய உணவு நுகர்வு ஒழுங்குகளுடன் ஒப்பிடுகையில் நகர்ப்புற பகுதியினர் தமது உணவுச் செலவின் (19.2 சதவீதம்) பெரும் பங்கினை கருவாடு உட்பட இறைச்சி மற்றும் மீன்களிலும் 11 சதவீதத்தை பால் மற்றும் பால் பொருட்களிலும் செலவழிக்கின்றனர். உணவற்ற செலவினது பெரும் பகுதி வீடமைப்பிலான செலவாகவே தேசிய, நகர்ப்புற மற்றும் கிராமிய துறைகளில் உள்ளது. நகர்ப்புற பிரிவில் உணவற்ற மொத்த செலவினது 26.2 சதவீதம் வீடமைப்பிற்கு செலவழிக்கப்படுகின்றது, இது கிராமிய மட்டத்தில் வீடமைப்பிற்கு ஒதுக்கப்படும் செலவிலும் 10 சதவீத புள்ளிகள் உயர்வாகும் (DCS 2011a).

**வீடமைப்பு**

அட்டவணை 4 ஆனது மிக அண்மைய அதிகாரபூர்வ தரவுகளின் படி நகர்ப்புற, கிராமிய பிரிவுகளின் மட்டத்தில் வீடமைப்பின் பண்புகளை காட்டுகின்றது. நகர்ப்புற பிரிவில் பெரும்பாலான குடும்பங்கள் (93.8 சதவீதம்) இணைந்த/ பிரிக்கப்பட்ட வீட்டு அலகுகளில் வாழ்கின்றனர். இவ்வீட்டு அலகுகள் அல்லது சேரிகள் அல்லது நிரை வீடுகள் என கருதப்படுவதில்லை. பெரும்பாலான நகர்ப்புற வீடுகள் (91.3 சதவீதம்) சொந்தமானவை, குத்தகைக்கு எடுக்கப்பட்டவை கூலிக்கு அல்லது கூலி அல்லாதவையாகும். ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் (97.8 சதவீதம்) குறைந்தது ஒரு படுக்கையறை, பாதுகாப்பான குடிநீர் (96.8 சதவீதம்), மற்றும் மின்சார வசதி (96.5 சதவீதம்) காணப்படுகின்றது. பெரும்பாலான நகர்ப்புற வீடுகள் (85.1 சதவீதம்) தமது குடும்பத்திற்கென மலசலகூட வசதிகளை கொண்டுள்ளன.

**அட்டவணை 4: நகர்ப்புற மற்றும் கிராமிய வீடமைப்பின் பண்புகள்**

| பிரிவு | நில உரிமை | |
|---|---|---|
| | **சொந்தமானது/ கூலிக்கு/குத்தகைக்கு/ கூலி இல்லை (%)** | **ஏனையவை(%)** |
| நகரம் | 91.3 | 8.7 |
| கிராமம் | 92.2 | 7.8 |
| | வீடமைப்பின் வகை | |
| | இணைந்த அல்லது பிரிந்த வீடமைப்பு அலகுகள் (%) | சேரிகள்/ சிறு குடில்கள்/ நிரை வீடுகள் (%) |
| நகரம் | 93.8 | 6.2 |
| கிராமம் | 98.6 | 1.4 |
| | அறைகளின் எண்ணிக்கை | |
| | குறைந்தது ஒரு அறை (தனியாக்கப்பட்ட இடங்கள்) (%) | அறைகளில்லை (வேறாக்கப்பட்ட இடங்கள்) (%) |
| நகரம் | 97.8 | 2.2 |
| கிராமம் | 98.7 | 1.3 |
| | குடி நீர் | |
| | பாதுகாப்பான நீர்(%) | பாதுகாப்பற்ற நீர்(%) |
| நகரம் | 96.8 | 3.2 |
| கிராமம் | 87.1 | 12.9 |
| | கழிப்பிடம் | |
| | பாதுகாப்பான கழிப்பிடம் (%) | பாதுகாப்பற்ற கழிப்பிடம் (%) |
| நகரம் | 85.1 | 14.9 |
| கிராமம் | 90.3 | 9.7 |
| | மின்சாரம் | |
| | மின்சாரத்தை பயன்படுத்தல் (%) | ஏனையவை (%) |
| நகரம் | 96.5 | 3.5 |
| கிராமம் | 85.8 | 14.8 |

மூலங்கள்: DCS 2011a, 2011b

**நுகர்வு வறுமை**

அதிகாரபூர்வ புள்ளிவிபரவியல்கள் (DCS 2011a, 2011c) ஒப்பீட்டளவில் குறைந்த வறுமை நிகழ்வையே நகர்ப்புறங்களில் காட்டுகின்றன. மிக அண்மைய மதிப்பீடானது (2011a) நாட்டின் மொத்த குடித்தொகையில் 8.9 சதவீதத்தினர் வறியோர் எனவும் நகர்ப்புறங்களில் 5.3 சதவீத வறுமையே காணப்படுகின்றது எனவும் காட்டுகின்றது. 1990/91 இலிருந்து 2009/10 வறுமைக் கணிப்பீடுகள் நகர்ப்புற வறுமை 1990/91 இல் 16.3 சதவீதத்திலிருந்து 2009/10 இல் 5.3 சதவீதமாக குறைவதாக, குறைகின்ற போக்கைக் காட்டுகின்றது. நகர்ப்புற மற்றும் கிராமிய வறுமை நிகழ்வுகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியையே இலக்கங்கள் காட்டுகின்றனவெனினும் நகர்ப்புற பிரிவில் குறைந்த வறுமை மட்டங்களே காட்டப்படுகின்றன.

**அட்டவணை 5: அதிகாரபூர்வ வறுமை கோட்டினடிப்படையில் தலைக்கணிப்பு சார் வறுமை விகிதம்**

| கணிப்பீட்டாய்வினது வருடம் | 1990/1991 | 1995/1996 | 2002 | 2006/2007 | 2009/2010 |
|---|---|---|---|---|---|
| நகர பிரிவு | 16.3 | 14.0 | 7.9 | 6.7 | 5.3 |
| கிராம பிரிவு | 29.5 | 30.9 | 24.7 | 15.7 | 9.4 |

மூலம்: DCS (2011c)

### 3.2 நகர்ப்புற போதிய வசதிகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களில் வறுமை

2.55 மில்லியன் மக்கள் வாழ்கின்ற, ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 3500 நபர்கள் எனும் குடித்தொகை அடர்த்தியைக் கொண்ட இலங்கையின் மிகவும் சனத்தொகை கூடிய நிர்வாக மாவட்டம் கொழும்பாகும். இம்மாவட்டத்தில் நாட்டின் மிகப் பெரிய நகர்ப்புற குடித்தொகையொன்று வாழ்கின்றது. இங்கு 2.4 மில்லியனுக்கும் கூடுதலான மக்கள் தொகை பதிவாகியுள்ளது. இது மாவட்டத்தின்

குடித்தொகையின் 90 சதவீதத்திற்கும் கூடுதலாக உள்ளதுடன் இலங்கையின் மொத்த நகர்ப்புற குடித்தொகையின் 80 வீதத்திலும் கூடுதலாகும்[8]. மாவட்ட குடித்தொகையின் பெரும்பகுதி நகர்ப்புறத்தினர் என்றே வகைப்படுத்தப்படுவதால் நகர்ப்புற வறுமையும் மாவட்ட வறுமை தலைக்கணிப்பு சார் விகிதமான 3.6 சதவீதத்திற்கு (2011a) சமனான அளவாகவே இருக்கும்.

மாவட்டமானது பிரதேச செயலகப் பிரிவுகள் (DSDs) என அறியப்படுகின்ற 13 உப-நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் நான்கு மாநகர சபைகள் மற்றும் ஆறு நகர சபைகளுள் நகர்ப்புற குடித்தொகையினர் செறிவாக வாழ்கின்றனர். கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவுகள் இரண்டும் கொழும்பு மாநகர சபையின் கீழ் வருகின்றன. (கொழும்பு மாவட்ட செயலகம், 2011). வறுமை தலைக்கணிப்புகள் கணிப்பிடப்பட்டுள்ள ஆகக் கீழ்மட்டம் பிரதேச செயலகப் பிரிவுகளாகும். HIES 2002 தரவுகளின் அடிப்படைப்படி கொழும்பு மற்றும் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகங்களில் வறுமை தலைக்கணிப்பு சார் விகிதங்கள் முறையே 12 மற்றும் 4.4 சதவீதங்களாகும் (DCS 2005a).

இவ்வெண்ணிக்கைகள் உணவு மற்றும் உணவற்ற நுகர்வு வறுமைக் கோடுகளின் அடிப்படையிலானதாகும். கொழும்பில் வாழும் பெரியதொரு பகுதியான நகர்ப்புற குடித்தொகையினர் அதிகாரபூர்வ நுகர்வு வறுமைக் கோட்டிற்கு மேலே வருமானம் பெறும் குடும்பங்களாகவே குறிக்கப்படுகின்றனர். எனவே இவர்கள் வறியவர்களாக வகைப்படுத்தப்படவில்லை. ஆனால் இவர்கள் சனநெருக்கடி கூடிய, சுகாதாரமற்ற நிலைமைகளின் கீழான குறைந்த தர வீடுகளிலேயே வாழ்கின்றனர்.

ஐக்கிய நாடுகளின் வாழ்விடம் எனும் அமைப்பு (2009) இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று 1998/99 இல் கொழும்பு மாநகர சபை எல்லையுள் சேரிகள், சிறு குடில்கள் மற்றும் தாழ்ந்த விலைகளிலுள்ள அடுக்குமாடி குடியிருப்புக்களில் வாழும் குடித்தொகையினரைக் கொண்ட 1506 நகர்ப்புற வறிய குடியேற்றங்கள் காணப்பட்டமையைக் குறிக்கின்றது[9]. இக்குடியேற்றங்களுள் 74 சதவீதத்தினர் 50 வீடமைப்பு அலகுகளிலும் குறைவான அளவையே கொண்டுள்ளதுடன் 500 அலகுகளிற்கும் அதிகமாகவுள்ள குடியேற்றங்கள் இந்நகர்ப்புற வறிய குடியேற்றங்களின் 0.7 சதவீதத்திற்கே உள்ளமையையும் DFID (2002) குறிக்கின்றது. அரைவாசிக்கும் மேலான குடும்பங்கள் தாம் கூலிக்கு தங்கியிருக்கும் இடங்களில் எவ்வளவு காலம் இருக்கலாம் என்பது பற்றிய பாதுகாப்பின்மை நிலைமையை கொண்டுள்ளதாகவும், 56 சதவீதத்தினர் தனிப்பட்ட நீர் இணைப்புக்களை பெறவில்லை எனவும் 67 சதவீதத்தினர் பிரத்தியேக மலசலகூட வசதிகளைப் பெற்றில்லை எனவும் ஆய்வு குறிப்பிடுகின்றது. 12 சதவீதமான குடும்பங்கள் மாத்திரமே ஒழுங்கான ஒரு தொழில் மூலத்தை கொண்டுள்ளதுடன் 34 சதவீதமானோர் சுய-தொழிலில் தங்கியுள்ளனர். வருமானம் ஈட்டும் 45 சதவீதத்தினர் கூலித் தொழிலாளிகள் அல்லது உதவியாளர்கள் போன்ற திறனின்றிய தொழிலாளிகளாகவே ஈடுபட்டுள்ளனர்.

குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ (2004), 2004 இல் இருந்தபடி கொழும்பு மாநகர சபையுள் 1614 போதிய வசதிகள் வழங்கப் பெறாத குடியேற்றங்கள் இருப்பதாகவும் இது கொழும்பு குடித்தொகையின் ஏறத்தாழ 50 சதவீதத்தை ஆக்குவதாகவும் குறிப்பிடுகின்றனர். பகுதி-திறனுடனான கூலித்தொழில், முறைசார் மற்றும் முறைசாரா குறைந்த மட்டத் தொழில், சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி மற்றும் வெளிநாட்டு தொழில்களே பிரதான ஜீவனோபாய வழிகளாகும். உறுதியான குறைந்த சம்பளம் வழங்கும் தொழில்களுடன் தொழில் முயற்சிகள் போன்ற உயர் வருமானம் தரும் ஆனால் குறைந்தளவு உறுதியான தொழில்களை உள்ளடக்கிய தொழில் உடைமை ஒன்றை பேணுவதே குடும்பங்கள் தமது வருமான மட்டங்களை உயர்த்துவதற்கு பயன்படுத்துவதாகும். கூலி/சம்பளம் கொண்ட தொழிலை, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சியை மற்றும் சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து உள்ளடங்கிய சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிகளுடனான குடியேற்றங்களின் மத்திய இடமே முக்கிய அம்சமாகும்.

---

[8] HIES 2009/10 (DCS 2011a) தரவுகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டது.

[9]சேரிகள் எனப்படுவன சன நெருக்கத்துடனான வாழ்க்கை நிலைமைகளுடன் வசதிகளை பங்கிட்டு கொள்ளும் தரம் குறைந்த நிரந்தர வீட்டு அலகுகளாகும். சிறு குடில்கள் எனப்படுவன தாழ்ந்த வசதிகளுடன் உடனுடன் கிடைக்கும் பொருட்களால் செய்யப்பட்ட அரசினது எல்லைக்கோடுகளில் உள்ள நிலங்களில் அமைக்கப்பட்டனவாகும்.

# 4. ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் நகர்ப்புற வறுமையை அளவிடல்



முன்னைய பிரிவுகள் வறுமையினை ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் படம் பிடித்து காட்டுவதற்கு நுகர்வு வறுமைக் கோடுகளால் முடியவில்லை ஆதலால் வறுமை மட்டங்கள் குறைத்து கணிப்பிடப்பட்டிருக்கலாம் என எடுத்துக் காட்டின. கீழ்வரும் ஆய்வினது பிரதான குறிக்கோள் அதிகாரபூர்வ வறுமைக் கோடு தொடர்பாக வறியவர்களல்ல என வகைப்படுத்தப்பட்ட நகர்ப்புறப் பிரிவிலான குடும்பங்கள் ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் திருப்தியடையாத அடிப்படைத் தேவைகள் தொடர்பாக விளிக்கும் போது வறியவர்கள் என மாறலாம் என எடுத்துக் காட்டுவதாகும். மேலும் இப்பிரிவு வறுமை எவ்வளவு குறைத்து கணிப்பிடப்பட்டுள்ளது எனவும் ஆராயும்.

## 4.1 செய்முறை

நாம் குடும்ப வறுமையின் பல்-பரிமாண தோற்றத்தினை பிரதிபலிக்கின்ற அடிப்படைத் தேவைகளிலான சுட்டிகளின் தொகுதியொன்றை பயன்படுத்தி குடும்ப மட்ட வறுமையை ஆராய்கின்றோம். நாம் நோக்கத்தோடு தெரிவு செய்த நுகர்வு வறுமைக் கோட்டிற்கு கிட்டிய அல்லது மேலே உள்ள 20 குடும்பங்களிலான சம்பவக் கற்கையொன்றை முன்வைக்கின்றோம். எமது தெரிவு நோக்கத்தோடு இருந்ததால் மற்றும் மாதிரி அளவு சிறிதாக இருந்ததாலும் ஆய்வு சுட்டிக்காட்டும் கண்டுபிடிப்புக்களையே வழங்குகின்றது.

### 4.1.1. அடிப்படைத் தேவைகள் சுட்டிகள்

பகுப்பாய்வினது அலகு குடும்பமாகும். சுட்டிகள் நல்வாழ்வின் பரிமாணங்களின் ஒரு தெரிவு செய்யப்பட்ட தொகுதியினைப் பிரதிபலிக்கும் வண்ணம் தெரிவு செய்யப்பட்டன. இச்சுட்டிகள் குடும்ப வருமானம் மற்றும் வருமான உறுதிப்பாடு, உணவு-சக்தி உள்ளெடுப்பு, தொழில், வீடமைப்பின் தரம், பாதுகாப்பான நீர் மற்றும் கழிப்பிட வசதிகள், பிள்ளைகளின் கல்வி, மருத்துவ பராமரிப்பினை பெற்றுக்கொள்ளும் வழிகள், பாதுகாப்பான எரிபொருள் மற்றும் ஒளியூட்டலைப் பெற்றுக் கொள்ளல், இயக்கப்பாடு, தொடர்பாடல்கள், பதார்த்த துஷ்பிரயோகம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை பிரிதிநிதித்துவப்படுத்துகின்றன. இச்சுட்டிகளின் தெரிவு பெருமளவில் குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ (2004) இனால் ஆவணப்படுத்தப்பட்ட கொழும்பில் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்கள் எனும் ஆய்வின் கண்டு பிடிப்புக்களின் அடிப்படையிலானதாகும். சுட்டிகள் மாதிரி கணிப்பீட்டாய்வில் அளக்கப்பட்ட பொருத்தமான மாறிகளை க்ளசென் (2000) இல் கலந்துரையாடப்பட்டுள்ள புள்ளியிடல் மற்றும் நிறுத்தல் திட்டத்தினது ஒரு மாற்றத்தினை பயன்படுத்தி புள்ளியிடப்பட்டு நிறுப்பதன் மூலம் உருவாக்கப்பட்டன. புள்ளியிடலினூடாக ஒவ்வொரு மாறியும் பெறும் பெறுமதி 1 முதல் 3 வரையான அளவீட்டில் தரப்படுத்தப்பட்டன.

**வருமானம்**

கொழும்பில் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களிலான ஆய்வு (குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ 2004) குடும்ப மட்ட வறுமையானது பிரதானமாக வருமானம் தொடர்பாகவே காணப்படுகின்றது என கண்டறிந்தது. குடும்பங்கள் வருமானத்தின் அளவினைப் போலவே அதன் உறுதிப்பாட்டிலும் சிரத்தை கொண்டுள்ளன. குடும்பங்கள் வருமானத்திற்கான உறுதிப்பாட்டினை வருமானத்திற்காக பல முதல்களை வைத்திருப்பதனூடாக நோக்கியது. பல முதல்களை வருமானத்திற்காக கொண்டிருப்பதானது நிதிசார் பலவீனமான தன்மையை எதிர்கொள்வதற்கான ஒரு உத்தியாக கருதப்பட்டது. எனவே வருமான சுட்டியானது வருமானத்தின் அளவு அதே போல் வருமானம் தரும் முதல்களின் எண்ணிக்கை இரண்டையும் கருத்தில் கொண்டது.

**போசணை**

நுகர்வு வறுமைக் கோடுகள் குறிக்கின்ற செலவுத் தகைமை மட்டங்கள் உணவு மற்ற உணவற்ற அடிப்படை நுகர்வுத் தேவைகளிற்காக ஒதுக்கப்பட்டாலும் இவ்விரண்டு தேவைகளுமோ அல்லது ஏதேனும் ஒன்றோ நிறைவேற்றப்படும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. தேசிய சராசரியிலும் மிகவும் உயர்வான உணவற்ற செலவினைக் கொண்டுள்ள நகர்ப்புற பிரதேசங்களில் அதி குறைந்தளவு தேவையான, பரிந்துரைக்கப்பட்ட கலோரி அளவுகளை நுகர்வதிலிருந்தும் தடுக்குமளவு உணவற்ற செலவுகள் கூடுதலாக இருக்கலாம்.

எனவே எமது போசணை சுட்டியானது அதிகுறைந்த தலைக்குரிய வயது வந்த நபரொருவரின் நாளாந்த கலோரித் தேவையான 2030 கிலோ கலோரி அடிப்படையிலான அதி குறைந்த சக்தி நுகர்வு மட்டத்தை ஒரு குடும்பம் எந்தளவு திருப்திப்படுத்துகின்றது என்பதனை பிரதிபலிக்கின்றது. குடும்ப நாளாந்த சக்தி உள்ளெடுப்பு மற்றும் குடும்ப நுகர்வினது அடிப்படையில் வயது வந்த நபரொருவருக்கு சமனான நாளாந்த சக்தி நுகர்வொன்று கணிப்பிடப்பட்டது. பரிந்துரைக்கப்பட்ட அதி குறைந்த உள்ளெடுப்பான 2030 கிலோ கலோரிக்கு இதன் விகிதமானது போசணை சுட்டியாக தெரிவு செய்யப்பட்டது.

**தொழில்**

ஒரு தொழிலைச் செய்து கொண்டிருத்தலானது அதன் பயன்படு தன்மை மற்றும் உள்ளார்ந்த முக்கியத்துவம் காரணமாக நல்வாழ்விற்கான ஒரு சுட்டியாகக் கணிக்கப்படுகின்றது. குடும்பத்தின் தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள வயது வந்த அங்கத்தவர்களின் பங்கு தெரிவு செய்யப்பட்ட சுட்டியாகும்.

**வயது வந்தோர் கல்வி**

குடும்பத்தின் வயது வந்த அங்கத்தவர்கள் (18 வயது அல்லது அதற்கு மேற்பட்டோர்) சராசரியாக எத்தனை ஆண்டுகள் கல்வியை பெற்றுக் கொண்டனர் என்பதே தெரிவு செய்யப்பட்ட சுட்டியாகும்.

**வீடமைப்பின் தரம்**

வீட்டின் தரமானது அதன் குடியிருப்பாளர்களது ஆரோக்கியத்தை பாதிப்பதுடன் ஏற்றுக்கொள்ளத்தக்க பண்புகளுடன் உள்ள ஒரு வீட்டில் வாழ்வதற்கான அக் குடும்பத்தின் ஆற்றலையும் பிரதிபலிக்கின்றது. குடும்பங்கள் வறுமையிலான தமது சொந்த மதிப்பீடுகளில் நல்வாழ்வின் முக்கிய கூறுகளாக வீடமைப்பின் பல்வேறு கூறுகளை நோக்குவதாக கொழும்பில் போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களிலான ஆய்வு ஆவணப்படுத்துகின்றது. எனவே வீடமைப்பின் தரத்திற்கான எமது சுட்டி நில உரிமை நிலைமை (உதாரணம் சொந்தமானது/ குத்தகைக்கு/ கூலிக்கு/ இலவசமானது/ ஆக்கிரமிக்கப்பட்டது) வாழ்வோரின் நிலை (தனி அல்லது பல குடும்பங்கள்), சன நெருக்கடி (குடும்பத்தின் அளவுக்கு அறைகளிற்கான விகிதம்) வீட்டின் வகை (உதாரணம் பிரிந்தது/ மாடித்தொடர், நிரைவீடுகள், சேரி, சிறு குடில்கள்) சுவர்கள், கூரை மற்றும் தரை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள பதார்த்தங்கள், காற்றோட்டம (உதாரணம் இடத்திற்கு வளி உட்செல் துளைகள் விகிதம்) என்பவற்றை கருத்தில் கொள்கின்றது.

வீட்டிலிருந்து வெளியேற்றப்படக் கூடிய பலவீனமான தன்மை, மின்சாரம், நீர், பாதைகள், வருமானமீட்டுவதற்கான வாய்ப்புக்கள் மற்றும் வீட்டலகினை முன்னேற்றுவதில் முதலீடு செய்தல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல் தொடர்பாக நல்வாழ்விற்கான ஒரு தீர்க்கமான காரணியாக நில உரிமை நோக்கப்படுகின்றது. பல பேர் வாழும் நிலைமை, பொதுவாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமக்கு முடியுமான விதத்தில் ஒரே வீட்டலகினை பகிர்ந்து வாழும் நிலைமையானது நெருக்கடியான, பாதுகாப்பற்ற மற்றும் ஆரோக்கியமற்ற நிலைமைகளிற்கு இட்டுச் செல்கின்றது. நகர்ப்புற குறைந்த வருமானம் பெறும் பெரும்பாலான குடும்பங்கள் சேரிகள், சிறுகுடில்கள் அல்லது குறைந்த விலைகளில் கிடைக்கின்ற அரச தொடர் மாடிகளில் உள்ளனர். சன நெருக்கடி மட்டமானது குடும்பத்தின் அளவுக்கு அறைகளின் எண்ணிக்கை (சுவர்கள்/பிரிப்புகளால் பிரிக்கப்பட்ட இடங்கள்) எனும் விகிதத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. நாம் தரை, சுவர்கள் மற்றும் கூரையை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்திய பதார்த்தங்களை வீடமைப்பின் தரத்தினை தரும் காட்டிகளாக கருதியுள்ளோம். காற்றோட்டத்திற்கான வரைவிலக்கணமானது அளவுகளின் எண்ணிக்கைக்கு ஜன்னல்களின் எண்ணிக்கை எனும் விகிதத்தால் தரப்படுகின்றது. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விகிதமானது ஏற்றுக்கொள்ளப்பட்டது. பூச்சியத்திற்கும் 1 இற்கும் இடைப்பட்டது மத்திமமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் பூச்சியம் எனும் விகிதம் ஏற்றுக்கொள்ளப்படாதது ஆகும்.

**கழிப்பிட வசதி**
பல குறைந்த வருமானமீட்டும் நகர்ப்புற பிரதேசங்களில் கழிப்பிட வசதிகளிலான பற்றாக்குறை நோய்களையும் நாற்றத்தையும் ஏற்படுத்துகின்ற ஆரோக்கியமற்ற நிலைமைகளை விளைவாக்குகின்றது. நாம் குடும்பத்திற்கு பிரத்தியேகமான மசலகூடம் ஒன்று இருத்தல், மலசலகூடம் பகிரப்படல் அல்லது வேறு வகையில் பெற்றுக்கொள்ளும் வழி மற்றும் மலசலகூட வகை என்பவற்றை சுட்டிக்காட்டும் மாறிகளை ஆராய்கின்றோம். கழிப்பிட வசதியிலான காட்டி அவ்வசதியைப் பெற்றுக்கொள்ளும் வழி மற்றும் வகையினை பிரதிநிதித்துவப்படுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**நீர்**
மனித நல்வாழ்வுக்கு அடிப்படையான ஒரு தேவையாக சுத்தமான நீரை பெற்றுக்கொள்ளல் இருப்பதனால் நாம் குடும்பங்கள் பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் வழிகளைக் காட்டும் ஒரு மாறியை ஆராய்கின்றோம்.

**சக்தி – பாதுகாப்பான சமையல் மற்றும் ஒளியூட்டலை பெற்றுக்கொள்ளும் வழிகள்**
ஒளியூட்டல் மற்றும் சமையலுக்காக பாதுகாப்பற்ற எரிபொருட்களை பயன்படுத்துதலானது குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையான இறப்புக்களையும் விபத்துக்களையும் விளைவாக்கி துக்க நிலையை இன்னும் கூட்டும் நிலைமைக்கு வழிவகுத்துள்ளது. சமையல் மற்றும் ஒளியூட்டலிற்காக மின்சாரம், வாயு, விறகு, மண்ணெண்ணெய் அல்லது ஏனைய எரிபொருட்களின் பாவனையை சுட்டிக் காட்டும் ஒரு மாறியையும் பயன்படுத்துகின்றோம். சக்திக்கான காட்டி பாதுகாப்பான சமையல் மற்றும் பாதுகாப்பான ஒளியூட்டலை பெற்றுக்கொள்ளும் வழிகளை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பிள்ளைகளின் கல்வி**
மேலே குறிப்பிடப்பட்டது போல் இலங்கை அரசாங்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியை வழங்குகின்றது என்பதுடன் 6-11 வயது வரையான முதல் நிலை கல்வி கட்டாயமானதாகும். அரச கல்வித் திட்டம் வீட்டுக்கு மிக அண்மையிலுள்ள பாடசாலையிலிருந்து கல்வி பெற்றுக்கொள்வதனை உறுதி செய்கின்றது. தேவையான சிறுவர்களிற்கு பாடசாலை சீருடைகள் மற்றும் மதிய உணவு மானியங்கள் வழங்கப்படுகின்றன. தேசிய ரீதியில் 98 சதவீதமான பிள்ளைகள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் முதல்நிலை கல்விக்கு சேர்த்துக் கொள்ளப்படாமை மற்றும்/ அல்லது விலகுதல் தீவிர இழப்பு நிலையை சுட்டிக் காட்டுகின்றது. சிறுவர்களின் கல்வியிலான காட்டியை நிரமாணிப்பதில் பாடசாலை சேர்க்கப்படல் மற்றும் பாடசாலையை விட்டு விலகுதல் வீதங்கள் எனும் இரண்டு மாறிகள் கருதப்பட்டன. சேர்க்கப்படல் மாறியானது 6-16 வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்கு சேர்க்கப்பட்டுள்ளனரா என கருதுவதுடன் விலகுதல் வீதம் 6-16 வயதிற்கிடைப்பட்ட கடந்த காலங்களில் பாடசாலைக்கு சமூகமளித்த ஆனால் கணிப்பீட்டாய்வு காலங்களில் சுகயீனம் தவிர்ந்த வேறு ஏதும் காரணங்களிற்காக பாடசாலைக்கு சமுகமளிக்காதிருக்கின்றோரை கருதுகின்றது.

**சுகாதாரம்**
இலங்கையில் எல்லா மக்களையும் கூடியளவில் அடையக்கூடியதாக மிகவும் விருத்தியடைந்த ஒரு சுகாதார பராமரிப்புத் திட்டம் காணப்படுகின்றது. எல்லா சிறார்களும் இலவச தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதுடன் சிசு, சிறுவர் மற்றும் தாய்மார் இறப்பு வீதங்கள் ஒப்பீட்டளவில் குறைவாகும். குரள் நிலைமை மற்றும் உள்ளுருக்கி நிலைமையும் விசேடமாக நகர்ப்புறப் பிரிவில் ஒப்பிட்டளவில் குறைந்த மட்டங்களிலேயே உள்ளன. மிகவும் அடிக்கடி முகங்கொடுக்கின்ற கஷ்டமானது மருத்துவ பராமரிப்புகளிற்கான உயர் செலவு காரணமாக அவற்றை பெற்றுக்கொள்ள முடியாமையாகும். எனவே தெரிவு செய்யப்பட்டுள்ள காட்டியானது மருத்துவ வசதியை பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலை அல்லது மருந்தக நிலையங்களிற்கு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு, மருந்துகளிற்கு தேவைப்படும் செலவு, மருத்துவப் பரிசோதனைகளிற்கான செலவு போன்றவற்றை உள்ளடக்கிய மருத்துவத்துடன் இணைந்த செலவுகளை காரணமாக மருத்துவ பராமரிப்பினை பெற்றுக்கொள்ள இயலாமையை அளவிடுகின்றது.

**இயக்கப்பாடு**
இன்றைய சூழ்நிலையில் போக்குவரத்தானது பிரதானமாக தொழில் சந்தைகளை பெற்றுக்கொள்ளளுடன் இணைக்கப்பட்டுள்ளது. பொதுச் சேவைகள் போக்குவரத்து கிடைக்கப் பெறக்கூடியதாக இருக்குமிடத்து பிரதான கவனம் அதற்கு செலவழிக்கக் கூடியதாக இருப்பதிலேயே உள்ளது. விரைவான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்துவதற்காக செலவழிக்க முடியாமலிருப்பதானது மலிவான, பாதுகாப்பற்ற போக்குவரத்து வழிகளை பயன்படுத்த இன்னும் தம் வேலைகளிற்காக அதிக தூர நடை பயணங்களை மேற்கொள்ள மக்களை பலவந்தமாக

உட்படுத்துகின்றது. இவை நேரத்தை கருதுகையில் கூடிய நேரத்தை செலவழிக்க வேண்டியனவாக உள்ளது. எனவே வேலைத்தளத்திற்கான போக்குவரத்து வழியினை சுட்டிக் காட்டுகின்ற ஒரு மாறியையும் நாம் ஆராய்கின்றோம். தெரிவு செய்யப்பட்டுள்ள காட்டியானது ஒரு வாகனத்தின் கிடைக்கற்றகவு, போக்குவரத்து வழி மற்றும் வேலைத்தளத்தை அடைவதற்கான நேரத்தை கருதுகின்றது.

**தொடர்பாடல்**

குறைந்த செலவினில் தொலைபேசி வசதியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் இன்றைய நிலையில் இவ்வசதியை பெற்றுக்கொள்ள ஒருவருக்கு முடியாமலிருப்பதானது வருமானமீட்டும் வாய்ப்புக்களில் இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் வேறு வழிகளில் தொடர்பாடல் செய்வது கூடிய நேரத்தை செலவழிக்கவும் வேண்டியுள்ளது. தொலைபேசிகள் மற்றும் ஏனைய தொடர்பாடல் வசதிகளை பெற்றுக்கொள்ளும் வழிகளிலான ஒரு காட்டியை நாம் ஆராய்கின்றோம்.

**நிதி**

சேமிப்பின்மையும் குடும்பங்களில் நிலவுகின்ற உயர் கடன் மட்டமும் குடும்பங்கள் நிதி அழுத்தத்துடன் நிகழ்கால மற்றும் எதிர்கால நல்வாழ்வில் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதையும் காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக நிதி சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வழிகள் குறைவாக காணப்படலானது வறிய குடும்பங்களின் வருமான வழிகளை முகாமைத்துவம் செய்வதற்கான ஆற்றலையும் நிச்சயமற்ற நிலைமைகளை கையாள்வதற்கான ஆற்றலையும் மட்டுப்படுத்தலாம். சேமிப்பு மற்றும் கடன்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரு காட்டியும் கருதப்பட்டுள்ளது.

**பதார்த்த துஷ்பிரயோகம்**

போதிய சேவைகள் வழங்கப் பெறாத குடியேற்றங்களிலான ஆய்வில் வறுமைக்கான ஒரு காரணியாகவும் வறுமை நிலையிலிருந்தும் வெளியேறுவதை விட்டும் தடுக்கின்ற ஒரு காரணியாகவும் போதை பொருள் மற்றும் மதுப்பாவனைக்கு அடிமைப்பட்டிருத்தல் காணப்பட்டுள்ளது. வறுமையை வரைவிலக்கணப்படுத்தும் மற்றும் குடும்ப மட்டத்தில் நல்வாழ்வினை பாதிக்கின்ற ஒரு காரணியாக இவ்வடிமைப்பாடு குடியிருப்பாளர்களால் கருதப்படுகின்றது.

**பாதுகாப்பு**

நாம் இரண்டு வகையான பாதுகாப்பின்மைகளை ஆராய்கின்றோம். சட்ட விரோத செயற்பாடுகளின் வலையமைப்புக்களிலிருந்து (பிரதானமாக போதைப்பொருள் அடிப்படையான வலையமைப்புக்கள் மற்றும் சமுதாயத்துள் பதார்த்த துஷ்பிரயோக நிகழ்வுகள்) தோன்றுகின்ற பாதுகாப்பின்மை மற்றும் அரசியல் கட்சிகளுடனான சேர்க்கைகளால் ஏற்படுத்தப்படுகின்ற அழுத்தங்களிலிருந்து தோன்றுகின்ற பாதுகாப்பின்மை என்பனவே அவையாகும். நாம் குடும்பங்கள் போதைப்பொருள் அடிப்படையான அல்லது அரசியல் வலையமைப்புக்களால் ஏற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பின்மையால் அச்சுறுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்வதற்கு காட்டிகளை பயன்படுத்தினோம். இப்பாதுகாப்பின்மை நிலைமைகளிற்கு பதிலளிப்பதானது நேரம் செலவழிவதால் தோன்றுகின்ற செலவுகளை இறுதியில் விளைவாக்கலாம்.

அட்டவணை 6 இல் பல்வேறு பரிமாணங்களை அளப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட காட்டிகளும் மாறிகளின் இழப்பு மட்டங்களிற்கு இணைக்கப்பட்டுள்ள புள்ளிகளும் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாறியும் 1 முதல் 3 வரையான அளவுத் திட்டத்தில் புள்ளியிடப்படுகின்றன. 3 எனும் புள்ளி மிகவும் சிறந்த சாத்தியமான நல்வாழ்வு தரத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் புள்ளி 1 கடுமையான இழப்பினை சுட்டிக் காட்டுகின்றது. உப காட்டிகளின் (அடிப்படைத் தேவைகள் காட்டிகள்) கணிப்பிடலில் இணைக்கப்பட்டுள்ள நிலைகள் பல்வேறு பரிமாணங்களின் தன்மை மற்றும் ஒப்பீட்டளவு முக்கியத்துவத்திற்கேற்ப தெரிவு செய்யப்பட்டன. மற்றும் இவை உள்ளுணர்வால் உணரப்படுகின்ற மற்றும் தற்சார்புடையதாகும்.

**அட்டவணை 6: அடிப்படை தேவைகள் காட்டிகளை நிறுவுவதில் பயன்படுத்தப்பட்டுள்ள மாறிகளிற்கு புள்ளி வழங்கலும் நிறுத்தலும்**

| அடிப்படை தேவைகள் சுட்டி | மாறிகள் | புள்ளி (1 குறிப்பிடத்தக்கது, 2 மிகவும் இழந்தது, 3 ஆகக் குறைந்தது) | | | நிறை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | |
| வருமானம் | வருமானத்தின் அளவு: நகர்ப்புற வருமான தசகங்களில் குடும்பத்தின் நிலை | 1வது -3வது தசகம் | 4வது - 7வது தசகம் | 8வது – 10வது தசகம் | 0.5 |
| | வருமான முதல்கள்: வருமான முதல்களின் எண்ணிக்கை | ஒன்று | இரண்டு | மூன்று அல்லது அதற்கு கூட | 0.5 |
| தொழில் | தொழிலில் ஈடுபட்டுள்ள வயது வந்த குடும்ப அங்கத்தவர்களின் பங்கு | 0-49% | 50-79% | 80-100% | |
| வயது வந்தோர் கல்வி | எல்லா வயது வந்தோரதும் சராசரி கல்வி பெற்றுக்கொண்ட ஆண்டுகள் | 6 இலும் குறைவு | 6 இற்கும் 10 இற்கும் இடையில் | 10 இற்கு கூட | |
| போசணை | தலா வயது வந்தோருக்கு சமனான பரிந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த சக்தி உள்ளெடுப்பு 2030 kcal இற்கு தலா வயது வந்தோருக்கு சமனான சக்தி உள்ளெடுப்பு விகிதம் | 80% இலும் குறைவு | 80-100% இடையே | 100% அல்லது கூட | |
| வீடமைப்பு | நில உரிமை | ஆக்கிரமிக்கப்பட்டது/ ஏனையவை | கூலிக்கு/ குத்தகைக்கு/ கூலி இல்லாத | இறையிலி உரிமை | .2 |
| | வாழ்வோர் | மூன்று அல்லது அதற்கு கூட | இரண்டு குடும்பங்கள் | ஒரு குடும்பம் | .2 |
| | வாழ்விட வகை | சேரி/ சிறு குடில்/ ஏனையவை | கட்டிட பின்னிணைப்பு பகுதி/ நிரை வீடு | தனி பிரிந்த வீடு/ அடுக்கு வீடு | .2 |
| | சன நெருக்கடி: குடும்பத்தின் அளவுக்கு பிரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை | 0.5 இலும் குறைவு | 1 இற்கும் 0.5 இற்கும் இடையில் | 1 அல்லது அதற்கு கூட | .2 |
| | கூரை வகை | ஏனையவை | உலோக தாள்/ கஜான்/ வினைல் தாள்கள் | ஓடு/ எஸ்பெஸ்டஸ்/ கொன்கிரீட் | .05 |
| | சுவர் வகை | சேறு/ கஜான்/ | பதிக்கப்பட்ட மண் | செங்கல்/ சீமெந்து | .05 |

| அடிப்படை தேவைகள் சுட்டி | மாறிகள் | புள்ளி (1 குறிப்பிடத்தக்கது, 2 மிகவும் இழந்தது, 3 ஆகக் குறைந்தது) 1 | 2 | 3 | நிறை |
|---|---|---|---|---|---|
| | | ஏனையவை | அச்சுக்கள்/ பலகை/ உலோக தாள் | அச்சுக்கல்/ கல்/ கபுக்கல் | |
| | தரை வகை | ஏனையவை | புவி/ களி | ஓடுகள் / சீமெந்து | .05 |
| | காற்றோட்டம்: ஒவ்வொரு பிரிக்கப்பட்ட இடத்திற்கும் ஜன்னல்களின் எண்ணிக்கை | 0.5 இலும் குறைவு | 1 இற்கும் 0..5 இற்கும் இடையில் | 1 இற்கு சமனான அல்லது அதற்கு கூட | .05 |
| கழிப்பிட வசதி | ஒரு மலசலகூடத்திற்கான வசதி | ஒன்றுமில்லை | பங்கிடுதல் | பிரத்தியேகமானது | .5 |
| | மலசலகூட வகை | ஏனையவை | கழிவு நீர் குழியுடனான கழிப்பிடம் | நீர் புகாது உறையிடப்பட்டது | .5 |
| நீர் | நீர் மூலம் | பாதுகாப்பற்ற கிணறு அல்லது ஏனையவை | பாதுகாக்கப்பட்ட கிணறு/ கட்டிடத்திற்கு வெளியேயான குழாய் / குழாய் கிணறு | கட்டிடத்திற்குள்ளான குழாய்கள் | |
| சக்தி | ஒளியூட்டலிற்கான சக்தி | மண்ணெண்ணெய், ஏனைய எரிபொருட்கள் | மின்சாரம்-மின்மானியற்றத | பிரதான மின்மானியிலிருந்தான மின்சாரம் | .5 |
| | சமைப்பதற்கான சக்தி | ஏனையவை | விறகு/ மண்ணெண்ணெய் | திரவ பெற்றோலிய வாயு/ மின்சாரம் | .5 |
| பிள்ளைகளின் கல்வி | பாடசாலையில் சேர்க்கப்படல் (SE) | 6 -16 வயதான அனைத்து சிறுவர்களும் பாடசாலையில் சேர்க்கப்படவில்லை | 6 -16 வயதான சில சிறுவர்கள் பாடசாலையில் சேர்க்கப்படவில்லை | 6 -16 வயதான அனைத்து சிறுவர்களும் பாடசாலையில் சேர்க்கப்படல் | .5 |
| | பாடசாலையிலிருந்து விலகுதல் (SD) | 6 -16 வயதான அனைத்து சிறுவர்களும் பாடசாலைக்கு | 6 -16 வயதான அனைத்து சிறுவர்களும் பாடசாலைக்கு சமுகமளிப்பதி | 6 -16 வயதான அனைத்து சிறுவர்களும் பாடசாலைக்கு சமுகமளித்தல் | .5 |

| அடிப்படை தேவைகள் சுட்டி | மாறிகள் | புள்ளி (1 குறிப்பிடத்தக்கது, 2 மிகவும் இழந்தது, 3 ஆகக் குறைந்தது) 1 | 2 | 3 | நிறை |
|---|---|---|---|---|---|
| | | சமுகமளிப்பதில்லை | ல்லை | | |
| சுகாதாரம் | மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ளல் | எப்போதும் முடியாது | சிலநேரம் முடியாது | ஒருபோதும் முடியாதிருந்ததில்லை | |
| இயக்கம் | வாகனத்தின் கிடைக்கற்றகவு (AV) | இல்லை | துவிச்சக்கர வண்டி | மோட்டார் வண்டி/ முச்சக்கர வண்டி/ கார் அல்லத ஏனையவை | .33 |
| | போக்குவரத்தின் வகை (MT) | நடை, ஏனையவை குறிப்பிடுக | பொது போக்குவரத்து (புகையிரதம்/ பேருந்து) | தனியார் போக்குவரத்து (கார் / முச்சக்கர வண்டி/ துவிச்சக்கர வண்டி/ ஏனையவை) | .33 |
| | வேலை தளத்தை அடைய எடுக்கும் நேரம் (TW) | 3 மணத்தியாலத்திலும் கூட | 2-3 மணித்தியாலங்களிற்கிடையில் | 2 மணித்தியாலங்களிலும் குறைவு | .33 |
| தொடர்பாடல் | தொடர்பாடல் | வீட்டு தொலைபேசியோ/ கையடக்க தொலைபேசியோ/ வானொலி/ தொலைக்காட்சியோ இல்லை | வீட்டு தொலைபேசியோ/ கையடக்க தொலைபேசியோ/ வானொலி/ தொலைக்காட்சியோ | வீட்டு தொலைபேசி/ கையடக்க தொலைபேசி/ வானொலி/ தொலைக்காட்சி / இணைய வசதிகள் உண்டு | |
| நிதிசார் ஆற்றல் | சேமிப்பு | ஒன்றுமில்லை | முறைசாரா கடன் குழு | வங்கி அல்லது வேறு முறைசார நிதி நிறுவனங்களில் சேமிப்பு | 0.4 |
| | கடன் அல்லது அடமானத்தின் அளவு | ரூபா 5000 இலும் கூட | ரூபா 5000 மற்றும் குறைவு | ஒன்றுமில்லை | 0.6 |
| பதார்த்த துஷ்பிரயோகம் | பதார்த்த துஷ்பிரயோகம் | குடும்ப வருமானத்தை கடுமையாக | குடும்பத்தில் யாரோ மதுப்பாவனை அல்லது | குடும்பத்தில் யாரும் மது அல்லது | |

| அடிப்படை தேவைகள் சுட்டி | மாறிகள் | புள்ளி (1 குறிப்பிடத்தக்கது, 2 மிகவும் இழந்தது, 3 ஆகக் குறைந்தது) 1 | 2 | 3 | நிறை |
|---|---|---|---|---|---|
| | | பாதிக்குமளவு குடும்பத்தில் யாரோ மதுப்பாவனை அல்லது போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளார். | போதைப் பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளார். ஆனால் இது குடும்ப வருமான ஓட்டத்தை கடுமையாக பாதிக்கவில்லை | போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்படவில்லை | |
| பாதுகாப்பு | பாதுகாப்பு | வருமானமீட்டும் வாய்ப்புக்களை மற்றும்/ அல்லது பிள்ளைகளின் கல்வியை பாதிக்கும் வண்ணம் பாதுகாப்பற்றதாக உணர்தல் | பாதுகாப்பற்றதாக உணர்தல். ஆனால் இது வருமானமீட்டும் வாய்ப்புக்களை மற்றும்/ அல்லது பிள்ளைகளின் கல்வியை பாதிப்பதில்லை | முழுதும் பாதுகாப்பாக உணர்தல் | |

ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் வறிய மக்களை இனங்காண்பதற்கு தனி தகைமை எல்லையொன்றுடன் ஒரு பரிமாண சுட்டியை பயன்படுத்துவது அல்லது பல தகைமை எல்லைகளுடன் பல காட்டிகளை பயன்படுத்துவது பொதுவானதாகும். தனி-பரிமாண செய்முறையில் நல்வாழ்வின் பல காட்டிகள் இணைக்கப்பட்டு ஒரு தனி கூட்டு சுட்டியுள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு காட்டி கூறினதும் வெட்டுப்புள்ளி மட்டங்களின் அடிப்படையில் இக்கூட்டு திரட்சியின் வறுமை வெட்டுப்புள்ளி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விணைப்பு முறை குடும்பம் குறைந்தது ஒரு தனி பரிமாணத்தினை இழந்திருப்பினும் அதனை பல்-பரிமாண வறிய நிலையிலேயே கருதுகின்றது. இடைவெட்டு செயன்முறையில் ஒரு குடும்பம் வறியவர்களாக இனங்காணப்படுவதற்கு எல்லா பரிமாணங்களையும் இழந்திருக்க வேண்டும். இணைப்பு அணுகுமுறை வறுமையை கூட்டி அளவிடுவதற்கு இட்டுச் செல்வதுடன் இடைவெட்டு அணுகுமுறை வறுமையை குறைத்து அளவிடலிற்கு இட்டுச் செல்கின்றது. இங்கு நாம் பல்-பரிமாண சூழலில் வறுமையை மதிப்பிடுவதற்காக இரண்டு முறைகளை பயன்படுத்துகின்றோம். ஒரு தனி தகைமை எல்லையுடனான அலகு-பரிமாண சுட்டி மற்றும் குறிப்பிட்ட எண்ணிக்கையான பரிமாணங்களை இழந்திருக்கும் போது ஒரு குடும்பம் வறியவர்களாக இனங்காணப்படுகின்ற அல்கைரே மற்றும் பொஸ்டர் (2007) இனால் அறிமுகப்படுத்தப்பட்ட எண்ணும் செயன்முறையிலான ஒரு மாறுபட்ட முறை என்பனவே அவையாகும்.

### 4.1.2 ஒரு அலகு-பரிமாண சுட்டியின் பிரயோகம்

இழப்பிலான பரந்த அளவீடானது இழப்பிற்காக கருதப்படுகின்ற பரிமாணங்களை பிரிதிநிதித்துவப்படுத்துகின்ற சமஅளவு நிறை வழங்கப்பட்ட உப காட்டிகளின் ஒரு திரண்ட சுட்டியாகும். உப காட்டிகளாவன கவனத்தில் கொள்ளப்பட்ட பரிமாணங்களுடன் தொடர்பான குறிப்பிட்ட மாறிகளின் திரண்ட காட்டிகளாகும் (அட்டவணை 6ஐ பார்க்க). எமது ஆய்வின் மாதிரி

அளவு சிறியதாக இருப்பதானது நிறைகளைக் கணிப்பிடுவதில் தலைமைக் கூறு/ காரணி பகுப்பாய்வு போன்ற ஒரு புள்ளிவிபரவியல் நுட்பத்தினூடாக தரவுகளின் அடிப்படையை எடுப்பதை விட்டும் தடுக்கின்றது. இழப்பின் மட்டத்தை மதிப்பிடுவதற்கு, ஓரளவு திருப்திகரமான பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ முடியுமான நல்வாழ்வின் ஒரு அடிப்படை மட்டத்தை சுட்டிக் காட்டுகின்ற '2' எனும் பெறுமதியைக் காட்டி எடுக்கும் புள்ளியில் இழப்பு கோட்டிற்கான வெட்டுப்புள்ளி அல்லது தகைமை எல்லை அமைக்கப்பட்டுள்ளது.

### 4.1.3 எண்ணும் முறையின் பிரயோகம்

நாம் ஒவ்வெரு பரிமாணத்திற்கும் ஒரு வெட்டுப்புள்ளி அமைக்கப்பட்டுள்ள மற்றும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ள எல்லா பரிமாணங்களும் தொடர்பாக குடும் இழப்பு மட்டம் மதிப்பிடப்படுவதுமான ஒரு செயன்முறையினை ஆராய்கின்றோம். பரிமாணங்களிற்கு சம அளவு நிறை கொடுக்கப்படும் போது, வெட்டுப்புள்ளியானது ஒரு குடும்பம் வறியதாக கருதப்படுவதற்கு இழந்திருக்க வேண்டிய பரிமாணங்களின் எண்ணிக்கையாகும். நாம் ஒரு குடும்பம், பல்-பரிமாண விதத்தில் வறிய நிலையில் உள்ளதாக கருதப்படுவதற்கு இழந்திருக்க வேண்டிய பரிமாணங்களின் எண்ணிக்கையை தருகின்ற வெட்டுப்புள்ளிகளை 'k' என அமைத்து k இற்கு பல பெறுமதிகளை ஆராய்கின்றோம் (பகுதி 4.2.3).

### 4.1.4. கணிப்பீட்டாய்வு மாதிரியும் தரவுகளும்

இக்காட்டிகளின் நிறுவுதலானது ஒரு கணிப்பீட்டாய்விலான வினாக்கொத்தினூடாக (பின்னிணைப்பு 1) சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலானதாகும். இக்கணிப்பீட்டாய்வு கொழும்பு மாவட்டத்தின் நோக்கத்துடன் தெரிவு செசய்யப்பட்ட ஒரு தொகுதி மாதிரி குடும்பங்களிற்கான விஜயங்களினூடாக செய்யப்பட்டது.

கொழும்பு மாவட்டத்துள் திம்பிரிகஸ்யாய நிர்வாக உப-பிரிவு (திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவு) தெரிவு செய்யப்பட்டது. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் முழு குடித்தொகையினரும் நகர்ப்புறவாசிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒரு தாழ் நுகர்வு வறுமை மட்டத்தையும் உயர் UBNI பெறுமானத்தையும் கொண்டுள்ளது.

2002 HIES தரவுகளின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்துள் 12.1 சதவீத வறுமை மட்டத்தையும் கொண்ட கொழும்பு பிரதேச செயலகப் பிரிவு போன்ற ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளின் வறுமை மட்டங்களுடன் ஒப்பிடும் போது 4.4 சதவீத தாழ்ந்த தலைக்கணிப்பு சார் வறுமைச் சுட்டியுடன் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவு உள்ளது. ஒரு தாழ்ந்த வறுமை மட்டத்துடன் உள்ள பிரதேச செயலகப் பிரிவினை தெரிவு செய்தலானது தாழ்ந்த மட்ட நுகர்வு வறுமையுடனான ஒரு நகர்ப்புற குடித்தொகையினை கண்டுபிடிப்பதன் நிகழ்தகவினை அதிகரிக்கும். எமது மாதிரி வெறும் 20 குடும்பங்களாக இருந்ததனால் எமக்கு ஒரு மூன்றாம் மட்ட தெரிவுக்கு குறுக்க வேண்டிய தேவையிருந்தது.

பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றுமொரு உப நிர்வாக அலகான கிராம சேவகர் பிரிவுகளை (GNDS) கொண்டிருந்தன. கிராம சேவக பிரிவு மட்டங்களிற்கு தலைக்கணிப்புசார் சுட்டிகள் பிரசுரிக்கப்படவில்லை. ஆனால் UBNI பெறுமானங்கள் கிராம சேவகர் பிரிவுகளிற்கு பிரசுரிக்கப்பட்டன (DCS, 2007). இங்கு நாம் எமது தெரிவினை UBNI இனது அடிப்படையில் செய்ததுடன் உயர் திருப்தியடையாத அடிப்படைத் தேவைகள் மட்டத்துடனான கிராம சேவகர் பிரிவு தெரிவு செய்யப்பட்டது. இவ்வாறான ஒரு தெரிவானது எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட ஒரு குடும்பம் அதிகாரபூர்வ வறுமைக் கோட்டிற்கு மேலே அமையவும் ஆனால் உயர்ந்தளவு திருப்தியடையாத அடிப்படைத் தேவைகள் கொண்டதாக அமையவுமான நிகழ்தகவினை அதிகரிக்கும். நாம் இந்நிலைமைகளைத் திருப்திப்படுத்தும் கிராம சேவகர் பிரிவாக தெமட்டகொடவினைத் தெரிவு செய்தோம். 3368 வீட்டலகுகளையும் இதேயளவு குடும்பங்களையும் கொண்ட இக்கிராம சேவகர் பிரிவினுள் 20 குடும்பங்களை தெரிவுசெய்ய வேண்டியிருந்தது. ஒரு எழுமாறான தெரிவு புவியியல் ரீதியாக பரந்த ஒரு மாதிரியை பெற்றுக்கொள்ள வழி செய்யும். எனவே நாம் கிராம சேவகர் பிரிவின் நிர்வாகத் தொழிற்பாடுகளிற்கு பொறுப்பான அரச அதிகாரியான கிராம சேவகரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் 20 குடும்பங்களைக் கொண்ட ஒரு தொகுதியை தெரிவு செய்வதற்கு தீர்மானித்தோம். நாம் 25 குடும்பங்களைக் கொண்ட ஒரு தொகுதியை கணிப்பீட்டாய்வுக்கு உட்படுத்தி கொழும்பிற்கான அதிகாரபூர்வ வறுமைக் கோட்டிற்கு மேலான 20 குடும்பங்களை தெரிவு செய்தோம்.

## 4.2 பகுப்பாய்வு

கணிப்பீட்டாய்வானது 2011 ஜுலை மாதம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது மே 2011 இற்கான கொழும்பின் அதிகாரபூர்வமாக பிரசுரிக்கப்பட்ட மிக அண்மைய வறுமைக் கோடானது ஒரு மாதத்திற்கு தலா ரூ.3578 செலவு[10] என்பதாகும். இது ஒரு மாதாந்த குடும்ப செலவு தகைமை

எல்லையான ரூபா. 14,312 உடன் ஒத்திசைவதுடன் இரண்டாவது வருமான தசகத்தினுள் அமைகின்றது[11].

### 4.2.1. தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களின் முகக்குறிப்பு

**செலவு**

தேசிய நகர்ப்புற துறையின் மாதாந்த குடும்பச் செலவு[12] தசகங்களின் படியான மாதிரிக் குடும்பங்களின் பரம்பல் எமது மாதிரி குடும்பங்களில் 65 சதவீதமானோர் இரண்டாம் மற்றும் நான்காம் தசகங்களுள் அமைவதாகவும் 15 சதவீதம் 5வது தசகத்தினுள்ளும் 20 சதவீதம் 6வது தசகத்தினுள்ளும் அமைவதாக காட்டுகின்றது (அட்டவணை 7).

உணவு மற்றும் உணவற்ற பொருட்களிலான சராசரி மாதாந்த குடும்பச் செலவு ரூபா. 25,561[13] ஆகும். 43 சதவீதமானோர் தேசிய நகர்ப்புற பிரிவின் மாதாந்த குடும்பச் செலவான ரூபா. 44,928 இலும் குறைந்த மாதாந்த குடும்ப செலவை கொண்டுள்ளனர். சுமத்தப்படுகின்ற கூலிகளின்றி சராசரி செலவு ரூபா 25,141 ஆகும். மாதிரி குடும்பங்களிலான உணவு விகிதம் (மொத்த செலவுக்கு உணவிற்கான செலவு) 77 சதவீதமாகும். இது 2009/10 HIES இனது அடிப்படையில் கணிக்கப்பட்ட மொத்த நகர்ப்புற பிரிவின் உணவு விகிதமான 34.4 சதவீதத்தின் இரு மடங்கிலும் அதிகமாகும்.

---

[10]இது DCS இனால் ரூபா 3476 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எமது கற்கையில் நாம் மூல பெறுமதியான ரூபா 3578 இனையே பயன்படுத்தியுள்ளோம்.

[11]தரவுகள் சேகரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட வினாக்கொத்து பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது. தரவுகள் ஜுலை மாதம் இரண்டாம் வாரம் சேகரிக்கப்பட்டன. உணவு நுகர்வு அளவு மற்றும் பெறுமதியிலான தரவுகளின் ஆரம்ப ஆய்வு அலகு விலைகளில் ஏற்றுக்கொள்ள முடியாதளவு மாறுபாடுகளை காட்டின. எனவே நுகரப்பட்ட எல்லா உணவுகளும் ஜுலை முதலாம் வாரம் DCS இனால் சேகரிக்கப்பட்ட கொழும்பின் திறந்த சந்தை சில்லறை விலைகளினை பயன்படுத்தி பெறுமானம் காணப்பட்டன. விலை கணிப்பீட்டுக்காக ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சந்தைகள் கணிப்பீட்டாய்வு மாதிரி குடும்பங்களிற்கான பிரதான சந்தையான தெமடகொட சந்தையை உள்ளடக்கியது.

நுகரப்பட்ட தயாரிக்கப்பட்ட உணவுககள் (பனிஸ்கள், இடியப்பம் போன்றன), சுவையூட்டிகள் மற்றும் ஏனைய பல சில்லறை பொருட்கள் (உதாரணமாக, பிஸ்கட்கள், இனிப்புக்கள், ஏனைய குடிபானங்கள்) தொடர்பாக தரவுகள் கூட பதில்கள் திருப்திகரமானவையென காட்டவில்லை. எனவே DCS இனது HIES 2009/10 கண்டுபிடிப்புகளின் அடிப்படையிலான 34.8 சதவீதம் என்பது கணப்பீட்டாய்விலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உணவு நுகர்வின் மொத்த பெறுமதிக்கு சேர்க்கப்பட்டது. குடும்ப அங்கத்தவர்களிடையே நுகர்வில் மாறுபாடுகள் காணப்படுவதாலும், பொருளாதார வசதிகளிற்கேற்ப நுகர்வு வெவ்வேறு அளவுகளில் காணப்படுவதாலும் தலைக்குரிய நுகர்வு செலவினை கணிப்பதில் குடும்ப நுகர்வு செலவினை கணிப்பதில் குடும்பத்தின் அளவினால் பிரிப்பது பொருத்தமானதல்ல. வழக்கமாக இதற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படுவது வயது வந்த நபரொருவருக்கு சமனான அளவுத்திட்டத்தினை பயன்படுத்தி வயது வந்த நபரொருவருக்கு சமனான செலவினை கணிப்பதாகும். ஆசியாவின் வாழ்க்கைத் தரங்கள் விசாரியா (1980) ஆய்வானது தலைக்குரிய செலவினை பயன்படுத்துவதிலும் பயன்படுத்தப்பட்ட சமனான அளவுத்திட்டங்கள் குடும்பங்களை சமஅளவு தரப்படுதுகின்றன என காட்டுகின்றன. நாம் தெரிவு செய்த வயது வந்த நபருக்கு சமனான நிறைகள் வறுமை கணிப்பீடுகளை பாதிக்கவில்லை எனில் நிறை வழங்கப்பட்ட செயன்முறையின் விளைவாக வறுமை கணிப்பீடுகளில் பாரபட்சம் ஏற்படவில்லை என கூறலாம் என குறிப்பிடுவதுடன் வயது வந்த நபரொருவருக்கு சமனான அளவுத்திட்டம் பயன்படுத்தப்படுவது கட்டாயமானதல்ல எனவும் குறிப்பிடுகின்றது.

[12] சராசரி பணம் செலுத்துதல்களின் அடிப்படையில் சுமத்தப்பட்ட கூலியுடன்

[13] சுமத்தப்பட்ட கூலியுடன்

20 மாதிரி குடும்பங்களுள் 7 குடும்பங்கள் ஆக்கிரமித்தவர்களாக எவ்வித கூலியும் செலுத்தாது இருந்தனர். கூலியற்ற குடும்பங்களின் உணவு விகிதம் 80 சதவீதமாகவும்[14] கூலி செலுத்தும் குடும்பங்களின் உணவு விகிதம் 76 சதவீதமாகும். மீதி 11 குடும்பங்களும் சட்டபூர்வ வாடகை குடியிருப்பாளர்களாக அரச தொடர்மாடிகளில் சந்தை விலையிலும் மிகவும் குறைவான ஒரு கூலியை செலுத்துகின்றனர். HIES 2009/10 இனடிப்படையில், உணவற்ற செலவினுள் சராசரி வீடமைப்பு செலவின் பங்கு 27 சதவீதமாகும். எமது மாதிரியில் இது வெறும் 9 சாவீதமாகும். நாம் கண்ட மிகக் குறைந்த உணவற்ற விகிதமானது பல மாதிரி குடும்பங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் கூலி செலுத்தாது வாழும் குடும்பங்களாக இருந்ததால் அல்லது குறைந்த கூலியை செலுத்துகின்ற அரச வீடமைப்புகளில் வாழ்வதன் காரணமாக இருக்கலாம்[15]

**அட்டவணை 7: தேசிய நகர்ப்புற மாதாந்த குடும்ப செலவு தசகங்களினால் மாதிரி குடும்பங்களின் பரம்பல்**

| தசகம் | தேசிய நகர்ப்புற பிரிவு, HIES 2009/2010[1] அடிப்படையில் செலவு தசகங்கள் | நகர்ப்புற பிரிவு, HIES 2009/2010 அடிப்படையில் குடும்ப செலவின் இடை | தசகங்களுள் மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை | மாதிரியின் அடிப்படையில் குடும்ப செலவின் இடை |
|---|---|---|---|---|
| | எல்லாம் | 44928 | 20 | 25561 |
| 1 | 15763 இலும் குறைவு | 12109 | - | - |
| 2 | 15763-20794 | 18221 | 6 | 17577 |
| 3 | 20794-25125 | 23162 | 4 | 23609 |
| 4 | 25125-29161 | 27059 | 3 | 26454 |
| 5 | 29161-34039 | 31420 | 3 | 30757 |
| 6 | 34039-40136 | 37064 | 4 | 34922 |
| 7 | 40136-46320 | 42984 | - | - |
| 8 | 46320- 58468 | 51834 | - | - |
| 9 | 58468- 79027 | 66725 | - | - |
| 10 | 79027 இலும் கூட | 139209 | - | - |

குறிப்பு: நிரல்கள் (2) மற்றும் (3) என்பன DCS (2011a) இலிருந்து மற்றும் (4) மற்றும் (5) என்பன மாதிரி கற்கையின் அடிப்படையில்

**வருமானம்**

மாதிரி குடும்பங்களின் சராசரி மாதாந்த வருமானம் ரூபா 15,466 ஆகும். இது தேசிய நகர்ப்புறத் துறை குடும்ப வருமான பரம்பலின் 2வது தசகத்துள் வருகின்றது. மாதிரி குடும்பங்களுள் 90 சதவீதமானவற்றிற்கு அவர்களது கணிப்பிடப்பட்ட மாதாந்த குடும்ப செலவானது குறிப்பிடப்பட்ட மொத்த வருமானத்திலும் கூடுதலாக உள்ளது. சராசரி வித்தியாசம் ரூபா 10,000 இன் வரிசையில் இருந்தது[16]. பெரும்பாலான குடும்பங்கள் (80 சதவீதம்) கடனில், சராசரியாக ரூபா 40,000 மேலதிக கடன் தொகையுடன் உள்ளன. இந்நிலைமை ஒரு தாழ் வருமான மட்டத்துடன் இக்குடும்பங்கள் அவர்களது செலவுகளை எவ்வாறு சந்திக்கின்றனர் என்பதை பகுதியாக விளக்குகின்றது. 20 குடும்பங்களுள் 13 உணவு நுகர்வு அவசர தேவைகளிலிருந்து தனியார் தொழிற்பாடுகள் வரையான பல்வேறு காரணங்களிற்காக ரூபா 5000 முதல் ரூபா 150,000 வரை வீச்சில் அடைமானம் அல்லது கடன்களைப் பெற்றுள்ளனர்.

---

[14] கூலி சுமத்தப்படாது

[15] HIES 2009/10 அடிப்படையிலான நகர்ப்புற பிரிவு தலைக்குரிய செலவிலான தசகங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

[16] நிரந்தர வருமான கருதுகோள் குறிப்பிடுவதானது செலவழிக்கப்படுகின்ற வருமானத்தில் ஆண்டுகளினூடாக மாறுகின்றவிடத்து காலத்தினூடாக நுகரப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளிலிருந்து உருவாக்கப்படுகின்ற குடும்பத்தின் சராசரி நல்வாழ்வு மட்டம் குறித்த ஆண்டினது வருமானத்துடன் பொருந்துவதில்லை (டேடன் மற்றும் முஎல்போர் (1980) க்ளெவ் 1985 இலிருந்து).

இருந்தாலும் தமது வருமானத்தைக் குறைத்து குறிப்பிடுகின்ற குடும்பங்களின் போக்கு கணிப்பீட்டு விஜயங்களின் போது தெளிவாக அவதானிக்கப்பட்டது. பல குடும்பங்கள் தற்போது தமக்கு கிடைத்துக் கொண்டிருக்கின்ற அல்லது கிடைக்கக்கூடிய சமூக நன்மைகளை இழந்து விடுவோமோ என்ற பயத்தினில் தமது உண்மை வருமானத்தை குறிப்பிடுவதை தவிர்ந்து கொண்டன.

20 குடும்பங்களுள் 15 பல வருமான முதல்களை கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்பது குடும்பங்கள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான முதல்களைக் கொண்டிருந்தன. எனினும் இவற்றுள் பெரும்பாலானவை தற்காலிகமானவையாக அல்லது உறுதியற்றவையாக இருந்தன. கொழும்பில் போதிய சேவைகள் வழங்கப்பெறாத குடியேற்றங்களிலான ஆய்வு (குணதிலக, காதர் மற்றும் பெர்னான்டோ 2004), குடும்ப மட்டத்தில் வறுமையானது வருமானமீட்டும் ஆற்றல் தொடர்பாகவே காணப்பட்டது என்பதை வெளிக்காட்டியது. எமது கணிப்பீட்டாய்விலுள்ள குடும்பங்கள் வருமான அளவிலும் கூடுதலாக வருமான உறுதிப்பாட்டினையே கருத்தில் கொண்டன. குடும்பங்கள் வருமானத்தின் உறுதிப்பாட்டினை பல்வேறு வருமான முதல்களை கொண்டிருத்தல் என நோக்கியது. பல்வேறு வருமான முதல்களைக் கொண்டிருத்தலானது நிதி தொடர்பான பலவீனமான தன்மையை எதிர்கொள்வதற்கான ஒரு உத்தியாக கருதப்பட்டது.

80 சதவீதத்திற்கும் மேதிகமான மாதிரி குடும்பங்களில் அரைவாசி அல்லது அதற்கு மேலதிகமான வயதுவந்த குடும்ப உறுப்பினர்கள் தொழில் புரிவோராய் இருந்தனர். மாதிரியினுள் ஏறத்தாழ அனைவரும் தற்காலிக ரீதியிலேயே, எந்தவித தொழில் பாதுகாப்பும் இன்றி வேலை செய்தனர். இது உயர் மட்ட தொழில் ரீதியான பலவீனமான தன்மையை காட்டுகின்றது. வயதுவந்த குடும்பத்தினர்கள் சராசரியாக பாடசாலைக்கு ஆறு வருடங்களே சென்றவர்களாக இருந்தனர். இது பெரும்பாலானோர் முதல்நிலை கல்வியை மாத்திரமே கொண்டுள்ளனர் என காட்டுகின்றது. இரண்டு குடும்பங்கள் மாத்திரம் பத்து வருடங்களிற்கு மேலான பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொண்ட வயது வந்தோரை உள்ளடக்கியிருந்தது. வயது வந்தோரது குறைந்த கல்வி மட்டம் அவர்களால் உயர் சம்பளம் வழங்குகின்ற மற்றும் உறுதியான தொழில்களை பெற்றுக்கொள்ள முடியாமையை பகுதியாக விளக்குகின்றது. இருந்தாலும் மாதிரி குடும்பங்களில் உள்ள அனைத்து பாடசாலை செல்லும் வயதிலுள்ள சிறுவர்களும் பாடசாலைக்கு சேர்க்கப்பட்டுள்ளதுடன் மாதிரியுள் ஒரேயொரு பிள்ளையே விலகியவராக காணப்பட்டது.

**போசணை மற்றும் சுகாதாரம்**

மாதிரி குடும்பங்களிற்கான சராசரி போசணை சக்தி நுகர்வு நாளொன்றுக்கு தலா 3115 கிலோ கலோரிகளாகவும், ஒரு வயது வந்த நபருக்கு சமனான உள்ளெடுப்பு 4361 கிலோ கலோரியுமாகும். தலா உள்ளெடுப்பானது பரிந்துரைக்கப்பட்ட அதிகுறைந்த சக்தி உள்ளெடுப்பிலும் 50 சதவீதம் உயர்வாகும் என்பதுடன் வயது வந்த நபரொருவருக்கு சமனானது இரண்டு மடங்கிலும் அதிகமாகும். வயது வந்த நபரொருவருக்கு சமனான சக்தி உள்ளெடுப்பை கருத்தில் கொள்ளும் போது கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்ட யாரும் 2030 கிலோ கலோரிகள் எனும் பரிந்துரைக்கப்பட்ட அளவிலும் குறைவாக காணப்படவில்லை. தலா உள்ளெடுப்பினை கருதுகையில் பரிந்துரைக்கப்பட்ட அதிகுறைந்த அளவிலும் குறைவாக நுகர்கின்ற ஒரேயொரு குடும்பம் காணப்பட்டது.

எல்லா மாதிரி குடும்பங்களுமே தாம் நிதிசார் பிரச்சினைகள் காரணமாக மருந்துகளை பெற்றுக்கொள்ள அல்லது மருத்துவ பரிசோதனைகளை செய்துகொள்ள முடியாத கஷ்டமான நிலைமைகளிற்கும் சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ள மட்டுப்படுத்தப்பட்ட வழிகளைக் கொண்ட நிலைமைகளிற்கும் முகம் கொடுப்பதாக குறிப்பிட்டன. 50 சதவீதத்திற்கு அதிகமான குடும்பங்கள் தாம் மருத்துவ அவசர தேவைகளிலான நேரங்களில் செலவுகளை செய்து கொள்வதற்காக நிதிசார் கடன்களை பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாக சுட்டிக்காட்டின.

**வீடமைப்பு, நீர், கழிப்பிட வசதி மற்றும் சக்தி**

எமது மாதிரியில் ஏறத்தாழ எல்லா வீடுகளும் தொடர் மாடிகளில் அமைந்ததாக, சேரிகளாக அல்லது சிறு குடில்களாக இருந்தன. 20 குடும்பங்களுள் 11 அரசாங்கத்திற்கு ஒரு மாதாந்த கூலியை செலுத்தும் சட்டபூர்வ குடியிருப்பாளர்களாக அரசுக்கு சொந்தமான தொடர்மாடிகளில் வசிக்கின்றன. இத் தொடர் மாடிகள் இலங்கை அரசின் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டு சந்தை வீதத்திலும் மிகவும் குறைந்த வீதத்திலான கூலியுடன் வழங்கப்படுகின்றன. ஏனைய குடும்பங்கள் சேரிகள் அல்லது சிறுகுடில்களில் அல்லது சட்டபூர்வ உரிமைப் பாத்தியதைகள் எதுவுமின்றி முன்னைய பரம்பரைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வாழ்ந்து வருகின்ற ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வாழ்கின்றன.

தொடர் மாடி வீட்டு அலகுகள் செங்கல் மற்றும் சீமெந்திலான தரையையும் சீமெந்து பூசப்பட்ட தரையையும் கொங்கிறீட்டினாலான கூரையையும் கொண்டிருந்தன. சேரி வீடுகள் அல்லது சிறுகுடில்கள் செங்கல், சீமெந்து அச்சுக்கல் அல்லது பலகையாலான சுவர்கள், ஒரு சில அழுத்தமற்ற சீமெந்து தரையை கொண்டனவாக, கூரை எஸ்பெஸ்டஸ் தாள், உலோக தாள்கள் அல்லது கஜானினால் ஆக்கப்பட்டவையாக இருந்தன.

மாதிரிகளில் நான்கினில் சனநெருசல் ஒரு பிரச்சினையாக, ஓரே தனி வீட்டலகு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான குடும்பங்களால் பகிரப்படுவதாக காணப்பட்டது. 10 சம்பவங்களில் ஒரே வீட்டலகு இரண்டு குடும்பங்களால் பகிரப்பட்டு காணப்பட்டன. 20 மாதிரிகளில் நான்கில் குடும்பத்தின் அளவிற்கு பிரிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை எனும் விகிதமானது 0.5 இலும் குறைவாக காணப்பட்டது.

அவர்களது பல்வேறுபட்ட குடியிருப்பு உரிமைகளையும் நிலைமைகளையும் விடுத்து கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து வீடுகளும் கொழும்பு மாநகர சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகினற பிரதான நீர் வழியிலிருந்து குழாய் நீர் சேவையை பெறுவனவாக இருந்தன.

சட்டபூர்வான விதத்திலோ அல்லது சட்டவிரோதமான வழியிலோ மாதிரிக் குடும்பங்களுள் ஒன்றைத்தவிர ஏனையவை அனைத்தும் தமது கட்டடங்களுள் உள்ளேயே குழாய் நீரைப் பெற்றுக்கொள்ளும் வழிகளைக் கொண்டிருந்தன. எல்லா குடும்பங்களும் நீர்-போகாது உறையிடப்பட்ட மலசலகூட வசதிகளை பெற்றுக்கொண்டிருந்தன. ஆனால் 30 சதவீதத்திற்கும் மேலதிகமானவை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வீடுகளுடன் பகிர்ந்து கொள்வனவாக இருந்தன. 17 குடும்பங்கள் சட்டபூர்வ வழியில் அல்லது சட்டவிரோதமான வழியில் மின்சார வசதிகளைப் பெற்றுக்கொண்டிருந்தன. ஆனால் 16 குடும்பங்கள் செலவு காரணமாக சமையலிற்காக மண்ணெண்ணெய் அல்லது விறகினை பயன்படுத்தின.

**இயக்கப்பாடும் தொடர்பாடலும்**

எமது மாதிரியில் 15 குடும்பங்கள் எந்தவொரு சொந்த வாகனத்தையும் கொண்டிருக்கவில்லை. பெரும்பாலானவை தமது வேலைத்தளங்களிற்கு செல்வதற்கான பொதுமக்கள் போக்குவரத்தினையே பயன்படுத்தின. தமது வேலைத்தளத்தினை சென்றடைவதற்கு எடுக்கும் சராசரி நேரம் ஒரு மணித்தியாலத்திலும் குறைவாகும். போக்குவரத்திலான சராசரி செலவு உணவற்ற நுகர்வுச் செலவினது 11 சதவீதமாக இருப்பதுடன் இது தேசிய நகர்ப்புற பிரிவின் பங்கான 17 சதவீதத்திலும் மிகவும் குறைவாகும். 18 குடும்பங்களில் குறைந்தது ஒரு நபர் மாதத்திற்கு ஏறத்தாழ ரூபா 200 செலவழித்தவராய் ஒரு கையடக்க தொலைபேசியை வைத்திருந்தார். ஏறத்தாழ கால்வாசி குடும்பங்களே ஒரு வானொலி அல்லது ஒரு தொலைகாட்சியை பெற்றுக்கொண்டோராய் இருந்தனர்.

**பாதுகாப்பும் நல்வாழ்வும்**

எந்தவொரு குடும்பமும் தமது வருமானம் அற்ககோல் பாவனை அல்லது போதைப் பொருட் பாவனை நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. யாரும் போதைப்பொருள் வலையமைப்புகள், அரசியல் எதிரிகள் அல்லது ஏனையோரால் தீவிர பாதுகாப்பின்மை உள்ளதாக சுட்டிக் காட்டவில்லை. கணிப்பீட்டு மாதிரியில் 40 சதவீதமான குடும்பங்கள் சிங்களவர்களாக, 35 சதவீதமானவை தமிழ் மக்களாக 25 சதவீதமானோர் முஸ்லிம்களாக ஒற்றுமையாக வாழக் காணப்பட்டனர். அரைவாசிக்கும் மேலான குடும்பங்கள் தாம் பசியின்றி, தமது பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழிற் சந்தைகளை பெற்றுக்கொள்ள போதிய வழிகளுடனுள்ளதால் தாம் மத்திம தர நல்வாழ்வினைக் கொண்டுள்ளதாக சுட்டிக் காட்டின. இழப்பு மட்டங்களுடன் குடும்பங்களின் எண்ணிக்கை அட்டவணை 8 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 8 : இழப்பு புள்ளிகளின் படி மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை**

| **அடிப்படை தேவைகள் காட்டி (உப காட்டிகள்)** | **மாறிகள்** | **புள்ளி (1 மிகவும் இழந்த நிலை, 3 மிகவும் குறைந்த இழப்பு நிலை)** | | |
|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** |
| வருமானம் | வருமானத்தின் அளவு: நகர்ப்புற வருமான தசகங்களில் குடும்பத்தின் நிலை | 15 | 5 | 0 |
| | வருமான முதல்கள்: வருமான முதல்களின் எண்ணிக்கை | 5 | 6 | 9 |
| தொழில் | தொழிலில் ஈடுபட்டுள்ள வயது வந்த குடும்ப அங்கத்தவர்களின் பங்கு | 4 | 15 | 1 |
| வயது வந்தோர் கல்வி | எல்லா வயது வந்தோரதும் சராசரி கல்வி பெற்றுக்கொண்ட ஆண்டுகள் | 11 | 7 | 2 |
| உணவு – சக்தி உள்ளெடுப்பு | தலா வயது வந்தோருக்கு சமனான பரிந்துரைக்கப்பட்ட ஆகக் குறைந்த சக்தி உள்ளெடுப்பு 2030 kcal இற்கு தலா வயது வந்தோருக்கு சமனான சக்தி உள்ளெடுப்பு விகிதம் | 0 | 0 | 20 |
| வீடமைப்பு | நில உரிமை | 7 | 13 | 0 |
| | வாழ்வோர் | 4 | 10 | 6 |
| | வாழ்விட வகை | 8 | 0 | 12 |
| | சன நெருக்கடி: குடும்பத்தின் அளவுக்கு பிரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை | 4 | 11 | 5 |
| | கூரை வகை | 0 | 6 | 14 |
| | சுவர் வகை | 0 | 2 | 8 |
| | தரை வகை | 0 | 5 | 15 |
| | காற்றோட்டம்: ஒவ்வொரு பிரிக்கப்பட்ட இடத்திற்கும் ஜன்னல்களின் எண்ணிக்கை[17] | | | |
| கழிப்பிட வசதி | ஒரு மலசலகூடத்திற்கான வசதி | 0 | 7 | 13 |
| | மலசலகூட வகை | 0 | 0 | 20 |
| நீர் | நீர் மூலம் | 0 | 1 | 19 |
| சக்தி | ஒளியூட்டலிற்கான சக்தி | 3 | 0 | 17 |
| | சமைப்பதற்கான சக்தி | 0 | 16 | 4 |
| பிள்ளைகளின் கல்வி | பாடசாலையில் சேர்க்கப்படல் (SE) | 0 | 0 | 20 |
| | பாடசாலையிலிருந்து விலகுதல் (SD) | 0 | 1 | 19 |
| சுகாதாரம் | மருத்துவ சிகிச்சையை பெற்றுக்கொள்ளல் | 6 | 14 | 0 |
| இயக்கம் | வாகனத்தின் கிடைக்கற்றகவு (AV) | 15 | 4 | 1 |
| | போக்குவரத்தின் வகை (MT) | 1 | 17 | 2 |
| | வேலை தளத்தை அடைய எடுக்கும் நேரம் (TW) | 1 | 4 | 15 |
| தொடர்பாடல் | தொடர்பாடல் | 2 | 13 | 5 |
| நிதிசார் அழுத்தம் | சேமிப்பு | 12 | 1 | 7 |
| | கடன் அல்லது அடமானத்தின் அளவு | 13 | 4 | 3 |
| பதார்த்த துஷ்பிரயோகம் | பதார்த்த துஷ்பிரயோகம் | 0 | 1 | 19 |
| பாதுகாப்பு | பாதுகாப்பு | 0 | 1 | 19 |

[17] தரவுகளின் திருத்தமின்மை காரணமாக இம்மாறி கணிப்பீடுகளில் பயன்படுத்தப்படவில்லை.

#### 4.2.2. தனிப்பரிமாண சுட்டியின் அடிப்படையில் வறுமை நிகழ்வு

இப்பிரிவில் நாம் இழப்பின் பரந்த பரிமாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உப-காட்டிகளின் ஒரு கூட்டு காட்டியை ஆராய்கின்றோம். உப காட்டிகளாவன மேலே கலந்துரையாடப்பட்ட பரிமாணங்களைத் தொடர்புபடுத்தும் குறித்த கூறுகளின் கூட்டு காட்டிகளாகும். இழப்பு கோட்டிற்கான வெட்டுப்புள்ளி ஒவ்வொரு காட்டியும் ‘2’ எனும் பெறுமதியைக் கொண்ட புள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது. ‘2’ பெறுமதி எனும் அடிப்படை மட்ட நல்வாழ்வினைக் குறிப்பதாகும். இது ஒரு மொத்த இழப்பு தகைமை எல்லை அல்லது வெட்டுப்புள்ளி 2 இனை தருகின்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வெட்டுப்புள்ளி 2 உடன் உபகாட்டிகளாக பெறுமதியின் ஒப்பீடானது வருமானம், வயதுவந்தோர் கல்வி, வீடமைப்பு மற்றும் நிதிசார் ஆற்களில் குறிப்பிட்ட அளவான இழப்பினைக் காட்டுகின்றது (அட்டவணை 9).

**அட்டவணை 9 : ஒவ்வொரு காட்டிக்கும் இழப்புற்றுள்ள மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை**

| உப காட்டி | தகைமை எல்லை ‘2’ இற்கு கீழே உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| வருமானம் | 11 |
| தொழில் | 4 |
| வயது வந்தோர் கல்வி | 11 |
| உணவு சக்தி உள்ளெடுப்பு | 0 |
| வீடமைப்பு | 8 |
| கழிப்பிட வசதி | 0 |
| நீர் | 0 |
| சக்தி | 2 |
| சிறுவர்களின் கல்வி | 0 |
| சுகாதாரம் | 6 |
| இயக்கப்பாடு | 5 |
| தொடர்பாடல் | 2 |
| நிதி அழுத்தம் | 15 |
| பதார்த்த துஷ்பிரயோகம் | 0 |
| பாதுகாப்பு | 0 |

15 உப-காட்டிகளுள் 5 இற்கு (உணவு-சக்தி உள்ளெடுப்பு, நீர், பிள்ளைகளின் கல்வி, பதார்த்த துஷ்பிரயோகம் மற்றும் பாதுகாப்பு) ஏறத்தாழ எல்லா குடும்பங்களும் (19 அல்லது 20) இழப்பு இல்லாத பிரிவினையே (புள்ளி அளவு 3) கொண்டிருந்தன (அட்டவணை 8). எனவே இவ்வைந்து உப காட்டிகளும் மொத்த இழப்பு சுட்டியின் கணிப்பிடலில் பயன்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்குமான மொத்த இழப்பு சுட்டி ஏனைய 10 உப காட்டிகளிற்கும் சம நிறை கொடுக்கப்பட்டு கணிக்கப்பட்டது. வெட்டுப்புள்ளி மட்டத்துடன் சுட்டியின் ஒப்பீடானது 20 குடும்பங்களுள் 6 (30 சதவீதம்) இழப்பு தகைமை எல்லையின் கீழ் அமைந்ததாக காணப்பட்டமையைக் காட்டியது. இது நோக்கோடு, வறுமைக் கோட்டிற்கு மேலான அல்லது அண்மையில் வாழும் குடும்பங்களாக தெரிவு செய்யப்பட்ட மாதிரியாதலால் கவனத்தில் கொள்ளப்பட்ட பரிமாணங்கள் தொடர்பாக குறைந்தது 30 சதவீதமானோர் இழந்துள்ளமையை சுட்டிக் காட்டுகின்றது. எனவே பல்பரிமாண சூழ்நிலையிலான வறுமையுள், வறுமை குறைத்து கணிப்பிடப்பட்டுள்ளமைக்கு தெளிவான அறிகுறி உண்டு.

#### 4.2.3. எண்ணும் முறையின் அடிப்படையில் வறுமை நிகழ்வு

எண்ணும் முறையில் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் ஒரு வெட்டுப்புள்ளி அமைக்கப்பட்டுள்ளதுடன் கருதப்பட்ட k பரிமாணங்கள் தொடர்பாக ஒரு குடும்பம் எவ்வாறு இழப்படைந்துள்ளது என்பதை சுட்டிக்காட்டும் ஒரு இரண்டாவது வெட்டுப்புள்ளி (k) உம் அமைக்கப்பட்டுள்ளது.

பரிமாணங்களுக்கு சமநிறை கொடுக்கப்படுமெனின் வெட்டுப்புள்ளி என்பது வறியோர் என கருதப்படுவதற்கு ஒரு குடும்பம் இழந்திருக்க வேண்டிய பரிமாணங்களின் எண்ணிக்கையாகும். பல்-பரிமாண சூழ்நிலையில் ஒரு குடும்பத்தை வறியவர்கள் என கருதப்படுவதற்கு அக்குடும்பம் இழந்திருக்க வேண்டிய பரிமாணங்களின் எண்ணிக்கையை தருகின்ற k எனும் வெட்டுப்புள்ளியை

அமைத்தோம். k இற்கு பல பெறுமானங்களை நாம் ஆராய்கின்றோம். இங்கே நாம் வறுமையின் 10 பரிமாணங்களை ஆராய்ந்து வறுமை நிகழ்வுக்கான k பெறுமானங்களை 1 இலிருந்து 10 வரையான வீச்சில் ஆராய்கின்றோம்.

**அட்டவணை 10: இழப்பின் பரிமாணங்களின் எண்ணிக்கையின் படி இழப்பினை அனுபவிக்கும் மாதிரி குடும்பங்களின் எண்ணிக்கை**

| இழப்புற்ற பரிமாணங்களின் எண்ணிக்கை (k) | இழப்புற்ற குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| எல்லாம் 10 | 0 |
| ஆக குறைந்தது 9 | 0 |
| ஆக குறைந்தது 8 | 0 |
| ஆக குறைந்தது 7 | 0 |
| ஆக குறைந்தது 6 | 1 |
| ஆக குறைந்தது 5 | 3 |
| ஆக குறைந்தது 4 | 5 |
| ஆக குறைந்தது 3 | 16 |
| ஆக குறைந்தது 2 | 19 |
| ஆக குறைந்தது 1 | 20 |

அட்டவணை 10, k=3 இலான ஒரு வெட்டுப்புள்ளி பரிமாணமாக இழப்புற்றதாக கருதப்படுகின்ற மாதிரி குடும்பங்கள் 16 உள்ளதாக காட்டுகின்றது. k=4 இலான ஒரு வெட்டுப்புள்ளி பல்-பரிமாணமாக இழப்புற்ற குடும்பமாக கருதப்பட 5 குடும்பங்களே உள்ளதாக காட்டுகின்றது. k இனது தெரிவு முற்று முழுதாக விடய நோக்கோடானதாகும். இம்மாதிரியில் k=4 இலுள்ள இயற்கையான பிளவினைக் கருதுகையில் 20 குடும்பங்களுள் 5 (20 சதவீதம்) இழப்படைந்தவை என முடிவு செய்யலாம்.

## 5. முடிவுரை




வறுமையின் எண்ணக்கருவினை விளங்குதல் மற்றும் வரைவிலக்கணம் என்பன வறுமையின் அளவினை அளவிடலில் நேரடி விளைவுகளைக் கொண்டுள்ளன. இலங்கையில் வறுமையினை அளவிட பல்வேறு அணுகுமுறைகளும் வரைவிலக்கணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் அடிப்படை அணுகுமுறை அதிகுறைந்த உணவு-சக்தி உள்ளெடுப்பு அல்லது அடிப்படை உணவு மற்றும் உணவற்ற தேவைகளிலான செலவு என்பவை தொடர்பாக வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள ஒரு தனி வறுமைக் கோட்டினை பயன்படுத்தி நுகர்வு வறுமையை அளப்பதாகும். உணவு-சக்தி முறையில் வறுமைக் கோடானது நுகர்வுச் செலவு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட உணவு-சக்தி தேவையினை சந்திக்க மட்டுமட்டாக போதுமான புள்ளியில் அமைக்கப்பட்டுள்ளது. அடிப்படை தேவைகளிலான செலவு முறையில், வறுமைக் கோடானது ஒரு கற்றை அடிப்படை உணவு மற்றும் உணவற்ற தேவைகளிற்கான செலவினை எதிர்கொள்ளப் போதுமான செலவு அமைந்துள்ள புள்ளியாகும்.

வறுமையின் நிதிசார் அணுகுமுறையிலான பல்வேறு கட்டுப்பாடுகள் இலக்கியங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன. அவை அடிப்படை உணவு மற்றும் உணவுத் தேவைகள் எவை மற்றும் தகைமை எல்லைகளில் நிபுனத்துவம் சார்ந்த தீர்மானத்தில் அது தங்கியுள்ளமை, ஒரு நிதிசார் அளவீடாக இருப்பதனால் அடிப்படை உணவு அல்லது உணவற்ற நுகர்வு தேவைகளிலான திருப்திக்கு உத்தரவாதமளிக்க முடியாமை, பல பரிமாணங்களில் போதியளவு இழப்பினை அளவிட முடியாமை, தனிநபர் சமூக, அரசியல் மற்றும் சமுதாய பல்வகைமையை வெளிக்காட்ட முடியாமை, நல்வாழ்விற்கு முக்கிய பங்களிப்பு செய்யும் அரச வளங்களை புறக்கணித்து தனியார் நுகர்வினை மாத்திரம் கவனத்தில் கொள்ளல் என்பவை உள்ளடங்குகின்றன.

மேற்கூறப்பட்ட கருத்துக்களுக்கு மேலதிகமாக ஒரு சில செயல்முறைப் பிரச்சினைகளும் குறிப்பிடப்பட்டன. இவ்வறுமைக் கோடுகள் பரந்தளவில் பிரிவு-மட்ட (நகர்ப்புற/கிராமிய) வறுமையைக் கணிப்பிட பயன்படுத்தப்படுகின்றன. இருந்தாலும் அவை தேசிய மட்ட வறுமையை அளவிட நிறுவப்பட்டவையாதலால் பிரிவுசார் நுகர்வு வித்தியாசங்கள் அல்லது விலை வித்தியாசங்களை கவனத்தில் கொள்வதில்லை. இது பிரிவு சார் வறுமையை அளப்பதில் அவற்றின் வினைத்திறனை எல்லைப்படுத்துகின்றது. மேலும் கொழும்பில் விலை மாற்றங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி ஏனைய புவியியல் பிரதேசங்கள் மற்றும் பிரிவுகளிலான வறுமையை அளப்பதற்கு காலத்துடன்-திருத்தப்பட்ட வறுமைக் கோட்டினை கணிப்பிடுவதற்கு பயன்படுத்துவதானது ஒரு பிரச்சினையாகும்.

நகர்ப்புற பிரிவில் மிகவும் குறைந்தளவு சக்தி உள்ளெடுக்கப்படலுக்கான சான்று மற்றும் நகர்ப்புற குடித்தொகையினர் தவறாக வகைப்படுத்தப்பட்டிருத்தலின் சாத்தியக்கூறு என்பவற்றுடன் நகர்ப்புற வறுமை குறைத்து கணிப்பிடப்பட்டிருக்கக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது. வறுமைக் கோடானது அதிகுறைந்த சக்தி உள்ளெடுப்பு மட்டத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதையும் விடுத்து, வெட்டுப்புள்ளி மட்டமானது ஒரு நிதிசார் திரட்சியான, செலவு மட்டமாகும். அவதானிக்கப்பட்ட நுகர்வுச் செலவு அதிகுறைந்த போசணைத் தேவையை திருப்திப்படுத்துவதற்கு உணவின் நுகர்வில் செலவழிக்கப்படுகின்றதா என்பது கேள்விக்குரியதாகும். பொதுவாக நகர்ப்புற பிரிவில் உணவற்ற நுகர்விலான செலவுகள் கூடுதலாகும். எனவே மொத்த செலவினில் ஒரு பெரிய சதவீதம் உணவற்ற

நுகர்விற்காக ஒதுக்கப்படுகின்றதெனலாம். இது கிராமியத் துறையுடன் ஒப்பிடும் போது நகர்ப்புறத்தில் காணப்படுகின்ற குறைந்த உணவு விகிதத்தில் பிரதிபலிக்கப்படுகின்றது.

நகர்ப்புற வறுமையின் அளவு அல்லது கணிக்கப்பட்ட தலைக்கணிப்புசார் சுட்டியானது நகர்ப்புற குடித்தொகையினரிலான வரைவிலக்கணத்தில் தீர்க்கமாக தங்கியிருக்கும். நகர்ப்புற குடித்தொகையின் அளவு நகர்ப்புறம் என்பது எவ்வெவ் இடங்கள் மற்றும் எந்தெந்த மக்கள் என்பவற்றை வரைவிலக்கணப்படுத்த பயன்படுத்தப்பட்ட வரைவிலக்கணம் அல்லது பிரமாணங்களில் தங்கியுள்ளது. இலக்கியங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவற்றின் படி நகர்ப்புற பிரிவானது தற்போதைய வரைவிலக்கணத்தின் கீழுள்ளதிலும் விட மிகவும் அதிகமாக இருக்கக்கூடும். இச்சாத்தியக் கூறானது நகர்ப்புற வறுமைக் கணிப்பீடுகளை பாதிக்கக்கூடியதாகவுள்ளது.

நகர்ப்புறத்திற்கான வரைவிலக்கணம் மற்றும் நகர்ப்புற வறுமையை மதிப்பிடுவதற்கு வறுமைக் கோட்டினது சாத்தியமான பொருத்தமின்மை எனும் எல்லைப்படுத்தல்கள், நகர்ப்புற வறுமை நிகழ்வுகள் குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் எனக் கூறுகின்றன. மேலும் இக்குறை மதிப்பிடலானது வறுமை ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் நோக்கப்படும் போது மிகவும் பெரிதாகும்.

வறுமைக்கான வரைவலக்கணத்தை இழப்பின் ஏனைய கூறுகளையும் உள்ளடக்குவதற்கு பரந்ததாக்குதலில் வளர்ந்து வரும் முக்கியத்துவத்துடன், நாடுகள் திருப்திப்படுத்தப்படாத அடிப்படைத் தேவைகளிலான காட்டிகளைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. இலக்கியங்களில் ஒரு பரந்த வீச்சிலான இழப்புக்கள் கலந்துரையாடப்பட்டாலும் பெருமளவு கவனமானது போசணை, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம், நீர் மற்றும் கழிப்பிட வசதிகளிலே உள்ளன. ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் வறியோரை இணங்காண்பதில் பொதுவாக செயற்படுத்தப்படுகின்ற பரந்த இரு முறைகள் இலக்கியங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இப்பின்னணிக்கு எதிராக, இவ்வாய்வானது நகர்ப்புற வறுமை எவ்வளவு குறைத்து மதிப்பிடப்பட்டு இருக்கலாம் என ஆராயவும், ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் நகர்ப்புற வறுமையைக் கணிப்பிடுவதற்கான செயன்முறைகளிற்கான விளைவுகளை ஆராயவும் நடத்தப்பட்டது. கணிப்பீட்டாய்வு நடந்த காலப்பகுதியில் (ஜுலை 2011) இருந்த வறுமைக் கோட்டிலும் மேல் இருந்த, நோக்கோடு தெரிவு செய்யப்பட்ட 20 மாதிரி குடும்பங்களின் அடிப்படையில் வருமானம், போசணை, தொழில், வயது வந்தோர் கல்வி, வீடமைப்பு (நிலவுரிமை, வாழ்வோர், வீட்டின் வகை, நிரந்தர, பகுதியளவு நிரந்தர, திடீரென ஏற்படுத்தப்பட்ட வீடமைப்பு, காற்றோட்டம்), கழிப்பிட வசதி, நீர், சக்தி (பாதுகாப்பான சமையல் மற்றும் ஒளியூட்டலிற்கு பெற்றுக்கொள்ளல்), பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம், இயக்கப்பாடு, தொடர்பாடல், நிதி நிலைமை (சேமிப்புகள், கடன்கள்), பதார்த்த துஷ்பிரயோகம் மற்றும் பாதுகாப்பு எனும் காட்டிகளைப் பயன்படுத்தி வறுமையின் பல பரிமாணங்களை ஆராய்ந்தோம்.

எமது மாதிரி இலங்கையில் அதிபெரிய நகர்ப்புற குடித்தொகையை கொண்டுள்ள மிகவும் குடித்தொகை கூடிய நிர்வாக மாவட்டமான கொழும்பினை மையமாக கொண்டதாகும். எமது கற்கை ஆய்வுத் தன்மையைக் கொண்டது என்பதால், நாம் பெருமளவு குடும்பங்கள் வறுமை கோட்டிற்கு மேலே ஆனால் கிட்டியதாக உள்ள ஒரு நோக்குடனேயே தெரிவு செய்யப்பட்ட மாதிரி குடும்பங்களை பயன்படுத்தினோம். நாம் ஒரு தனி-பரிமாண திரண்ட காட்டி மற்றும் ஒரு வறுமை தகைமை எல்லை அதேபோல் பிரிக்கப்பட்ட உப காட்டிகள் மற்றும் பல தகைமை எல்லைகளின் பிரயோகத்தினை ஆராய்ந்தோம். எமது மாதிரியின் அளவு மிகவும் எல்லைப்படுத்தப்பட்டதாக இருந்தமையால் பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற தலை கூறு பகுப்பாய்வு (PCA) உடன் காட்டிகள் புள்ளிவிபரவியல் ரீதியில் உருவாக்கப்படல் சாத்தியமாக இருக்கவில்லை. எனவே கூட்டு காட்டியானது கிடைக்கப் பெறக்கூடியதாகவுள்ள இலக்கியம் மற்றும் ஆராயாது சுதந்திரமாக தெரிவு செய்யப்பட்ட நிறைகளின் அடிப்படையில் ஒரு தன்னிச்சையான பாகுபாட்டினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது.

எமது கண்டுபிடிப்புக்கள் ஒரு தனி-பரிமாண கூட்டு சுட்டி மற்றும் தன்னிச்சையாக தெரிவு செய்யப்பட்ட தகைமை எல்லைகளின் அடிப்படையில் 20 குடும்பங்களில் ஆறு (30 சதவீதம்) தகைமை எல்லைக்கு கீழே அல்லது ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் வறியவர்களாக இருப்பதாக வெளிக்காட்டியது. மேலும் நாம் ஒவ்வொரு பரிமாணத்திற்கும் வெட்டுப்புள்ளிகள் அமைக்கப்பட்ட மற்றும் ஒரு அடையாளப்படுத்தல் பிரமாணம் அமைக்கப்பட்ட ஒரு செயன்முறையை ஆராய்கின்றோம். இது பல பரிமாணங்கள் தொடர்பாக ஒரு குடும்பம் எவ்வாறு பரந்தளவில் இழப்படைந்துள்ளது என்பதை ஆராய்கின்றோம். தன்னிச்சையாக தெரிவு செய்யப்பட்ட வெட்டுப்புள்ளியின் அடிப்படையில், இங்கு 4 பரிமாணங்களிலான ஒரு இயற்கைப் பிளவின் அடிப்படையில், நாம் 20 குடும்பங்களுள் ஐந்து (25 சதவீதம்), நான்கு

அல்லது அதற்கு மேற்பட்ட பரிமாணங்களில் இழந்துள்ளமையை அல்லது ஒரு பல்-பரிமாண சூழ்நிலையில் வறியவர்களாக இருப்பதை அவதானிக்கிறோம்.

இவ்வவதானங்கள், நுகர்வு வறுமையைப் பயன்படுத்தி குறைவாக-கணிப்பிடப்பட்டுள்ளதாக சாத்தியப்பாட்டினைக் கொண்டுள்ள நகர்ப்புற வறுமை மற்றும் நகர்ப்புற குடித்தொகை குறைவாக-இனங்காணப்பட்டுள்ளமையுடன் சேர்ந்து இலங்கையில் நகர்ப்புற வறுமை குறைவாக கணிப்பிடப்பட்டுள்ளமையை கணிசமானளவு சுட்டிக்காட்டுகின்றன. எமது கண்டுபிடிப்புக்கள் மாதிரியின் அளவு, பரிமாணங்கள் விடய நோக்கோடு தெரிவு செய்யப்பட்டமை, உப-காட்டிகளின் வடிவமைப்பு மற்றும் வறுமை தகைமை எல்லைகளின் தெரிவு என்பவற்றால் மட்டுப்படுத்தப்படுகின்றன. மேலும் இவ்வாய்வு நகர்ப்புற வறுமை குறைத்து மதிப்பிடப்பட்டிருக்கலாம் எனும் கருத்தை ஆதரிப்பதுடன், மேலும் பிரதிநிதித்துவப்படுத்தும் கற்கைகளில் தேவைப்படுகின்ற நுட்பங்களை சுட்டிக்காட்டுகின்றது.

# பின்னிணைப்பு

## IIED நகர்ப்புற வறுமை ஆய்வு

## குடும்ப வினாக்கொத்து

**இக்கணிப்பீட்டாய்வின் குறிக்கோளானது** அதிகாரபூர்வ வறுமைக்கோடு தொடர்பாக குடும்பத்தின் நிலைமையை மதிப்பிட எமக்கு உதவுகின்ற மற்றும் வறுமையின் பரந்த பரிமாணங்களில் இக்குடும்பங்களின் இழப்பின் மட்டத்தை பகுப்பாய்வு செய்வதற்கான அளவீடுகளை நிர்மாணிப்பதில் உதவுகின்ற ஒரு தரவுத் தொகுதியை உருவாக்குவதாகும்.

### கணக்கெடுப்பாளரிற்கான அறிவுறுத்தல்கள்:

- தயவு செய்து குடும்பத்தின் தலைவரை அல்லது அவரது வாழ்க்கைத் துணையை நேர்காணலிற்கு தெரிவு செய்க. அவர்கள் இருவரும் இல்லையெனில் அவர்களைச் சந்திப்பதற்குப் பொருத்தமான ஒரு நேரத்தை குறித்து எடுக்க.
- குடும்பத் தலைவர் மற்றும் வாழ்க்கைத் துணை இருவருமே தொழில் செய்வதில்லையெனில் தொழில் தொடர்பான கேள்விகளை குடும்பத்தில் பிரதான வருமானம் ஈட்டுபவரிடம் வினவுக.
- பதிலளிப்பாளர் எந்தவொரு வினாவிற்கேனும் விடையளிக்க விருப்பமிமையை காட்டுவாராயின், தயவு செய்து அவரிடம் விடையளிக்க விருப்பமில்லையா என கேட்க. அவர்கள் ‘ஆம்’ எனில் தயவு செய்து அவர்களிடம், “எமக்கு அதனைக் கூறியதற்கு நன்றி. தயவு செய்து இக்கேள்விக்கு விடையளிக்க. கஷ்டமாக உணர்வது ஏன் என ஒரு சுட்டும் குறிப்பினை தரமுடியுமா” என கேட்க.
- நாம் யார் மற்றும் நாம் என்ன செய்ய முயற்சிக்கின்றோம் என்பதை பின்வருமாறு அறிமுகப்படுத்துவதன் மூலம் நேர்காணலை ஆரம்பிக்குக.

இலங்கையில் அபிவிருத்தி செயற்பாடுகளிற்கு ஆய்வுகளிற்கான ஆதரவினை வழங்குகின்ற ஒரு இலங்கை அமைப்பான வறுமை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து (CEPA) நாம் வருகின்றோம். நாம் பாதை அபிவிருத்தி அதிர சபை (RDA), சமூர்த்தி, NWSDB, போன்ற பல்வேறு அரச முகவர் நிலையங்கள் அதே போல் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதிசார் முகவர் நிலையங்களுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

“நாம் தெமடகொட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குடும்பங்களின் நல்வாழ்வு மட்டத்தை ஆராய்வதற்கு ஒரு கணிப்பீட்டாய்வினை மேற்கொண்டுள்ளோம். இப்பிரதேசத்திலுள்ள 20-30 குடும்பங்களுடன் நாம் கதைக்கவுள்ளோம். எமக்கு உங்கள் நுகர்வுச் செலவுகள் மற்றும் அடிப்படை வாழ்வியல் நிலைமைகளைப் பற்றி அறிய வேண்டும்.

நீங்கள் இக்கணிப்பீட்டாய்வின் ஒரு பகுதியாக இருக்க உடன்பட்டால், நான் (நேர்காண்பவர்) உங்களிடம் செலவு பற்றிய பல வினாக்களை வினவுவேன். நாம் ஒரு கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடலினூடாக செல்வதால் , தயவு செய்து கேள்விகள் தெளிவற்றதாக அல்லது சந்தேகத்திற்குரியதாக இருப்பின், அதில் ஏதும் தெளிவுகள் தேவையெனில் தயவு செய்து எமக்கு தெரிவிக்கவும். எந்தவொரு கேள்விக்கேனும் பதிலளிக்க உங்களிற்கு விருப்பமில்லையெனில் தயவு செய்து எனக்கு தெரிவிக்கவும். அப்போது நாம் அடுத்த கேள்வியை தொடரலாம். நீங்கள் கூறும் எதுவும் மிகவும் இரகசியமாக பேணப்படும். இவ்வாய்வில் உங்கள் பங்களிப்பு முழுதும் உங்கள் விருப்பத்துடன் உள்ளது. எந்தவொரு விளைவுகளுமின்றி நீங்கள் எந்த நேரமும் வெளியேரலாம். நேர்காணல் ஒரு மணித்தியாலத்திலும் குறைவான நேரத்தையே எடுக்கும்.

ஆரம்பிக்க முன்னர், உங்களுக்கு வேறும் ஏதும் விளக்கங்கள் தேவையா? இல்லையெனில், நாம் தொடங்குவோம்.”

பகுதி 1: கட்டுப்பாட்டு தகவல்கள்

| B1 கணக்கெடுப்பாளர் தகவல்கள் | |
|---|---|
| (a) கணக்கெடுப்பாளர் குழு | |
| (b) நேர்காணல் திகதி | |
| (c) நேர்காணல் நேரம் | இலிருந்து:<br>வரை: |
| (d) குடும்பத்திற்கு விஜயம் செய்த தடவைகள் | |
| (e) நேர்காணலின் நிலை<br>1. பூரணப்படுத்தப்பட்டது<br>2. பிற்போடப்பட்டது<br>3. தகுதியான பதிலளிப்பாளர் வீட்டிலில்லை<br>4. மறுக்கப்பட்டமை<br>5. வீடு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது<br>6. வீடு இடிக்கப்பட்டு அல்லது காலியாக உள்ளது<br>7. ஏனையவை (குறிப்பிடுக) | |
| (f) மேற்பார்வையாளரிடம் கையளித்த திகதி | |
| (g) கணக்கெடுப்பாளரின் குறிப்புகள்: (தயவுசெய்து வீட்டை பற்றிய குறிப்புக்களை ( இடம், பொதுவான தோற்றம் மற்றும் வசதிகள்) , பதிலளிப்பாளர் / குடும்பம் (அவர்களது ஒத்துழைப்பு, தெளிவாக பேசுதல், பொதுவான தோற்றம், மற்றும் மனப்பாங்குகள்) மற்றும் கேள்விக்கொத்து நிர்வகிக்கப்பட்ட விதம் (உதாரணமாக பதிலளிப்பாளர் தனியாக இருந்தாரா என்பது போன்ற) வழங்குக. | |

## B2. தகவல்களை சுத்தி செய்தல்

| | |
|---|---|
| (h) தரவுகளை சுத்தப்படுத்தியவர்: | |
| (i) தரவுகளை சுத்தப்படுத்திய திகதி: | |
| (j) மேற்பார்வையாளர் பெயர்: | |
| (k) பரிசோதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது (பொருத்தமானதை வட்டமிடுக) | 1. பூரணப்படுத்தப்பட்டது<br>2. பூரணமில்லை<br>3. நிராகரிக்கப்பட்டது |
| (l) மேற்பார்வையாளரின் கையொப்பம் | திகதி |

| தொடரிலக்கம் | 1. பெயரும் குடும்ப தலைவருடனான உறவும்<br>குடும்பத் தலைவர்<br>வாழ்க்கைத்துணை<br>மகன்/மகள்<br>மகன்/மகளின் வாழ்க்கைத்துணை<br>பேரப்பிள்ளை<br>தகப்பன் / தாய்<br>சகோதரன் / சகோதரி<br>சகோதரன் / சகோதரியின் பிள்ளைகள்<br>வாழ்க்கைத் துணையின் பெற்றோர்<br>சகோதரர்களின் வாழ்க்கைத்துணை<br>ஏனைய உறவினர்<br>விடுதி விருந்தினர்<br>ஏனையவை குறிப்பிடுக) | | 2. வயது (வருடங்களில்) | 3. பால்<br>1. ஆண்<br>2. பெண் | 7. ஒவ்வொரு வயது வந்த குடும்ப உறுப்பினரும் (16 வயதிற்கு மேற்பட்ட) பாடசாலை சென்ற ஆண்டுகள் | 8. வீட்டுக்கு வெளியே வசிக்கும் குடும்ப உறுப்பினர்கள்<br>1.இலங்கையில்<br>2.வெளிநாட்டில் | 15. கடந்த நான்கு வாரங்களில் குறைந்தது சில மணித்தியாலங்களேனும் சம்பளம் பெறும் தொழிலில், உங்கள் சொந்த கணக்கிற்கு இலாபம் தரும் வேலையில் அல்லது ஒரு பொருளாதார செயற்பாடாக குடும்பத்திற்கு (தொழில் வழங்குநர் உட்பட) பங்களிப்பு செய்வதில் ஈடுபட்டீர்களா?<br>1. ஆம்<br>2. இல்லை<br>*கணக்கெடுப்பாளரிற்கான அறிவுறுத்தல்கள்:* இக்கேள்வி 10 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு குடும்ப உறுப்பினரிடமும் கேட்கப்படுவதை உறுதி செய்க. | 16. பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடவில்லையெனில் குடும்ப அங்கத்தவரின் பிரதான செயற்பாடு<br>தொழிலில்லை, ஆனால் தேடிக்கொண்டிருக்கின்றார்<br>தொழிலில்லை, தேடிக்கொண்டுமில்லை<br>வீட்டு வேலை<br>மாணவன்<br>ஓய்வு பெற்றுள்ளார் (முறைசார துறையிலிருந்து)<br>அங்கவீனமுற்றுள்ளார்<br>முதியவர்<br>ஏனையவை (குறிப்பிடுக) | 18 தொழில் செய்கிறார் எனில் உமது தொழிலின் நிலை என்ன?<br>கூலி வேலை<br>சம்பளம் பெறும் தொழிலாளி<br>சுய தொழில்<br>ஏனையவை<br>*கணக்கெடுப்பாளரிற்கான அறிவுறுத்தல்கள்:* இக்கேள்வி 8ஆம் கேள்விக்கு ஆம் என விடையளித்த ஒவ்வொரு குடும்ப உறுப்பினரிடமும் கேட்கப்படுவதை உறுதி செய்க. | 20 நீங்கள் நிரந்தர/ தற்காலிக/ நாளாந்த அளப்படையிலா தொழிலில் ஈடுபட்டுள்ளீர்கள்?<br>1. நிரந்தரம்<br>2. தற்காலிகம்<br>3. நாளாந்த வேலை | 21 உங்களுக்கு உங்கள் கூலி அல்லது சம்பளம் தரப்படுவது எப்போது?<br>1.முறையாக ஒவ்வொரு மாதமும்<br>2.நாளாந்த அடிப்படையில்<br>3.துண்டு வீதத்தில்<br>4.ஒப்பந்தம் | 22 கடைசி கொடுப்பனவு வழங்கப்பட்டதற்கேற்ப பெறப்பட்ட சம்பளம் அல்லது வருமானம் (ரூபா)<br>(முதல் மற்றும் துணையான வருமான முதல்களிலிருந்து)<br>குறிப்பான காலம்<br>மாதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | *பெயர* | | | | | | | | | | | |
| 1 | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | |

குடும்பத் தலைவரின் இனம்…………………………. (1. சிங்களம் 2. தமிழ் 3. முஸ்லிம் 4. ஏனையவை (குறிப்பிடுக)

**ஏனைய வருமான முதல்கள் (பணம் மாற்றல்கள் உட்பட)**

| முதல் | சராசரி மாதாந்த வருமானம் |
|---|---|
| | |
| | |

**6 - 16 வயதான சிறுவர்களின் கல்வி**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9/<br>6-16 வயது குழுவிலுள்ள யாரேனும் ஒரு பிள்ளை பாடசாலைக்கு சேர்க்கப்படாது உள்ளதா?<br>ஆம் 1<br>இல்லை 2 | | 10/<br>1. 6-16 வயதிற்கிடைப்பட்ட எல்லா குழந்தைகளும் சேர்க்கப்படவில்லை<br>2. 6-16 வயதிற்கிடைப்பட்ட சில குழந்தைகள் சேர்க்கப்படவில்லை<br>3. 6-16 வயதிற்கிடைப்பட்ட எல்லா பிள்ளைகளும் சேர்க்கப்படட்டுள்ளனர் | | 11/<br>பாடசாலைக்கு சிறுவர்களை சேர்க்காமைக்கான காரணங்கள் | 12/<br>6-16 வயது குழுவிலுள்ள யாரேனும் ஒரு பிள்ளை பாடசாலைக்கு சமுகமளிக்காது இருக்கின்றதா?<br>ஆம் 1<br>இல்லை 2 | | 13/<br>1. 6-16 வயதிற்கிடைப்பட்ட எல்லா குழந்தைகளும் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை<br>2. 6-16 வயதிற்கிடைப்பட்ட சில குழந்தைகள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை<br>3. 6-16 வயதிற்கிடைப்பட்ட எல்லா பிள்ளைகளும் பாடசாலைக்கு சமுகமளிககின்றனர் | | 14/ பாடசாலைக்கு சிறுவர்கள் சமுகமளிக்காமைக்கான காரணங்கள். |

23. குடும்ப உணவிலான செலவு (கடைசி மாதத்தின் சாதாரண ஒரு வாரத்தில் ஒரு வாரத்திற்கான உணவு நுகர்வு மற்றும் செலவு)

| பொருள் | அலகு | அளவு | செலவு ரூபா. | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| அரிசி | | | | |
| பாண் | | | | |
| பனிஸ்கள் | | | | |
| கோதுமை மா | | | | |
| கோதுமை மா அடிப்படையான உணவுகள் | | | | |
| ............................. | | | | |
| ............................. | | | | |
| தேங்காய் | | | | |
| பயறு | | | | |
| கௌபி | | | | |
| கடலை | | | | |
| ஏனையவை ........................ | | | | |
| பருப்பு | | | | |
| சோயா உற்பத்திகள் (TVP போன்றன) | | | | |
| கிழங்கு | | | | |

| பொருள் | அலகு | அளவு | செலவு ரூபா. | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| வற்றாலை | | | | |
| மரவள்ளி | | | | |
| காய்கறி (குறிப்பிடுக) | | | | |
| ............................ | | | | |
| ............................ | | | | |
| ........................... | | | | |
| ........................... | | | | |
| ............................. | | | | |
| ............................ | | | | |
| ............................ | | | | |
| ............................ | | | | |
| ........................... | | | | |
| ............................. | | | | |
| ............................ | | | | |
| பச்சை இலைகள் (குறிப்பிடுக) | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ............................ | | | | |
| ........................... | | | | |
| ........................... | | | | |
| பழங்கள் (குறிப்பிடுக) | | | | |
| .......................... | | | | |
| .......................... | | | | |
| .......................... | | | | |
| ............................ | | | | |

| பொருள் | அலகு | அளவு | செலவு ரூபா. | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| முட்டைகள் | | | | |
| புதிய மீன்கள் | | | | |
| கருவாடு | | | | |
| தகரத்திலடைக்கப்பட்ட மீன் | | | | |
| இறைச்சி (குறிப்பிடுக) | | | | |
| ........................... | | | | |
| ............................ | | | | |
| ............................ | | | | |
| தேங்காய் எண்ணெய் | | | | |
| இஞ்சி எண்ணெய் | | | | |
| ஏனைய எண்ணெய் | | | | |
| வெண்ணெய் | | | | |
| மாஜரின் | | | | |
| உலர் பால் மா | | | | |
| அடர்பால் | | | | |
| திரவ பால் | | | | |
| தேயிலை | | | | |
| சீனி | | | | |
| **பொருள்** | **அலகு** | **அளவு** | **செலவு ரூபா** | **குறிப்புகள்** |

**24. குடும்பத்தின் உணவற்ற செலவு (உணவற்ற பொருட்களிலான மாதாந்த செலவு)**

| பொருள் | செலவு ரூபா. | குறிப்புக்கள் |
|---|---|---|
| வீட்டு கூலி | | |
| மின்சாரம் | | |
| நீர் | | |
| வாயு | | |
| மண்ணெண்ணெய் | | |
| விறகு | | |
| பெற்றோல் | | |
| டீசல் | | |
| தொலைபேசி | | |
| போக்குவரம்து | | |
| சுகாதார சேவைகள் / மருந்துகள் | | |
| தனிநபர் கவனிக்கு தேவைகள் / சவர்க்காரம். பற்பசை போன்றன | | |
| **பொருள்** | **செலவு ரூபா.** | **குறிப்புக்கள்** |
| ஆடைகள் | | |
| பாதணிகள் | | |
| வீட்டு சில்லறை துணிமணி | | |
| கல்வியிலான செலவு உதாரணமாக பாடசாலை பொருட்கள், தனியார் வகுப்புக்கய் | | |
| ஏனைய நுகர்வு பொருட்ககள் | | |
| ................................ | | |
| ................................ | | |
| .............................. | | |
| .............................. | | |
| ................................. | | |
| ...................................... | | |
| .................................... | | |

**25. கடந்த வருடத்தில் வீட்டில் நிலைத்த பயன்படுத்தக்கூடிய பொருடகளிலான செலவு**

| பொருள் | அலகு | செலவு ரூபா |
|---|---|---|
| தளபாடம் | | |
| மின்னுபகரணங்கள் | | |
| விளையாட்டு/ இசை கருவிகள் | | |
| ஏனையவை ( குறிப்பிடுக) | | |
| ............................... | | |
| ................................. | | |
| ................................ | | |
| மொத்தம் | | |

**வீடமைப்பு**

| | |
|---|---|
| 26. நில உரிமை | |
| 3 சொந்தமானது/ நிர்மாணிக்கப்பட்டது/ குடியிருப்பாளர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டது/ பரம்பரையாக கிடைத்தது/ அன்பளிப்பாக கிடைக்கப்பெற்றது/ நட்ட ஈடு வழங்கப்பட்டது | |
| 2 கூலிக்கு/ குத்தகைக்கு/ கூலி இல்லை | |
| 1 ஆக்கிரமிக்கப்பட்டது<br>/ ஏனையவை (குறிப்பிடுக)................................................ | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27. இவ்வீட்டில் எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன? | 3 | ஒரு குடும்பம் | 2 | இரண்டு குடும்பங்கள் | 1 | மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் |

| | |
|---|---|
| 28. பதிலளிப்பாளர் எவ்வகையான ஒரு புகலிடத்தில் வாழ்கின்றார்? | |
| 3 தனியான பிரிக்கப்பட்ட வீடு/ தனியான இணைந்த வீடு (தொடர் மாடி)<br>2 இணைந்த வீடு/ பின்னிணைப்புகள்/ நிரை வீடு | |
| 1 சேரிகள்/ சிறு குடில்கள் / ஏனையவை......................................................... | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29. கூரைக்கு எவ்வகையான பதார்த்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது (அதிகம் காணக்கூடியதை பயன்படுத்துக)? | | 30. சுவரின் வகை என்ன (அதிகம் காணக்கூடியதை பயன்படுத்துக)? | | 31. என்ன வகையான தரை உள்ளது(அதிகம் காணக்கூடியதை பயன்படுத்துக)? | |
| 3 ஓடு/ கொன்கிறீட் | | 3 சீமெந்து பூசப்பட்டது/ செங்கல்/ சீமெந்து அச்சுக்கல்/ கல் | | 3 டைல்கள் / மெழுகப்பட்ட சீமெந்து | |
| 2 உலோக தாள்/ எஸ்பெஸ்டஸ் தாள் | | 2 பலகை/ உலோக தாள் | | 2 அழுத்தமற்ற சீமெந்து | |
| 1 கஜான்/ ஏனையவை (குறிப்பிடுக)........................... | | 1 சேறு/ கஜான்/ ஏனையவை (குறிப்பிடுக).............................. | | 1 மண் தரை / களி/ ஏனையவை (குறிப்பிடுக)........................ | |
| 32. வீட்டிலுள்ள அறைகளின் எண்ணிக்கை (பிரிக்கப்பட்ட பகுதிகளின் எண்ணிக்கை) ? | | 33. வீட்டில் வேறாக்கப்பட்ட தனியான சமையலறை உள்ளதா?<br>2 ஆம் 1 இல்லை | | 34. வீட்டிலுள்ள ஜன்னல்கள் மற்றும் கதவுகளின் எண்ணிக்கை? | |

**நீர்**

| | |
|---|---|
| 35. குடி நீரை பெற்றுக்கொள்ளும் பிரதான முதல் | |
| 3 வீட்டினுள்/ கட்டடத்தினுள் நீர்க்குழாய்கள் (பிரதான வழி) | |
| 2 கட்டடத்தினுள் பாதுகாக்கப்பட்ட கிணறு/ கட்டடத்திற்கு வெளியே பாதுகாக்கப்பட்ட கிணறு/ கட்டடத்திற்கு வெளியே நீர்க்குழாய்கள் (பிரதான வழி)/ குழாய் நீர் கிணறு | |
| 1 பாதுகாக்கப்படாத கிணறு அல்லது வேறு ( குறிப்பிடுக).................................... | |

| | |
|---|---|
| 36. குடிநீர் முதலுக்கான தூரம் | மீற்றர்கள் |
| கட்டடங்களுள் | |
| கட்டடங்களுக்கு வெளியே | |

**கழிப்பிட வசதி**

| | | | |
|---|---|---|---|
| 37. மலசலகூடங்களின் கிடைக்கற்றகவு<br>3 குடும்பத்திற்கு பிரத்தியேகமானது<br>2 ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்களுடன் பங்கிடப்படுகின்றது<br>1 மலசலகூட வசதியின்மையால் சுகாதாரமற்ற வழிகளை பயன்படுத்துகின்றனர் | | 38. நீங்கள் எவ்வகையான மலசலகூட வசதியை பயன்படுத்துகிறீர்கள்?<br>3 நீர் புகாது உறையிடப்பட்டது<br>2 மலசலகூட கழிவு குழி உள்ளது<br>1 ஏனையவை (குறிப்பிடுக) | |

**சக்தி**

| | | | |
|---|---|---|---|
| 39. ஒளியூட்டலிற்கான சக்தி (அதிகம் காணக்கூடியதை பயன்படுத்துக)?<br>3 பிரதான மின் இணைத்தொகுதியிலிருந்து மின்சாரம்<br>2 பிரதான மின் இணைத்தொகுதியிலிருந்தல்லாத மின்சாரம் / மின் உற்பத்தியாக்கியிலிருந்து/ சூரிய ஒளி<br>1 மண்ணெண்ணெய் அல்லது வேறு எரிபொருட்கள் (குறிப்பிடுக) | | 40. சமையலிற்கான சக்தி (அதிகம் காணக்கூடியதை பயன்படுத்துக)?<br>3 திரவ பெற்றோலிய வாயு/ மின்சாரம்<br>2 விறகு/ மண்ணெண்ணெய்<br>1 வேறு (குறிப்பிடுக) | |

**இயக்கப்பாடு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41. வாகனமொன்றின் கிடைக்கற்றகவு | | 42. வேலைத்தளத்திற்கு வழக்கமாக செல்லும் போக்குவரத்த முறை | | 43. வேலைத் தளத்தை அடைய எடுக்கும் நேரம் | |
| 1 ஒன்றுமில்லை | | 1 நடை | | 1 மூன்று மணித்தியாலங்களிலும் கூட | |
| 2 துவிச்சக்கர வண்டி | | 2 பொது போக்குவரத்து (புகையிரதம் / பேருந்து) | | 2 1-3 மணித்தியாலங்களிடையில் | |
| 3 மோட்டார் சைக்கிள்/ முச்சக்கர வண்டி/ மோட்டார் வண்டி அல்லது வேறு | | 3 தனியார் போக்குவரத்து (மோட்டார் வண்டி/ முச்சக்கர வண்டி/ துவிச்சக்கர வண்டி/ வேறு) | | 3 ஒரு மணித்தியாலத்திலும் குறைவு | |

**தொடர்பாடல்**

| | |
|---|---|
| 44. தொடர்பாடல் வசதிகள் | |
| 3 வீட்டில் தொலைபேசி மற்றும் / அல்லது கையடக்க தொலைபேசி, வானொலி மற்றும் / அல்லது தொலைக்காட்சி, இணையத்தள வசதிகள் | |
| 2 வீட்டில் தொலைபேசி மற்றும் / அல்லது கையடக்க தொலைபேசி, வானொலி மற்றும் / அல்லது தொலைக்காட்சி, | |
| 1 வீட்டில் தொலைபேசி மற்றும் / அல்லது கையடக்க தொலைபேசி, வானொலி மற்றும் / அல்லது தொலைக்காட்சி, இணையத்தள வசதிகள் இல்லை | |

**சேமிப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| 45. தேவைப்படும் போது பயன்படுத்துவதற்கு குடும்பத்திடம் எந்தவித சேமிப்பேனும் உள்ளதா?<br>ஆம் 1 இல்லை 2 | | 46. சேமிப்புகளின் வடிவம்<br>3 வங்கியில் அல்லது ஏனைய முறையான நிதி நிறுவனங்களுடன் சேமிப்பு<br>2 முறைசாரா கடன் குழு<br>1 ஒன்றுமில்லை | |

**கடன்கள**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 47. குடும்பம் ஏதும் நிதி சார் கடன்களுக்கு முகம் கொடுத்துள்ளதா?<br>(வங்கிகள் / நிதி கம்பனிகள் / தொழில் வழங்குநர் / பணம் இரவல் கொடுப்போர் / சில்லறை வியாபார தளங்கள் / அடைமானம் / கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்)<br><br>ஆம் 1 இல்லை 2 | | 48. கடன் பெற்றுக்கொண்ட முதல்<br><br>3 வங்கி அல்லது முறையான நிதிசார் நிறுவனம்<br>2 முறைசாரா கடன் குழு<br>1 ஏனையவை (குறிப்பிடுக)<br>............................... | | 49. எஞ்சியுள்ள கடன் அல்லது அடைமானத்தின் அளவு<br>..................... | 51. கடன் அல்லது அடைமானம் எடுத்ததற்கான காரணத்தை வர்ணிக்குக | | 52. வறுமையிலிருந்தும் வெளியே வருதல் தொடர்பாக கடனின் இருத்தலினை குடும்பத்தவர்கள் நோக்கும் விதம் | |

**சுகாதார பராமரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 53. கடந்த மூன்று வருடங்களில் குடும்ப அங்கத்தவர்கள் யாரேனும் நோய் வாய்ப்பட்டார்களா?<br><br>ஆம் 1 இல்லை 2 | | 54. குடும்ப உறுப்பினர் ஒருவர் நோய்வாய்ப்படலிற்கான உமது விடையை பின்வரும் எக்கூற்று நன்கு விளக்குகின்றது?<br><br>3 மருத்துவ பராமரிப்பினை பெற்றுக்கொள்வதில் எவ்வித பிரச்சினைக்கும் முகம் கொடுக்கவில்லை<br>2 பராமரிப்பு தொடர்பான செலவுகள் காரணமாக சில வேளைகளில் மருத்துவ பராமரிப்பினை பெற்றுக்கொள்ள முடியவில்லை<br>1 பராமரிப்பு தொடர்பான செலவுகள் காரணமாக எப்போதும் பராமரிப்பினை பெற்றுக்கொள்ள முடியவில்லை | |

**பதார்த்த துஷ்பிரயோகம்**

| | |
|---|---|
| 55. **பதார்த்த துஷ்பிரயோகத்தின் தன்மை**<br><br>3 குடும்பத்தில் யாரும் மது அல்லது போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டில்லை<br>2 குடும்பத்தில் சிலர் மது அல்லது போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளனரெனினும் இது குடும்ப வருமான ஓட்டத்தை அதிகம் பாதிக்கவில்லை<br>1 குடும்பத்தில் சிலர் மது அல்லது போதைப்பொருள் பாவனைக்கு அடிமைப்பட்டுள்ளதுடன் இது குடும்ப வருமானத்தை அதிகம் பாதிப்பதுடன் வறுமையிலிருந்தும் வெளியேறுவதை விட்டும் தடுக்கின்றது | |

**பாதுகாப்பு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 56. குடும்ப அங்கத்தவர் யாரேனும் போதைப் பொருள் வலையமைப்பு அல்லது குற்றச் செயற்பாடுகளைப் பற்றிய பயத்தில் வாழ்கின்றாரா?<br><br>ஆம் 1 இல்லை 2 | | 57. குடும்ப அங்கத்தவர் யாரேனும் பாதுகாப்பு, அரசியல் அல்லது வேறு காரணங்களிற்கான அச்சுறுத்தல்களுடன் வாழ்கின்றனரா?<br><br>ஆம் 1 இல்லை 2 | | 58. வீட்டினுள் / வெளியே பாதுகாப்பு பற்றிய உங்கள் நோக்கு என்ன?<br><br>3 முழுதும் பாதுகாப்பாக உணர்கின்றோம்<br><br>2 பாதுகாப்பில்லாததாக உணர்கின்றோம். ஆனால் இது எமது வருமானமீட்டும் வாய்ப்பபுக்களையோ அல்லது பிள்ளைகளின் கல்வியையோ பாதிப்பதில்லை<br><br>1 பாதுகாப்பில்லதாததாக உணர்கின்றோம் என்பதுடன் இது எமது வருமானமீட்டும் வாய்ப்புக்களையும் பிள்ளைகளின் கல்வியையும் பாதிக்கின்றது. | |

**நல்வாழ்வு பற்றிய நோக்கு**

59/ இவ்வெல்லா காரணிகளையும் கருத்தில் கொண்டு உங்கள் குடும்ப நல்வாழ்வு மட்டம் பற்றிய உங்கள் நோக்கு என்ன?

1 தாழ் மட்ட நல்வாழ்வு 2 மத்திய மட்ட நல்வாழ்வு 3 உயர் மட்ட நல்வாழ்வு

காரணங்கள் தருக

| |
|---|
| |

## REFERENCES


Alkire, S. and J. Foster (2007), *Counting and Multidimensional Poverty Measures*, Oxford Poverty & Human Development Initiative Working Paper Series 7, available from www.ophi.org.uk

Asian Development Bank (1985), *Poverty in the Philippines: Income, Assets and Access*, available from www.adb.org/documents/books/Poverty.../Poverty-in-the-Philippines.pdf

Asian Development Bank (2000), *Sri Lanka Urban Development Sector Study*, available from*www.adb.org/Documents/Sector/SRI.../Sri_Lanka_UrbanDevSector.pdf*

Balla, S. and P. Glewwe (1986), 'Growth and Equity in Developing Countries: A Reinterpretation of the Sri Lankan Experience', World Bank Economic Review 1, 35-65.

Central Bank of Sri Lanka (2010), *Annual Report 2010,* Colombo.

Chambers, R. (2006), *What is Poverty*?, in D. Ehrenpreis (ed.), *Poverty in Focus*, United Nations Development Programme, International Poverty Centre, Brazil.

Colombo District Secretariat (2011), District Statistics available from www.colombo.dist.gov.lk

Deaton, A., and J. Muellbauer (1980),'An Almost Ideal Demand System', *The American Economic Review*, Vol. 70, No. 3, 312-326.

Department of Census and Statistics (1987), *Labour Force and Socio Economic Survey 1985/1986 Report*, Colombo.

Department of Census and Statistics (1992), *Household Income and Expenditure Survey 1990/1991 Report*, Colombo.

Department of Census and Statistics (2001), *Demographic and Health Survey 2000 Report*, Colombo.

Department of Census and Statistics (2001), *Brief Analysis of Population and Housing Characteristics*, available from www.statistics.gov.lk

Department of Census and Statistics (2003), *Household Income and Expenditure Survey 2002 Report*, Colombo.

Department of Census and Statistics (2004), *Official Poverty Line Report*, available from www.statistics.gov.lk

Department of Census and Statistics (2005a), *Poverty Statistics by DS Divisions* available from www.statistics.gov.lk

Department of Census and Statistics (2005b), *Selected Millennium Development Goals Indicators*, available from www.statistics.gov.lk

Department of Census and Statistics (2007).*Classification of GN Divisions by selected unsatisfied basic needs: An Exploratory Study*, Colombo.

Department of Census and Statistics (2008a), *Household Income and Expenditure Survey 2006/2007 Report*, Colombo.

Department of Census and Statistics (2008b), *Demographic and Health Survey 2006/2007 Report*, Colombo.

Department of Census and Statistics (2011a), *Household Income and Expenditure Survey 2009/2010 Final Report*, Colombo.

Department of Census and Statistics (2011b), *Household Income and Expenditure Survey 2009/2010 Preliminary Report*, Colombo.

Department of Census and Statistics (2011c), *Poverty indicators based on Household Income and Expenditure Survey 2009/2010*, available from www.statistics.gov.lk

Department of Census and Statistics (2011d), *Fourth Quarter Report of the Sri Lanka Labour Force Survey 2010,* available from www.statistics.gov.lk

DFID/UNDP/UN-HABITAT/UMP Urban Poverty Reduction Project (2002), 'Poverty Profile City of Colombo: Urban Poverty Reduction through Community Empowerment', Colombo.

Edirisinghe, N. (1999), *Poverty in Sri Lanka: Its extent, distribution and characteristics of the poor*, World Bank - Sri Lanka Employment and Poverty Alleviation Project. World Bank, Washington DC.

Glewwe, P. (1985), 'The Distribution of Welfare in Cote d'Ivoir in 1985', World Bank Working Paper No. 29, Washington D.C.

Gunaratne, L. (1985), *Present Status of Knowledge on Poverty, Income Distribution and Welfare in Sri Lanka: A statistical Review,* Mimeo, Colombo.

Gunathillake, N., A. Abdul Cader and M. Fernando (2004), *Understanding the Dimensions and Dynamics of Poverty in Underserved Settlements in Colombo*, Centre for Poverty Analysis Working Paper Series No.3, Colombo.

Gunawardane, D. (1999),*Urban Poverty in South Asia, What do we know? And what do we need to know?,* Paper presented at the Regional Dialogue and Consultation on World Development Report 2001 for South Asia, Bangladesh.

Gunawardane, D. (2000), *Consumption Poverty in Sri Lanka, 1985-1996*. Paper written for the Policy Framework for Poverty Alleviation in Sri Lanka, Colombo.

Gunawardane, D. (2004), *Poverty Measurement: Meaning, Methods and Requirements*, Centre for Poverty Analysis, Study Series No. 1, Colombo.

Gunawardane, D. (2005), *Improving poverty measurement in Sri Lanka*, Centre for Poverty Analysis, Working Paper Series No. 9, Colombo.

Indrasiri, L. H. (2006), *Urbanization and Urban Redefinition-Sri Lanka 2005*, Urban Development Authority, Colombo available from www.uda.lk

Klasen, S. (2000), 'Measuring Poverty and Deprivation in South Africa', *Review of Income and Wealth*, 46: 33.58.

Ministry of Education (2011), Information available from www.moe.gov.lk.

Nanayakkara, A.G.W. (1994). 'An Analysis of Poverty in Sri Lanka', *Sri Lanka Journal of Social Sciences,* 17 (1 and 2), pp 49-78.

Nanayakkara, A.G.W and H.A.G. Premaratne (1987),'Food Consumption and Nutritional Levels', in R.B.M. Korale (ed.) *Income distribution and poverty in Sri Lanka*, Department of Census and Statistics, Colombo.

Ravallion, M. (1998), *Poverty Lines in Theory and Practice*, Living Standards Measurement Series Working Paper No.133, World Bank, Washington DC.

Satterthwait, D. (2004), *The Under-Estimation of Urban Poverty in Low and Middle Income Nations*, International Institute for Environment and Development, Poverty Reduction in Urban Areas Series Working Paper 14.

Satterthwait, D. (2010),*Urban Myths and the Misuse of Data that Underpin Them,* United Nations University-World Institute of Development Economic Research, Working Paper No. 2010/28 available from www.wider.unu.edu

Sen, A. (1985), *Commodities and Capabilities,* Amsterdam, North Holland.

Sen, A. (1987), 'The Standards of Living Lecture II in Lives and Capabilities', in G. Hawthorn (ed.)*The Standard of Living*, Cambridge University Press, Cambridge.

Sen, A. (1999), *Development as Freedom,* New York, Anchor.

Siddhisena, K.A.P. and M.D.R.K. Jayathilake (2003), *Identification of the Poor in Sri Lanka: Development of Composite Indicator and Regional Poverty Lines,* Institute of Policy Studies, Colombo

Silva, K.T. (2001), *Poverty and Social Exclusion in Sri Lanka,* In proceedings of the Second Annual Symposium on Poverty Reduction in Sri Lanka, Colombo

UN Habitat (2009), 'Defining Indicators to Measure Housing in Sri Lanka' Habitat, Colombo.

United States Agency for International Development (1990), *Urban Sector Study Sri Lanka*, Colombo.

Visaria, P. (1979), *The incidence of absolute poverty in Sri Lanka 1969-1970*, World Bank Staff Working Paper, Washington DC.

Vidyaratne, S. and K.G.Thilakeratne (2003), *Sectoral and Provincial Poverty Lines for Sri Lanka*, Department of Census and Statistics, Colombo.



வளர்ந்து வரும் நாடுகளில் வறுமையானது பொதுவாக உணவுப் பொருட்களிற்கானசெலவுமற்றும் உணவுப் பொருட்களில் அல்லாத செலவு தொடர்பாகவுமே அளவிடப் படுகின்றன. உணவுப் பொருட்களில் அல்லாத செலவானது, உணவுப் பொருட்களிற்கான செலவினை நிவர்த்தி செய்துகொள்ளப் போதிய நிலையிலுள்ள குடும்பங்கள் உணவு தொடர்பான தேவைகளில் அல்லாது எவற்றில் செலவழிக்கின்றன என்பதன் அடிப்படையில் கொள்ளப்படுகின்றன. நகர்ப்புற பிரதேசங்களில் உணவல்லாத தேவைக-ளிலான செலவு கூடுதலாக இருக்கக் காணப்படுவதன் காரணமாக மேற்கூறப்பட்ட முறையானது நகர்ப்புற பிரதேசங்களிலான வறுமையை குறைத்து காட்டுவதாக அறிக்கைகள் காட்டுகின்றன. இந்த வகையில் இவ்வாய்வு பல்வேறு பரிமாணங்களை பயன்படுத்தி நகர்ப்புற பிரதேசங்களிலான வறுமை அளவீட்டினை ஆராய்கின்றது.

The Asia Foundation

9 789551 040635

cepa
centre for poverty analysis
29, Gregory's Road, Colombo 7, Sri Lanka
T. +94 (011) 4690200, 2676 955-8
F. +94 (011) 2676 959
E. info@cepa.lk
www.cepa.lk